மூளாய் வதிரன்புலோ

# சித்தி விநாயகர் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான
ஆதி மூலவர்



" சித்தி விநாயகர் கருணை மகத்தானது "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான
## எழுந்தருளி விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

மூளாய் வதிரன்புலோ

# சித்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் 2016



## பாலஸ்தாபன தினம்

மன்மத வருஷம் ஆவணி மாதம் 5ஆம் நாள் (21.08.2015) வெள்ளிக்கிழமை

## மஹா கும்பாபிஷேக தினம்

துர்முகி வருஷம் ஆவணி மாதம் 26ஆம் நாள் (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை

## மண்டலாபிஷேக தினம் (45 நாட்கள்)

11.09.2016 (ஞாயிற்றுக்கிழமை) - 25.10. 2016 (செவ்வாய்க்கிழமை)

## மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகம்

25.10.2016 செவ்வாய்க்கிழமை

வெளியீடு : மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியீடு**
மூளாய் வதிரன்புலோ
சித்தி விநாயகர் தேவஸ்தான
பரிபாலன சபை

**பதிப்பாசிரியர்**
மலர்க்குழு

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**
xxii + 116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

**மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான**

**புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ**

**பெருஞ்சாந்தி பெருவிழா, மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு**

**ஆசியுரை, நல்லாசிகள், வாழ்த்துரை, கட்டுரைகளால் பொழிந்து,**

**அடியார்கள் எல்லாம் பக்தி பரவசப்படும் வகையில்,**

**ஞான மணம் கமழ வெளியிடப்படும், இம் மலரினை**

**எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமானின்**

**கமலத் திருவடிகளில் சமர்ப்பணமாக்குகின்றோம்.**

மூளாய்
**25.10.2016**

பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

மூளாய் வதிரன்புலோ

## சித்தி விநாயகர் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக மலர் 2016

## மலர் தொகுப்பாசிரியர்

**திரு. கனகரத்தினம் செல்வராசா J.P**

(இளைப்பாறிய பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

தலைவர், பரிபாலனசபை

## உதவி தொகுப்பாசிரியர்கள்

**திரு. விஸ்வநாதன் தனலிங்கம்**

(இளைப்பாறிய அதிபர், கல்வித் திணைக்களம்)

உப செயலாளர், பரிபாலனசபை

**திரு. கார்த்திகேசு பார்த்தீபன்**

(கணினி தொழில்நுட்பவியலாளர்)

உப தலைவர், பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவ குண்டபக்ஷ பெருஞ்சாந்தி பெருவிழா 2016.09.11

**குருமார் விபரம்**

பிரதிஷ்டா பிரதம குரு

"சிவாகம சிரோன்மணி"

**பிரம்மஸ்ரீ வரத. கேதீஸ்வர சிவாச்சாரியார்**

(ஈசான சிவாச்சாரியார், பரம்பரா குரு, கல்வியங்காடு, வீரபத்திரர் தேவஸ்தானம்)

**சர்வ போதகாச்சாரியார்கள்**

சிவஞான பாஸ்கரன்

**பிரம்மஸ்ரீ தாணு. மகாதேவ சிவாச்சாரியார்**

(அதிபர், இணுவில் தர்ம சாஸ்தா குருகுலம் காயத்ரி பீடம்)

**விஷ்ணுஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தக்குருக்கள்**

(பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய பிரதம குரு)

**சர்வ சாதகாச்சாரியார்கள்**

பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார் (தாவடி)

பிரம்மஸ்ரீ மகாதேவ ஸ்ரீ வஸ்த்தாங்க குருக்கள் (இணுவில்)

பிரம்மஸ்ரீ கு. சிவபாலசர்மா (இணுவில்)

பிரம்மஸ்ரீ சிவபால கௌரிசங்கரசர்மா (இணுவில்)

**நவகுண்ட சிவாச்சாரியார்கள்**

பிரம்மஸ்ரீ தியாகராஜ உமாசுதக்குருக்கள் (மானிப்பாய்)

பிரம்மஸ்ரீ பொன் வரதராஜக்குருக்கள் (கல்வியங்காடு)

பிரம்மஸ்ரீ நாகேந்திர திவாகரக்குருக்கள் (தாவடி)

பிரம்மஸ்ரீ நாகேந்திர குகனேசக்குருக்கள் (சுன்னாகம்)

பிரம்மஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் (இணுவில்)

பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சோமகலாதரக்குருக்கள் (ஊரெழு)

பிரம்மஸ்ரீ இ. சுதர்சனக்குருக்கள் (சுதுமலை)

பிரம்மஸ்ரீ வி. கஜேந்திரக்குருக்கள் (அச்சுவேலி)

பிரம்மஸ்ரீ ச. குமாரக்குருக்கள் (சங்கானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாக சம்ரட்சகர்கள்**

பிரம்மஸ்ரீ கு. பார்த்தீபன்சர்மா (தாவடி)

பிரம்மஸ்ரீ ச. கணநாதசர்மா (கொழும்புத்துறை)

பிரம்மஸ்ரீ கெ. மாதவசர்மா (யாழ்ப்பாணம்)

பிரம்மஸ்ரீ வ. பிறேமதீபசர்மா (யாழ்ப்பாணம்)

பிரம்மஸ்ரீ இ. கரீந்திரசர்மா (யாழ்ப்பாணம்)

பிரம்மஸ்ரீ ந. சபேசசர்மா (சுழிபுரம்)

**பாக சாலை**

**பிரம்மஸ்ரீ சு. முருகானந்தசர்மா** (யாழ்ப்பாணம்)

**தேவஸ்தான பிரதம குருவும் நெறியாள்கையும்**

**பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா** (வதிரன்புலோ தேவஸ்தானம், மூளாய்)

**அருளாசியுரை**


**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யஸ்வாமிகள்**
(நல்லை ஆதீனம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
# ஆலய பூசகர்கள் பரம்பரை விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


01. **ஆசிச்செய்தி** - பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா xi

02. **ஆசிச்செய்தி** - பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக்குருக்கள் xii

03. **ஆசியுரை** - சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் xiii

04. **இறைவா நாம் மகிழ்வுற வேண்டும்** - மூளாயூர் தியாக உமாசுதக் குருக்கள் xiv

05. **அருளாசிச்செய்தி** - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் xv

06. **வாழ்த்துச்செய்தி** - ஆ. ஏகாம்பரநாதன் xvi

07. பதிப்புரை சமர்ப்பணம் xvii

08. ஆலயமும் ஆன்மீகத் திருப்பணியும் xviii

09. செயலாளர் அறிக்கை xix - xx

10. பொருளாளர் உள்ளத்திலிருந்து... xxi

11. மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம் பரிபாலன சபை - 2015/ 2016 xxii

12. மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான தல வரலாறு 1 - 6

13. மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம் பற்றிய பதிவுகள் 7

14. தெய்வங்கள் துதித்த விநாயகர் 8 - 9

15. விநாயகர் பெருமை 10 - 11

16. ஆலய வழிபாடும் அதன் தத்துவமும் 12 - 15

17. ஆலயங்களின் அற்புதங்கள் 16 - 20

18. பிள்ளையார் திருவுருவ விளக்கம் 21

19. பிள்ளையார் திருவுருவம் 22 - 24

20. விநாயகர் 25 - 26

21. பஞ்சமுக விநாயகர் 27 - 28

22. விநாயகப் பெருமானின் திருக்கரங்களில் உள்ள பொருட்கள் 29 - 33

23. பிள்ளையார் சுழி 34 - 38

24. கணபதி வழிபாடு 39 - 41

25. ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும் 42

26. குட்டிக்கொள்ளல் 43

27. தோப்புக்கரணம் 44

28. விநாயகர் விரதங்கள் 45 - 48

29. தூர்க் குணத்தை விடுத்து நற்குணத்தை நா வழி காட்டும் விநாயகர் சதுர்த்தி விரதம் 49 - 50

30. ஆலயமும், பிரார்த்தனையும், மனிதப் பிறவியில் உயர் நோக்கங்களை நிறைவு செய்கின்றன 51 - 55




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஆலயத் திருப்பணியின் மகத்துவம் 56 - 59

32. ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்தப்படுவது எதற்காக? 60 - 61

33. கும்பாபிஷேக முகூர்த்தங்களின் முக்கிய வகிபாகம் 62 - 63

34. மஹா கும்பாபிஷேக கிரியா விளக்கம் 64 - 70

35. சிவாகம நெறியில் சிறந்து விளங்கும் கும்பாபிஷேகமும் மண்டாலபிஷேகமும் 71 - 74

36. கும்பாபிஷேகமும் மண்டாலபிஷேகமும் 75 - 78

37. கும்பாபிஷேக காலத்தில் நாம் அனுசரிக்க வேண்டிய ஒழுங்குகள் 79 - 80

38. ஆலய வழிபாட்டில் செய்வனவும் செய்யத் தகாதனவும் 81 - 83

39. இறைவனின் உறைவிடங்கள் 84 - 87

40. விநாயகர் தோத்திரங்கள் 88 - 90

41. விநாயகர் புராண வசனம் 91

42. விநாயகர் அகவல் 92 - 93

43. விநாயகர் கவசம் 94 - 95

44. மூளாயூர் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சி 96 - 98


45. எங்கள் குல தெய்வம் 99

46. மூளாயூர் வதிரன்புலோ சித்தி விநாயக தேவஸ்தானம் பற்றிய தகவல்கள் 100 - 102

47. மூளாயூர் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானத்திற்குப்
பொதுமக்களினால் தர்மசாசனம் செய்யப்பட்ட வயல்நிலங்கள் மேட்டு நிலங்கள்
ஆலய தேவைக்கு தர்மசாசனம் செய்யப்பட்டவை. 103 - 104

49. மூளாய் வதிரன்புலோ ஆலயத்தில் அங்கீகரிக்கப்பட்ட உபயகாரர் 105 - 113

50. நன்றி நவிலல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமானின் கும்பாபிஷேக சிறப்பையொட்டி தேவஸ்தான

அர்ச்சகர் பிரம்மஸ்ரீ. சி. ஜெ ஜெயனந்தசர்மா அவர்களின்

# ஆசிச்செய்தி



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விக்னேஸ்வராய நமஹா

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பலவன் ஞானகுரு வாணி பதம் நாடு"

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுடைய திருப்பொற்பாத கமலங்களைப் பணிந்து கொண்டு இறைவனுடைய கும்பாபிஷேகமானது இறைவனுடைய திருவருளினாலே சிறப்பாக நிறைவேறியுள்ளது. பாலஸ்தாபனமாகி மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் கும்பாபிஷேக வைபவமானது நிறைவேறியிருப்பது இறைவனுடைய தனிப்பெருங் கருணையினைக் காட்டுகின்றது.

ஆலயம் என்பது ஆன்மா லயக்கும் இடமாகும். ஆன்மாக்கள் அனைத்தும் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களினாலே ஆட்கொள்ளப்பட்டவை ஆகும். இந்த மும்மலங்களோடு அசுத்தாத்மாக்களாக இருக்கின்ற ஆத்மாக்கள் ஆலயத்தின் கண்ணே வரும்போது இராஜகோபுர தரிசனத்தினாலே ஆணவமலம் பலியிடப்பட்டு உள்ளே சென்றவுடன் பலிபீடத்தில் கன்மமலம் இல்லாதொழிக்கப்பட்டு பசு என்னும் மாயை விலகி பதி என்னும் மூலஸ்தான இறைவனுடைய பாதத்தை அடைகின்றன. ஆலயத்திற்கு செல்வதன் மூலம் ஆன்மாக்களுடைய மலங்கள் அழிக்கப்படுகின்றன. இதை முன்வைத்துத்தான் "கோயிலில்லாத ஊரில் குடியிருத்தல் வேண்டாம்" என்று எமது முன்னோர்கள் இயம்பினார்கள். அதேபோல் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்கிற்கிணங்க எல்லோரும் ஆலயத்திற்குச் சென்று இறை வழிபாடு ஆற்றி ஆன்ம ஈடேற்றத்தை பெற்றுய்ய வேண்டும் என்று இறையருள் கொண்டு ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்த சர்மா**
**பிரதம அர்ச்சகர்,**
மூளாய் வதிரன்புலோ சித்தி,
விநாயகர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா பிரதம குரு சிவாகம சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள்

# ஆசிச்செய்தி



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விக்னேஸ்வராய நமஹா

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானுடைய திருப்பொற்பாத கமலங்களை வணங்கிக் கொண்டு, இறைவனுடைய திருவருளாலும் மேன்மைகொள் கருணையினாலும் இறைவனுடைய மஹா கும்பாபிஷேகத்தை செய்து வைக்கக்கூடிய பிரதான ஆசார்யராக கிரியா கடமை நெறியை செவ்வனே இயம்புவதற்கும் அருள்புரிந்த பெருவள்ளலுக்கு, நம் நயமாய் மந்தர விலாச நன்றிகள்.

இந்தப் பெருவிழாவிலே இறைவனுடைய ஸ்தூலலிங்கத்தையும் இராஜகோபுர ஸ்தூல லிங்கத்தையும் மூலாலயத்தில் கருவாய், உயிராய், கதியாய், விதியாய் அமர்ந்து பரிபாலிக்கும் சூக்குமலிங்க விநாயகக் கடவுளையும் என் இருகைகளாலும் குடமுழுக்காட்டும் வைபவப் பெரும்பேறை தந்த எனது மாமனாருடைய அன்பு உள்ளத்தை பண்பால் வருடி ஆனந்தக் கண்ணீர் சொரிந்திட்டு வேழமுகம் விக்னங்களை நீக்குகின்ற கருணை முகம் நாமங்களிலே முக்கியமான ஒரு திருநாமம் "தூமஹேதவே நமஹ" என்னும் திருநாமம். இந்த நாமத்தை ஆதி சங்கரரிடம் அவருடைய சிஷ்யன் நேர்மொழிப்பெயர்ப்பாக "தூம என்றால் புகை, ஹேது என்றால் கொடி "புகைக்கொடி" என்று அர்த்தப்படுகிறது. "புகைக்கொடி" என்பது "வால்நட்சத்திரம்" என அர்த்தப்படுகிறது. எனவே குருவே வால்நட்சத்திரம் என்பது தோன்றினால் உலகம் அழியப்போகிறது என்பது சாஸ்திர நியதி ஆகும். மங்கலமூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கு வால்நட்சத்திரம் "தூமஹேது" என்னும் திருநாமத்தை ஏன் வைத்தார்கள்? என சங்கரருடைய சிஷ்யன் கேட்டார். அதற்கு சங்கராச்சார்யர், "தூமஹேது" என்பது வால்நட்சத்திரம் எனப் பொருள்பட்டாலும் அக்கினியில் இருந்து எழும்புகின்ற புகையானது மங்கலம் என அனுமானிக்கப்படுகின்றது. விக்னங்களைத் தீர்க்கும் விநாயகரும் நெருப்பைப் போன்றவர் என்று அவருடைய காதுகள் கொடியைப் போன்றன என்றும், அவருடைய துதிக்கை புகை போன்றது எனவும் கொள்ளப்படுவதனால் விநாயகப் பெருமானுக்கு மட்டுமே சிறப்பாக பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டது" என்று திருவாய் மொழி அருளினார்.

தேவ உருவம், மனிஷ உருவம், மிருக உருவம் உள்ளடக்கிய ஒரு பேருருவம் பிரணவ உருவமாய் சமைக்கப்பட்டது. எனவே அத்தன்மைகள் கொண்ட முதல் வணக்கத்திற்குரிய இறைவனை வணங்கி எல்லோரும் அருள்பெற ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்


அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

**சிவாகம சிரோன்மணி**
**பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக்குருக்கள்**
**கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார்**
[B.com (Hons) HNDA, MA (PIS)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி பீட தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவாகம ஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை



மூளாய் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் தர்மவள்ளல்களின் பெருநிதி கொண்டு திருப்பணி நிறைவு பெற்று மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியிருக்கிறது. முகூர்த்தங்களிலேயே உத்தம முகூர்த்தமாக கணிக்கப்படுகின்ற பிரம்ம முகூர்த்தத்தில்(சூரியோதய வேளையில்) இக்கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்ற காட்சி நம் கண்முன்னே நிற்கிறது. மஹா கும்பாபிஷேகத்தின் முக்கிய நோக்கம் கர்ப்பகிரகங்கள் இருக்கும் சில மூர்த்திகளின் திருவருட்சத்தியை சான்னித்தியப்படுத்துவதாகும். இதற்கு பூர்வாங்க கிரியைகளாக பல சாந்திகள் நடைபெற்று யாகத்தில் கும்பத்தில் விநாயகப்பெருமானை எழுந்தருளச் செய்து சிவாச்சாரியார்களால் மந்திரம் , கிரியை பாவனைகள் மூலம் கும்பத்தில் சக்தியை வருவித்து கர்ப்பகிரகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திரு உருவங்களில் அபிஷேகம் செய்து மூர்த்தி சான்னித்யம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இனி பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து விநாயகப் பெருமானை வணங்கி இஷ்ட காம்யார்த்த சித்திகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாலய நித்திய பூஜை சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா அவர்கள் விநாகப்பெருமானிடம் தீவிர பக்தி கொண்டவர்.

சிரத்தையோடு ஆலய நித்திய பூஜாகைங்கர்யங்களை நடாத்தி வருவது அவரது சிறப்பு மஹா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்த பிரதான சிவாச்சாரியார் சிவஸ்ரீ வரத கேதீஸ்வரக் குருக்கள் சிவ பக்தி ,குருபக்தி மிக்கவர். பல ஆலயங்களில் பிரதம குருவாக கடமையாற்றியிருக்கிறார். கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட ஏனைய சிவாச்சாரியர்களும் சாதகர்களும் அனுபவம் மிக்கவர். எல்லோரும் இக்கும்பாபிஷேகத்தின் பயனாக நலமெலாம் கிடைக்க விநாயகரை பிரார்த்திக்கின்றேன். ஆலயத்தை சேர்ந்த அடியார்கள் எல்லோருக்கும் விநாயகரின் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்

**'சிவாகம ஞான பாஸ்கரன்'**
**சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள்**
**காயத்ரீ தர்மசாஸ்தா குருகுல அதிபர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவா நாம் மகிழ்வுற வேண்டும்...



புல்லாய், பூதராய், மிருகமாய், மனிதராய், தேவராய், தெய்வமாய், விரிந்த உலகின் மூலமே... பிள்ளையார்தான், என்பதன் சாட்சியே.. அவரது திருவுருவம்.

எல்லாம் அவனே... எதிலும் அவனே... என்பதனால் எக்காரியமும் அவனே... ஆதலினால் எதை தொடங்கிலும் அரவிந்தம் தொட்டு தொடருவது மரபாயிற்று. எதற்காக எம்மை பூமியில் சேர்த்தானோ.. அதற்கான காரியத்தை அவனே உள்நின்று நடத்துகின்றான்.

"ஆயிரம்.. ஆயிரம்.. திருநாமங்கள் படைத்த ஸ்ரீ வதிரன்புலோ சித்திவிநாயகா... உன்னருளால் தம் திருவடியில் தலைமுறை தவழ்ந்து ...மகிழ்ந்து...இருந்து... விட்டோம். பதி நீயாய்...மன எலி நாமாய்...வாழ்ந்து விட்டோம். தாம் ஏறிய மனம் என்பதால்...மகிமை பெற்று, தம் பணியே... எம்பணி என்றுற்று, ஊரே ஒன்று கூடி திரட்டிய பெருநிதியால், திருக்குட முழுக்கும் முடித்துவிட்டு, பிரசாதத்துக்காய் பிரார்த்திக்கின்றோம்.

"இறைவா... நீதந்த இவ்வாழ்வில்... இப்பணியில்... என்ன என்ன உயர்வுண்டோ...அதுகண்டு நாம் மகிழ்வுற வேண்டும். அவ்வருளை தாரும் ஐயா...!

ஆம்... ஆம்...மகிழ்வில் உன்வதனம் அசைவது தெரிகிறது, புரிகிறது..., உள்மனம் உணருகிறது...

நன்றி ஐயா...நன்றி...

இப் பெரும் சாந்தியினால்... மனச் சாந்தியே அனைவருக்கும் பொதுவாகட்டும்...

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

**"ஓம் நமசிவாய"**

**மூளாயூர் தியாக உமாசுத குருக்கள்,**
(BA. Hons. M.A)
(சைவ சித்தாந்தம்)
நைமித்திய குரு– ஈழத்துச் சிதம்பரம்– காரைநகர்,
பிரதம குரு– சந்திர சேகரவாரிவனநாதர் ஆலயம் – சாவகச்சேரி,
ஸ்ரீ ஹரிகா புத்திர ஐயனார் ஆலயம்,
மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்
ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொலைபேசி: 021 222 2870

# அருளாசிச்செய்தி



விநாயகர் அடியார்களுக்கு!

மூளாய் வதிரன்புலோ பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின் நினைவாக்கும் பொருட்டு மலர் வெளியிடுவது பெருமன மகிழ்ச்சியை தருகின்றது. பல சிறப்புக்களை கொண்ட இப் பிரதேசம் நீண்ட பல ஆலயங்களை வரலாறாகக் கொண்டுள்ளது. முருகனும், பிள்ளையாரும் தனித்தனி ஆலயங்களாகக் கொண்ட சிறப்பையும் உடையது. இங்கு நடைபெற்ற மகாகும்பாபிஷேகம் ஊருக்கும், ஆலயத்துக்கம் பல சிறப்புக்களை தந்துள்ளது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாகும்பாபிஷேகம் ஒரு வரலாற்றுச் செய்தியாகும். பல கட்டுமாணப் பணிகளைக் கொண்டு இவ்வாலயம் வளர்ச்சியடைந்திருப்பது மன மகிழ்ச்சியை தருகின்றது. ஆலய வழிபாடு சிறப்பாக நடைபெற்று மனிதனது ஆன்மீக வாழ்வு சிறக்க அனைவரும் பிரார்த்திப்போமாக

**“என்றும் வேண்டும் இன்ப அன்பு”**

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

"வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமான் அடியார்களே"

யாழ்ப்பாணத்தில் மேற்குத்திசையில் நிலவளமும், நீர்வளமும் நிறைந்த வலிகாமம் மேற்கில் மூளாய் கிராமத்தில் "வதிரன்புலோ" என்னும் புண்ணிய பூமியில் ஞான ஒளி வீசிக் கொண்டிருக்கும் தொன்மையும் பெருமையும் உடையது சித்தி விநாயகர் ஆலயம் ஆகும். ஆனை முகன் ஆலயத்திற்கு அருகில் அரவணைத்திருப்பது "ஆறுமுகன்" ஆலயம் ஆகும்.

"வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தின் இம் மஹா கும்பாபிஷேகம் துர்முகி வருடம், ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் (11.09.2016) நிகழ்ந்தது. உள்ளூர், வெளிநாடுகள் என எங்கும் வாழும் பக்தர்களிடமும் அன்பர்களிடமும் நிதி சேர்த்து சகலரினதும் பெரு நிதிப் பங்களிப்புடன் புனர்நிர்மாணப் பணி இனிதே நிறைவடைந்தது. இந் நிகழ்வின் சிறப்பியல்பு வர்ணப்பூச்சு அலங்காரத்தில் ஆலயம் மிளிர்வதே.

நான் நிர்வாக சபை உறுப்பினர், ஆயுட்கால அங்கத்தவர் என்ற பக்குவ நிலையில் இருந்து "நிதி நிறைந்தவர் நிறையத் தாரீர்" என்று கேட்டு உள்ளூர் அடியவர்களிடம் நிதி சேகரித்து கொடுத்து எனது பங்களிப்பைச் செய்தேன்.

இப் பணியை இனிதே நிறைவேற்றிய நிர்வாக சபை பொதுச்சபை மற்றும் கிராம அடியவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**ஆ. ஏகாம்பரநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை சமர்ப்பணம்



"அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்றார் மணிவாசகர். அவனது கைங்கரியங்களை செய்பவர்களுக்குக் கூட அவனருள் அவசியமானதே - இவ்வகையில் எமக்கு கிட்டியுள்ள பேரருளை நினைத்து பெருமை கொள்கின்றோம். சித்தி விநாயகர் திருப்பணி காரியங்கள் யாவும் நாம் நினைத்தது போன்று நடந்ததில்லை. நினைத்ததை விட பலமடங்கு சிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. இது எம்மவர்கள் அனுபவத்தில் கண்ட பேருண்மை.

"கும்பாபிஷேக மலர் விடயமும் அத்தகையதே" சித்தி விநாயகப் பெருமானின் திருவருளால் இந்தக் கும்பாபிஷேக மலரை வெளியிடும் வாய்ப்பு 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2 ஆவது முறையாக 2016 ஆம் ஆண்டு நடைபெறக் கிடைத்திருக்கின்றது.

"சித்தி விநாயகரின் பெருமையே பெருமை"

இவ்வாண்டு ஆவணி 26 ஆம் நாள் 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை யாவரும் வியக்கும் வண்ணம் புனராவர்த்தன, அஷ்டபந்தன, நவகுண்ட பக்ஷ, பெருஞ்சாந்தி பெருவிழா - மஹா கும்பாபிஷேகம் மங்கலகரமாக நடந்ததை அடியார்கள் கண்டும், கேட்டும், போற்றத்தக்க நிலையில் எம்மனத்தை எல்லாம் மையப்படுத்தி விட்டது. வேத மந்திரக்கிரிகைகள், திருமுறைப்பாராயணம், அடியார்களின் தெய்வீக முழக்கங்களில் மெய் சிலிர்க்கும் தன்மையும் நாதஸ்வர, தவில் கலைஞர்களின் மங்கல இசை சிறப்பாக அமைந்தது போற்றுதற்கரியது.

மஹா கும்பாபிஷேக விழாவினை நேரில் கண்டு தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்காத பக்தர்கள் அனைவரும் பயனடையுமாறு முக்கிய படநிகழ்வுகளை, புனரமைப்பு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை விநாயகரின் தத்துவங்கள் சிறப்புக்கள், சமயக்கருத்துக்கள் போன்ற பல அறிஞர்களின் கட்டுரைகள், தலவரலாறு, ஆலய சம்பந்தமான தகவல்கள் எம் எதிர்காலச் சந்ததியினரும் அறிய வேண்டிய அவசியம் ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்தை உணர்ந்து உருவாக்கப்பட்ட இம்மலரை எம்பெருமான் பேரால் தங்கள் முன்வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இப் பெருங்கைங்கரியம் இனிதே நிறைவேற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

உலகெங்கிலும் எல்லாம் வல்ல சித்தி விநாயகரின் அருளால் மேலும் மேலும் துன்பங்கள் நீங்கி, இன்பம் பெருக, மக்கள் வாழ்வு சிறக்க மனதார வணங்கி, இம்மலரை எம் பெருமான் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"


மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தானம்
மூளாய்,
25.10.2016

**க. செல்வராசா**
**தொகுப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் ஆன்மீகத் திருப்பணியும்



இந்த அகில லோகத்தில் எத்தனை எத்தனை பிறவியுள் மானிடப் பிறவி எடுத்த ஆன்மாக் களுக்கு இறைவனுடைய அனுக்கிரகத்தைத் தரவல்லது ஆலயமாகும். ஆ - என்றால் ஆன்மா, லயம் என்றால் வசப்படுதல் எனவே ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் எனப்படும். ஆலயமும் எமது சரீரத்தைப் போலவே அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே அப்படிப்பட்ட ஆலயம் காலத் துக்குக் காலம் ஆகம விதிகளுக்கேற்ப திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய பொலிவுடன் பேணவும் சிறப்பிப்பதும் நாம் இப்பிறவியில் செய்யவேண்டிய தலையாய கடமையாகும்.

இந்தவகையில் 1991 ஆம் ஆண்டில் தக்கார் ஆகவும் தொடர்ந்து 2000 ஆண்டு வரை செயலாளராகவும், திருப்பணிகளையும், புனர் அமைப்புகளையும் செய்விக்க முடிந்ததும், தொடர்ந்து செயலாளராகவும், தலைவராகவும் கடமையாற்றி காலத்துக்குக் காலம் ஆலயத்தில் செய்விக்க வேண்டிய திருப்பணிகளை பொதுமக்கள் சித்தி விநாயகர் அடியார்கள் துணையுடன் 2016 வரை செய்விக்க முடிந்ததும் "சித்தி விநாயகரின் கருணையே கருணை".

ஆலயங்களில் 12 வருடத்திற்கு ஒருமுறை புனரமைப்பு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற வேண்டியது ஆகம விதியாகும். கடந்த காலத்தில் ஆலயத்தில் ஏற்பட்ட பாரிய கொள்ளைச் சம்பவம் 'நிஷா' போன்ற புயலினால் ஏற்பட்ட இடர் போன்ற இச்சம்பவங்களினால் ஆலயம் தன் தன்சோபையையும், மூர்த்திகரத்தையும் இழந்தமை காலத்தால் ஏற்பட்ட சோதனைகளாகும்.

பின் ஆலயத்துக்கு அவசியமென கருதப்பட்ட சிறு சிறு புனரமைப்புக்களைச் செய்த போதிலும் முழுமையான பூரணப்படுத்தப்பட்ட திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகம் நடாத்த எண்ணிய எண்ணம், எம் பெருமான் 2015 ஆம் ஆண்டு தான் பாலஸ்தாபனம் செய்ய திருவருள் பாலித்தார். ஒரு வருட காலத்தில் ஆலயத்தில் பாரிய திருப்பணிகள் நடைபெற்று பல ஆண்டு காலமாய், எல்லோருடைய மனத்திலும் கனவாய் கற்பனையாக மேலோங்கி நின்ற "வில்லு மண்டபம்" உருவாக்கப்பட்டதும் புதிய வசந்த மண்டபம் புதிய மணிக்கூட்டு கோபுரம் திருப்பணி நிறைவுபெற்று 11.09.2016 நிறைவேறியதும் "சித்தி விநாயகரின் மகிமையே மகிமை".

இத்தகைய மகிமையாலேயே நாம் முன்னெடுத்த கற்பனைக்கும் ஆசைக்கும் உரிய திருப்பணி சித்தி விநாயகரின் கருணையால் முடியும் என்ற நம்பிக்கைக்கும் ஏற்ப ஒத்துழைத்து, நிதி உதவிய உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளில் செறிந்து வாழும் அடியார்களுக்கும், கும்பாபிஷேக கிரியைகளை ஆகம மரபுக்கேற்ப வழி நடாத்திய வேதவிற்பன்னர் சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் என் நன்றிகளையும், நல் வாழ்த்தையும் கூறி சித்தி விநாயகரின் கருணை கிடைக்க வணங்கி நிற்கின்றேன்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

**க. செல்வராசா**

**தலைவர்**

**பரிபாலன சபை**

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் அறிக்கை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



யாழ்குடா நாட்டில் மேற்குத் திசையில் மருதமும், நெய்தலும் அருகிருப்ப நீர்வளமும், நில வளமும் செறிந்த வலிகாமம் மேற்குப் பகுதியில் மூ ளாயம்பதியில் வதிரன்புலோ என்னும் புண்ணிய பூமியில் இரு கண்களாக விளங்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி ஆலயம் அண்ணனும் தம்பியுமாக இணைந்திருந்து அருள் பாலித்துக் கொண்டி ருப்பது சிறப்பானதொரு அம்சமாகும்

மூளாய், வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் எனது தந்தையாரால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொண்டுகள் அனைத்தினையும் அவரைப் பின்பற்றி அவரின் வழிகாட்டலுக்கு அமைய தொண்டாற்றி ஆலயத்தின் மீது அக்கறை உள்ள அடியவனாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளை ஆலய பரிபாலன சபை செயலாளராக இருந்து பணியாற்றுவதற்கு அடியேனுக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்த எம்பெருமான் விநாயகப் பெரு மானுக்கும் பொதுச்சபை அங்கத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இவ்வறிக்கை மூலம் வெளிப்படுத்திக் கொள்கின்றேன்.

இவ்வாலயத்தில் 1905, 1945, 1974, 2000 ஆண்டுகளில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் 21.08.2016அன்று சித்தி விநாயகப் பெருமானுக்கு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. தொடர்ந்து ஆலயத் திருப்பணிகளின் வரிசையில் புதிய வசந்த மண்டபம், புதிய மணிக்கூட்டுக் கோபுரம், புதிதாக முன் மண்டபம் அமைக்கப்பட்டது. ஏனைய திருப்பணிகள் வரிசையில் ஆதி மூலத்தூபி, கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், தரிசன மண்டபம், மகா மண்டபம், வைரவர் கோவில், இராஜகோபுரம், மணிக்கூட்டுக் கோபுரம், திருநீர்த் தடாகம், திருமறை மண்டபம், வாகனசாலை, ஆலய உட் சுற்றுப்புறத் தூண்கள், சுவர்கள் ஆகியன திருத்தம் செய்யப்பட்டு வர்ணம் தீட்டும் வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. இத்தோடு ஆலய மின்சாரம் சம்பந்தமான மின் விளக்குகள் அனைத்தும் புதிதாக புதிய முறையில் அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாலஸ்தாபனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து மிகவும் குறுகிய காலத்தில் திருப்பணிகள் அனைத்தும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு 11.09.2016 இல் மஹா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பான முறையில் அடியவர்களின் மன விருப்பத்திற்கு அமைவாக நடைபெற்றுள்ளது. இவை அனைத்திற்கும் விநாயகப் பெருமான் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையும் பக்தி யுமே காரணமாகும். இப்பேற்பட்ட ஓர் பெரிய வேலைத் திட்டத்தினை வெகுவிரைவில் நிறை வேற்றுவதற்கு மூளாய் கிராம மக்களும் வெளிநாடுகளில், கொழும்பில் வாழ்கின்ற மக்களினதும் அயல் கிராம மக்களினதும், அன்பர்கள், அடியவர்கள் அனைவரின் நிதியுதவி, பொருள் உதவி மனமுவந்து வாரி வழங்கியுள்ளனர். இதன் பயனாகக் குறுகிய காலத்தில் எம்பெருமானுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு கட்டடக் கலைஞர்கள், வர்ணப்பூச்சுக் கலைஞர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல மூளாய் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் அளப்பரும் கருணையும் திருவருளும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

**சி. ஜேந்திரகுமார்**
**செயலாளர்**
மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர்
தேவஸ்தானம் மூளாய்
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் உள்ளத்திலிருந்து...



ஈழவள நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களில் வலிகாமம் மேற்குப் பகுதியில் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமானின் நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இதற்கு

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நிர்வாகசபையை தெரிவு செய்து ஒவ்வொரு அடியவரும் தங்களாலான பங்களிப்பை பல்வேறு வழிகளில் வழங்கியுள்ளனர்.

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின் சிறப்பு என்னவென்றால் தனக்கு எவர்களால் எப்படியான திருப்பணிகளைச் செய்ய முடியுமோ அவர்களின் மனதில் புகுந்து தனக்கு வேண்டிய திருப்பணிகளை மிகச் சிறப்பாக செய்ய வைத்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் வசந்த மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், முன் மண்டபம், என்பவற்றை புது மெருகுடனும், ஏனைய வேலைகளையும் மிகத்துரிதமாகச் செய்வதற்கு நிதி, பொருள், சரீர உதவிகள் புரிந்த மூளாயில் வாழ்கின்ற மக்களுக்கும், வெளிநாட்டில் வாழ்கின்ற மக்களுக்கும் அயல்கிராம மக்களுக்கும் எல்லாம் வல்ல வதிரன்புலோ சித்தி விநாயகரின் பேரருள் வேண்டி, நன்றி கூறுகிறேன்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

**தி. முருகதாஸ்**
**பொருளாளர்**
பரிபாலன சபை
மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
# பரிபாலன சபை - 2015/ 2016

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | திரு. க. செல்வராசா |
| **செயலாளர்** | : | திரு. சி. ஜேந்திரகுமார் |
| **பொருளாளர்** | : | திரு. தி. முருகதாஸ் |
| **உப தலைவர்கள்** | : | திரு. கா. பார்த்தீபன் |
| | | திரு. அ. ரங்கடம்பநாதன் |
| **உப செயலாளர்** | : | திரு. வி. தனலிங்கம் |

**நிர்வாகசபை உறுப்பினர்கள் :**

திரு. க. பாலச்சந்திரன்
திரு. நா. ஸ்ரீகணேசன்
திரு. ஆ. ஏகம்பரநாதன்
திரு. ஜெ. கதிர்காமநாதன்
திரு. மு. முத்துக்குமாரசூரியர்
திரு. ச. அரவிந்தன்
திரு. சோ. விபுலன்
திரு. சி. யனார்த்தனன்
திரு. சி. ஜெனர்த்தன்
திரு. பு. லதுசன்
திரு. நா. பிள்ளையார்
திரு. வே. சச்சிதானந்தன்

**கௌரவ எண் பார்வையாளர் :**

திரு. மு. கதிர்காமத்தம்பி
திரு. இ. பார்த்தீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை



**க.செல்வராசா**
தலைவர்



**சி.ஜேந்திரகுமார்**
செயலாளர்



**தி.முருகதாஸ்**
பொருளாளர்



**வி.தனலிங்கம்**
உப செயலாளர்



**க.பார்த்தீபன்**
உப தலைவர்



**அ. றங்கடம்பநாதன்**
உப தலைவர்

## நிர்வாக சபை உறுப்பினர்கள்



**க.பாலச்சந்திரன்**



**ஆ.ஏகாம்பரநாதன்**



**சோ.விபுலன்**



**நா. ஸ்ரீகணேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெ.கதிர்காமநாதன்



ச.அரவிந்தன்



சி.யனர்த்தனன்



பு.லதுசன்



சி.ஜனர்த்தன்



நா.பிள்ளையார்



மு.முத்துக்குமாரசூரியர்



வே.சச்சிதானந்தன்

## எண் பார்வையாளர்கள்



மு.கதிர்காமத்தம்பி



இ.பார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான தல வரலாறு



ஈழத்திருநாட்டின் வடமுனையில் மகுடம் போன்று விளங்கும் யாழ் குடாநாட்டில், சீரும், சிறப்பும் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் மேற்குப் பகுதியில், தானமும் சமயச் சீலமும் பெருமைதரு நிறைவும் பக்தியும் பொலிந்து காணும் மூளாயம்பதி வதிரன்புலோ என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி, புராதன வரலாற்றுப் பெருமை மிக்கதும் துதிப்போர்க்குத் துன்பம் போக்கி காத்தருள் பொழியும் அமுதக்கடலாகக் கோயில் கொண்டு மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஞான அருள்ஒளி பாலித்துவரும் சித்திவிநாயகப் பெருமான் காலத்தினால் அழியாத வரலாற்று பெருமை மிக்க தல வரலாற்றைக் கொண்ட ஆலயமாகும்.

இம் முத்திதரு சித்திவிநாயகர் புராண ரீதியிலும் கர்ண பரம்பரைப் பேச்சு வழக்கிலும் சரித்திர சான்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிக்குரிய நாயகனாக அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

எம் முன்னோர்களின் புராண ரீதியான கர்ண பரம்பரைப் பேச்சு சான்றுகளின்படி 1710 ஆம் ஆண்டு பண்டாரபிள்ளை என்பவர் செங்காரபிள்ளை என்பவரின் "வதிரன்புலோ" என்னும் வயல் காணியை உழும்போது, கலப்பையின் கொழு, ஒரு கல்லில் தட்டுப்பட இரத்தம் பீறிட கலப்பையை எடுத்துப்பார்த்தபோது எம் பெருமான் "சித்தி விநாயகர்" சிலை வெளிப்பட்டு காட்சி கொடுத்தார். அதன் ஆதாரமாக இன்னும் இச்சிலையில் கொழுப்பட்ட இடத்தில் காயம் இருந்து சான்று பகிர்கின்றது. (இச்சிலை யாரால் கொண்டு வந்து, எப்படி வதிரன்புலோ என்னும் புண்ணிய பூமியில் புதைக்கப்பட்டது. என்றும் இந்நிகழ்வு எந்த அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என்பதற்கு கதைகளைக் கூறி வருகின்ற போதிலும் என்னால் கடந்த 1967 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டமும் - மட்டக்களப்பு மாவட்டமும் இணையும் வெருகல் ஆற்றுக்கு அண்மித்ததும் மூன்று பக்கமும் இந்து சமுத்திர ஆழ்கடலினால் சூழப்பட்டதும், ஒரு முக ஆற்றினால் மறைக்கப்பட்ட "மலைமுத்தல்" என்னும் "முக்கிரியாவா வேடர்" கிராமத்தில் தலைமை சமய பெரியோரின் குகை ஆச்சிரமக்கோயிலில் காணப்பட்டதும், அதில் சில சாரம்சங்களை அவரினால் எனக்குக் கூறப்பட்ட "கடலோட்டு" என்னும் பரிசுத்த நூலைக் கண்டும், களித்தும் உள்ளதன் தன்மையால், பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஒல்லாந்தர்ஆட்சிக் காலத்தில் எப்படி ஏழு பிரகாரங்களுடன் அழகுறக் காட்சி அளித்தது என்றும், பின்னர் போர்த்துக்கேயர் சைவசமயப் பேரழிவுகளை உண்டாக்கினர் என்றும் அறியக்கூடியதாக இருந்தது.

இதன் அடிப்படையில் சரித்திர சான்றுகளின்படி "மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின்" ஆராய்ச்சிக்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றலை ஓரளவு தெளிவுபெற கொடுத்து வைத்தமைக்காக சித்திவிநாயகப் பெருமானுக்கு எமது சமர்ப்பணம்.

கி. பி16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கையின் சில கரையோரப்பகுதிகளை கைப்பற்றி நேரடி ஆட்சி செய்தனர். வேறு சில பகுதிகளை அப்பிரதேச அரசர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்த அடிப்படையின் பேரில் கப்பம் கொடுக்கவும், கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கும் ஒப்புக்கொண்டதன் பேரில் சுய இராச்சியங்கள் செயற்பட்டன. இந்நிலையில் 1615 ஆம் ஆண்டு எதிர்மன்னசிங்கம் என்னும் மன்னன் இறக்க, யாழ்ப்பாண இராச்சியத்தில் ஒரு குழப்பமான நிலையைப் பயன்படுத்தி, சங்கிலி மன்னன் தற்காலிகமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆதிக்கத்தைப் பெற்றிருந்தான். முன்னைய அரசர்கள் ஒப்புக்கொண்ட பிரகாரம், சங்கிலி மன்னன் நடக்கத்தவறியமைக்காக, அவனைத்தண்டிக்க போர்த்துக்கேயத் தளபதியான கொன்ஸ்தந்தையின் டி பிறகன்சா என்பவன், டி ஒலிவேரா என்பவன் தலைமையில் ஓர் படையை அனுப்பி ஊர்காவற்றுறையில் படையிறக்கி, சங்கிலி மன்னனை கைது செய்ய எத்தனித்த போது அவர் இந்தியாவுக்குத் தப்பியோட எத்தனித்த வேளை கைதுசெய்யப்பட்டு, பின்னர் கோவாவுக்கு அனுப்பப்பட்டு அங்கு கொலை செய்யப்பட்டார். இவ் அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்தி **1621 ஆம் ஆண்டு டி – ஒலிவேரா யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான். அன்றே யாழ்ப்பாண இராச்சியம் தன் சுதந்திரத்தை இழந்தது.**

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய போர்த்துக்கேயர், சைவக்கோயில்களை இடித்து, சைவவழிபாடு செய்வதனைத் தடுத்து, கத்தோலிக்க சமயத்தை வளர்த்தனர். இதற்கு கீழ்ப்படியாத மக்களைக் கைதுசெய்து, அவர்களைக் கொண்டே சைவக் கோயில்களில் இடித்தகற்களைக் கொண்டு தம்மைப் பாதுகாக்க கோட்டைகளையும் கிறிஸ்தவ ஆலயங்களையும் கட்டுவித்தனர். இந்நிலையிற்றான் ஏழு பிரகாரங்களைக் கொண்ட பொன்னாலைதிருத்தலஐந்து பிரகார மதில்கள் இடிக்கப்பட்டன. பொன்னாலைத் திருத்தலத்திற்கு வலதுபுறமாக அமைந்த ஏழாம் பிரகாரத்தில் இருந்ததும் பொன்னாலை - காரைநகர் (பாலம் இன்று அமைந்துள்ள) பிரதேசத்திற்கு அண்மித்ததுமானதும், முன்னர் பெருங்கடலும் சிறுகடலேரிகளும் கலக்கும் பொன்னாலைத் துறைமுக இடத்திற்கு அண்மையில் அமைந்திருந்ததும், ஈழவளநாடு எங்கும் புராதன சைவ ஆலயங்களை அமைத்தவனுமான 'குளக்கோட்டன் சோமஸ்கன்' என்னும் மன்னனினால் அமைத்துருப்பெற்றதுமான சித்தி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டது. இடிக்கப்பட்ட கற்களுடன் கற்களாக கை மாற்று பொருள் தூக்கிய முறை மூலம் கைதிகளினால் கைவிலங்கிடப்பட்ட நிலையில் சித்தி விநாயகர் சிலையும் "புலோ" என்று கூறப்படும் வெற்று பயனற்ற பற்றைக்காணிகள் ஊடாக எடுத்துச் செல்லும் போது பத்தி நிறை பக்தர் ஒருவரின் கையில் இச்சிலை அடைந்தபோது, அப்பக்தி நிறைபக்தர் ஞானத்தின் மிகுதியால் அதை அவ்வெற்றுப் புலோவில் அமைந்த பள்ளமான பகுதியில், அன்னியரின் கண்ணில் காணாமல் போட்டு உருத்தெரியாமல் புதைத்துள்ளார், என்பதும் சான்று. அத்துடன் அல்லாமல் அக்கைதிகள் நீர் அருந்துவதற்கு அமைக்கப்பட்ட "துரவு" என்று சொல்லப்படும் சிறிய கேணி போன்ற பொக்குணை இவ்வாலய தென்பகுதியில் சான்று பகிர்ந்து கொண்டிருக்கின்றது. ஒல்லாந்தரின் 'டச்' வீதி என்று இவை குறிப்பிடப்பட்டாலும், இவ்வீதி ஊடாக பொன்னாலை ஆலய ஐந்து வெளிப்பிரகாரங்களிலும் உடைக்கப்பட்ட கற்கள் சங்கானை கோட்டை கட்ட இவ்வீதி ஊடாக எடுத்துச்செல்லப்பட்டதற்கு போதிய சான்று உண்டு. மூளாய் வதிரன்புலோவில் அமைந்துள்ள துரவு போன்று பல துரவுகள் பொன்னாலை, பறட்டியவத்தை, மூளாய், பத்தானை, முங்கோடை, பிளவத்தை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம் உருவாகிய விதமும் அதன் முன்னைய தோற்றமும்




01. கி.பி. 1621ஆம் ஆண்டு போர்த்துக்கேயத் தளபதி டி. ஒலிவேரா தலைமையில் பொன்னாலை ஆலய 7 ஆம் பிரகார மதில் உடைக்கப்பட்ட போது.
02. சங்கானைக் கோட்டை கட்டப் பொன்னாலை மதில் கற்களோடு கற்களாக எடுத்துச் செல்லப்பட்ட போது.
03. பிள்ளையார் சிலை மீள "புலோவில்" புதைக்கப்பட்ட போது.
04. "புலோ" உழும் போது தென்பட்ட பிள்ளையார் சிலை.
05. பிள்ளையார் சிலை அன்னியர் ஆட்சிக்குப் பயந்து இப்பலனைக் கிணற்றில் போடப்பட்ட போது.
06. மீண்டும் சிலை கி.பி. 1790 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட போது
07. கி.பி. 1790 ஆம் ஆண்டு குடியமைத்த "வதிரன்புலோ" நிலத்தில் பிரதிஷ்டை செய்தபோது
08. முருகக்கல்லால் ஆன ஆலயம் கி.பி. 2000 ஆம் ஆண்டு தோற்றம்



புதிய வசந்த மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம் உருவாகிய விதமும் அதன் முன்னைய தோற்றமும்




01. கி.பி. 1621ஆம் ஆண்டு போர்த்துக்கேயத் தளபதி டி. ஒலிவேரா தலைமையில் பொன்னாலை ஆலய 7 ஆம் பிரகார மதில் உடைக்கப்பட்ட போது.
02. சங்கானைக் கோட்டை கட்டப் பொன்னாலை மதில் கற்களோடு கற்களாக எடுத்துச் செல்லப்பட்ட போது.
03. பிள்ளையார் சிலை மீள "புலோவில்" புதைக்கப்பட்ட போது.
04. "புலோ" உழும் போது தென்பட்ட பிள்ளையார் சிலை.
05. பிள்ளையார் சிலை அன்னியர் ஆட்சிக்குப் பயந்து இப்பலனைக் கிணற்றில் போடப்பட்ட போது.
06. மீண்டும் சிலை கி.பி. 1790 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட போது
07. கி.பி. 1790 ஆம் ஆண்டு குடியமைத்த "வதிரன்புலோ" நிலத்தில் பிரதிஷ்டை செய்தபோது
08. முருகக்கல்லால் ஆன ஆலயம் கி.பி. 2000 ஆம் ஆண்டு தோற்றம்



புதிய வசந்த மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரங்கால் சங்கானை மூலம் இன்னும் நிரூபணம். பல ஆண்டு காலம் முன் குறிப்பிடப்பட்ட விக்கிரக ஆராதனை தடை அன்னியர் ஆட்சிகளில் இருந்தது. பல ஆண்டுகாலம் இச்சிலை புலோ நிலத்தில் புதையுண்டு கிடந்தது கண்கூடு.

இவ் வரலாற்று ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, கொழுவால் வெளிப்பட்ட சித்தி விநாயகரை அன்றைய காலம் ஆலயம் அமைத்து பிரதிஷ்டை பண்ணி வழிபட உகந்த காலமல்ல என்பதை உணர்ந்த பெரியோர் இவ்விக்கிரகத்தை "மூளாய் இம்பலனை" என்னும் காணியில் இருந்த கிணற்றில் போட்டு வைத்தனர். அன்னியர் ஆட்சியில் ஆலயம் அமைக்க, பிரதிஷ்டை செய்ய, சைவசமய வழிபாடு செய்ய மக்கள் அனுமதிக்கப்பட்ட போது, விநாயகப் பெருமான் கனவில் தோன்றி, வதிரன்புலோ காணியில் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்று பணித்தார். இதன் பிரகாரம் பண்டாரபிள்ளை என்பவர் "இன்பலனை" என்னும் காணிக்கிணற்றில் போட்டசிலையை எடுத்து சிறு குடிலமைத்து வழிபாடு செய்து வந்தார். இச்சிலையை அக்கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட போது பிராயச்சித்தம் செய்ய, அக்காலத்தில் இக்கிணற்றில் இடப்பட்ட பூசைப் பொருட்கள் இன்னும் இக்கிணற்றில் இருந்து சான்று பகர்கின்றன.

சிறு குடிலில் இருந்த **விநாயகப் பெருமான் எல்லோருக்கும் அருள் பாலிக்க வேண்டும் என்ற பெரும் கிருபையினால் 1790 ஆம் ஆண்டு ஊர் மக்கள் உதவியுடன் "செங்காரபிள்ளை தோம்பு நிலம் வதிரன்புலோவிலும்** இராசரத்தின முதலியார் தோம்பு நிலம் வதிரன்புலோவிலும் பனையாள்வான் பிரிவிலும்" அவர்களினால் சித்தி விநாயகருக்கு தரும சாசனம் செய்யப்பட்ட நிலத்திலும் முதலில் முருகைக்கல்லாலும், பின்னர் வைரக்கல்லாலும் கோயில் எழுப்பி பூசகர் நியமிக்கப்பட்டு, ஆகமவிதிப்படி நடக்க ஆவன செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் பண்டார பிள்ளை முத்திபெற வேண்டி காசிக்குச் சென்று முத்தி எய்தினார்.

அன்று சதானந்தாபட்டர் காலம் தொட்டு பூசகர்கள் கிரியைகளை முறை தவறாது செய்தும், ஆலய ஆகமங்களை நடாத்தியும் அடியார்கள் பொறுப்புடன் காலத்திற்கு காலம் ஆலயத்திற்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்தும் பாதுகாத்தும் உபயங்களை சிறப்பாக நடாத்தியும் வருகின்றனர். தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்ட இவ்வாலயம் தானே இயல்பாக இயங்கும் தனித்தன்மை கொண்ட ஓர் தெய்வீக ஆலயமாகும்.

இத்தேவஸ்தானத்திற்கு எம் முன்னோர்கள் பலர் வதிரன்புலோ, வதிரன்புலோவும், பனையாள்வான் பிரிவும், ஊமையன்புலம், வதிரன்புலோ இராமநாதன் கலட்டி, பிறமேட்டு நிலங்களையும், தம்பனை வதிரன்புலோ ஆண்டிச்சிகாடு, பிட்டி வயல் ஆகிய நெல் வயல்களையும் தருமசாதனம் செய்துள்ளனர். அத்துடன் அல்லாமல் திருவிழாவிற்கு என்று வெட்டுக்கிடங்கு கேசியவளை, பிட்டி, கள்ளியன்காடு, குமரப்புலம், ஆண்டிச்சியகாடு, கம்பிமாயனை, குரும்பைப்புலம், பத்திரக்கடவை, ஐயத்தபுலம், முதலைக்குளி, ஆடவராயன் வயல், பிறவும் மேட்டு நிலங்களையும், பள்ள நிலங்களையும் உபயமாக ஏற்படுத்தி கோயில் நித்திய, நைமித்திய கிரியைகள் சிறப்புற நிறைவேற ஏற்பாடுகள் செய்துள்ளனர். ஆனால் அவற்றில் சில தருமசாதனம் செய்தவர்களின் வழித்தோன்றல் என்று கூறிக்கொள்பவர்களினால் மிக நூதனமான முறையில் சிதைத்தும், கைமாறியும், மறைத்தும் சொந்தமாக்கப்பட்டும் இருக்கின்றன.

இக்கோயில் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்பட்ட போதிலும் தகுந்த ஆவணங்களுடனும் சாதனங்களுடனும் உரிமையுள்ளவர்கள் நீதிமன்றம் மூலம் நிருபித்து முகாமைப் பொறுப்பை ஏற்கலாமென்று 1946 ஆம் ஆண்டு நடந்த து/னுஊ - 2480-21.01.1946 வழக்கில் சுப்பிரீம் கோர்ட் தீர்ப்பளித்தபோதிலும், அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் எவரும் நிருபித்து முகாமையைப் பொறுப்பேற்க முன் வரவில்லை.

இவ்வாலயத்தில் கடந்த நூற்றாண்டில் 1905, 1945, 1974 ஆகிய ஆண்டுகளிலும் இந்நூற்றாண்டு ஆரம்பத்தில் 12.07.2000 திகதியும் மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மற்றைய கோயில்களில் நடைபெறுவதுபோல் அல்லாமல், **இவ்வாலயத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே கரிப்பொட்டு, காளாஞ்சி ஆகியவை கொடுத்தல் நிறுத்தப்பட்டு, தன்னிகரில்லாத தலைவனாகிய சித்தி விநாயகருக்கு அர்ப்பணம் செய்து பொதுமக்களின் கோயிலாக நடைபெற்று வருகின்றது.**

இவ்வாலயத்தில் 1930 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 1958 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆம் திகதி வரை சுமார் 28 ஆண்டுகள் "சித்தி விநாயகராலய பரிபாலன சபை" என்ற பெயரில் ஓர் சபை இயங்கி வந்ததாக போதிய சான்றுகள் கூறுகின்றன. பின்னர் ஒரு சிலரின் பொறுப்பற்ற தன்மையினால் அதற்கு முகம் கொடுக்க முடியாத நிலைப்பாட்டில் அது செயலுறும் தன்மையை இழந்து விட்டது. பின்னர் 1965, 1971, 1980 ஆகிய ஆண்டுகளில் ஓர் பரிபாலன சபை உருவாக வேண்டும் என்று இவ்வூர்ப் பொதுமக்கள், உபயகாரர்கள் விரும்பிய போதிலும் 02.11.1991 வரை இம்முயற்சி சித்திபெறவில்லை.

தற்பொழுது இத்தேவஸ்தானத்தில் ஐந்துவேளைகளில் நித்திய பூஜையும், நைமித்திய பூஜைகள், மஹோற்சவங்கள், தை, வருடப்பிறப்பு, சங்காபிஷேகம், வைரவர் பொங்கல், பங்குனி உத்தரம், ஆனி உத்தரம், ஆடிப் பூரம், நவராத்திரி, திருக்கார்த்திகை விளக்கீடு, 21 நாள் பெருங்கதை, சஷ்டி விரதம், சோமவாரம், பஞ்சமுக விநாயகர் உற்சவம், வெள்ளிக்கிழமை தோறும் காலை பாடசாலை மாணவ, மாணவிகளின் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, அபிஷேகம் ஆகியன உபயகாரர், வழிபடுவோர், நிர்வாக உதவியுடனும், அர்ச்சகரின் ஆலோசனையுடனும் மிகச் சிறப்புற நடைபெற்று வருகின்றது. அத்துடன் அல்லாமல் அருகிலுள்ள முருகன் ஆலயத்தில் எத்திருவிழா தினத்திலும் இக்கோயிலிலும் ஓர் சிறப்பு அபிஷேகம் நடைபெறுவது சிறப்பம்சமாகும். இன்னும் உபயகாரர்கள் அநேகர் தங்கள் திருவிழாக்களில், வீதியுலா வருவதற்காக வேண்டிய வாகனங்களைச் செய்வித்துத் தந்துள்ளனர்.

மேலும் 1958 ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் பரிபாலன சபை செயலிழந்தபின் இக்கோயிலின் "திருப்பணிகள்" என்ற பெயரில் தனிநபர்களினாலும், குழுக்களினாலும், சபைகளினாலும் சில வேலைத்திட்டங்கள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், முழுமையாக கணக்கு வரவு, செலவுகள் மக்கள் பார்வைக்கு வெளிப்படுத்தப்படாத நிலைப்பாட்டில் ஆலய செயற்பாடுகளை எல்லாம் ஓர் முகப்படுத்தவும், ஆலயத்தின் வளர்ச்சி கருதியும் ஓர் பூரணத்துவம் வாய்ந்த பரிபாலன சபை வேண்டும் என்று பொதுமக்கள், உபயகாரர்களின் ஏகோபித்த கருத்தையும் முடிவையும் ஏற்றுக்கொண்டு கலை, பண்பாட்டு நிறுவணம் 02.11.1991 அன்று மூளாய் வாழ் பொதுமக்கள், மூளாய் இந்து இளைஞர் மன்றம், உபயகாரர் நலம் விரும்பிகள் அனுசரணையுடன், குறித்த தேவஸ்தானத்தின் நிர்வாகப் பராமரிப்பு பொறுப்பினை, உள்ளூர் அடியார்கள் பெரிதும் பங்கு கொண்டு நடாத்தும் முறையில் 18 பேர் கொண்ட நிர்வாக சபையை ஏற்படுத்தி அதன் தலைமைப் பொறுப்பினை 'தர்க்கார்' மூலம் செயற்படுத்த ஏற்படுத்தியது. இவ் ஒழுங்குக்கமைய தர்க்காருடன் கூடிய நிர்வாக சபை இத்தேவஸ்தானத்திற்கு வேண்டிய,

1. அமைப்பு திட்ட விதிகள் (யாப்பு) தயாரித்தல்
2. அங்கத்துவம் சேர்த்தல்
3. ஆலய சொத்துக்களை ஒருமுகப்படுத்தல்

போன்ற வேலைத்திட்டங்களை செவ்வனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றி 07.11.1992 இக்கிராம மக்களின் ஏகோபித்த அங்கீகாரம் பெறப்பட்ட புதிய பரிபாலன சபை தன் வேலைத் திட்டங்களையும் தனது நிர்வாகப்பணியையும் திறம்பட நிறைவேற்றி வருகின்றது. அத்துடன் அல்லாமல் வருடம் தோறும் ஆலய வரவு, செலவுகள் என் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு புத்தகவடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் ஏற்பட்ட பல அனர்த்தங்களுக்கும் அதனால் ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதங்களை பரிபாலன சபை உடனுக்குடன் செயற்பட்டு திருத்தி, இன்று ஓர் முழுமையான, பல நூற்றாண்டு பழமை வாய்ந்த ஆலய புனரமைப்பு நடைபெற்று பொது மக்கள், அன்பர்கள், அடியார்கள் துணையுடன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி கொண்டு "ஜீர்ணோத்தாரண புனராவர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம்" யாழ்மாவட்டத்தில் தலை சிறந்த வேத விற்பன்னர்களினாலும், சிவாச்சாரியர்களினாலும் 12.07.2000 இல் நடைபெற்றது. இவ்வாலய வரலாற்றில் இது ஓர் ஐந்து நூற்றாண்டு மைல் கல்லாகும்.

<u>பின் சேர்ப்பு</u>

2000 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் பின் ஆலய நிர்வாகம் காலத்தின் தன்மைக்கு ஏற்ப பல திருப்பணிகளையும், சேவைகளையும் தொடர்ந்து செய்து வந்தது. 2001 ஆம் ஆண்டுகளில் இக்கிராமத்திலும், அயலூர் கிராமங்கள் மற்றும் காரைநகர் பிரதேசங்களில் ஏற்பட்ட 'நன்னீர்' குடிநீர் தட்டுப்பாட்டு பிரச்சினையைத் தீர்க்க தொடர்ந்து 24 மணி நேரமும் பொதுமக்கள் தண்ணீரை எடுத்துச் செல்ல குழாய் மூலம் நன்னீர் விநியோகம் நடைபெற ஒழுங்குகளை மேற்கொண்டது. அப்பணி இன்றுவரை நடைபெற்று வருவது மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

2004 ஆம் ஆண்டு வரை ஆலய மின்வலு 'தனிபேசாக' இருந்தது 3 பேசாக மாற்றப்பட்டது. அக்காலத்தில் ஆலயத்தின் சிலதளப் பகுதிகளுக்கு 'மாபிள்' தளமாக மாற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஆலயத்தின் மற்றுமோர் பகுதிக்கு மாபிள் பதிக்கப்பட்டதும் ஆலய வெளி வீதியை சுற்றிவர மின் கம்பங்கள் நாட்டப்பட்டு, மின் விளக்குகள் போடப்பட்டன. 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் பூந்தோட்ட வீதிக்குப்புறக் காணியில், எதிர்காலத்தில் ஆலய தேவைக்கு பயன்படும் என்ற கோட்பாட்டில் "தென்னம் தோட்டம்" போட எடுத்த முயற்சிகள் அவை நடைபெறாமல் தடைப்பட்டது.

பின்னர் 2008 ஆம் ஆண்டு 'நிஷா புயல்' இடரினால் ஆலயத்தின் பெரும் பகுதி கூரைகள் பாரிய சேதம் அடைந்ததும் அவை பின்னர் பெரும் செலவில் திருத்தப்பட்டதும் கண்கூடு. அதேபோன்று **2009 ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் "ஏற்பட்ட இருண்ட யுகமான காலப்பகுதி" யாகக் காணப்பட்டது. 30.07.2009 அன்று ஆலயத்தில் 10 இற்கு மேற்பட்ட பூட்டுக்கள், கதவுகள் உடைக்கப்பட்டது. ஆலயத்தில் பல காலமாக பேணிக்காக்கப்பட்ட ரூபா 14,88000/= பெறுமதியான 62 1/2 பவுண் நகைகளும், 23 கிலோ எடையுள்ள ரூபா 24,64000/= பெறுமதி மிக்க தூய வெள்ளியில் செய்யப்பட்ட பிள்ளையார் அங்கி உட்பட அணிகலன்களும் கொள்ளையிடப்பட்டது.** புலனாய்வு, மோப்ப நாய்கள் மூலம் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், அப்பொருட்கள் மீண்டும் ஆலயத்திற்கு கிடைக்க முடியாமல் போய்விட்டது. கொள்ளையிட்டதாக சிலர் கருதப்பட்டு வழக்கு நடந்த போதிலும், அப்பொருட்கள் மீட்க முடியாமல் போய்விட்டது இக்காலம் ஆலயத்திற்கு ஏற்பட்ட சோதனைமிக்க காலமாகும்.

2009 ஆம் ஆண்டு "வேதசாகரம்" என்ற தெற்குப்புற திருநீர் தடாகம் அடியார் ஒருவரின் தனிநிதி கொண்டு பூரணமாக புனரமைப்புச் செய்யப்பட்டது. 2010 ஆம் ஆண்டு ஆலயத்திற்கென ஓர் பூந்தண்டிகை செய்யப்பட்டது. அத்துடன் அடியார்கள் நலன் கருதி ஓர் சைக்கிள் தரிப்பிடம், வாகன சாலைத் திருத்தமும் முழு அளவில் புதிதாக திருத்தி அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 ஆம் ஆண்டு இளைஞர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு, மரபு வழி கிராமிய கலைகளை மேம்படுத்தும் நோக்கமாகவும், இளைய தலைமுறைகள் தங்கள் கலைத்திறனை வளர்க்கும் கலைக்கூடமாக முற்றும், புதிதாகத் திறந்த வெளியரங்கு அமைக்கப்பட்டது. மற்றும் சில நூற்றாண்டு காலமாக முறையாக பராமரிக்கப்படாமல் இருந்த திரிவேணி சங்கமம் என்ற திருநீர்த் தடாகம் மஹோற்சவ காலத்தில் தீர்த்த உற்சவம் இத்தடாகத்தில் நடைபெற வேண்டும் என்ற பெருநோக்கில் 2007 - 2011 ஆம் ஆண்டு கால முயற்சியின் பயனாக 17.04.2011 இல் ஓர் பூரணப்படுத்தப்பட்ட தீர்த்தத் தடாகமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயத்திற்கு ஓர் சிறப்பாகும். இதன் மூலம் மூர்த்தி விருட்சம், தீர்த்தம் என்ற நிலை ஆலயத்தில் முழுமை பெற்றதும் சித்தி விநாயகரின் தெய்வீகச் செயலாகும். 2011 ஆம் ஆண்டு அடியார் ஒருவரின் தனி நிதி கொண்டு உருவாக்கி அன்பளிப்புச் செய்த திருமஞ்சம் 10.04.2011 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டதும் எழுத்திலேவடிக்க வேண்டிய கால நிகழ்வாகும்.

2013 ஆம் ஆண்டு ஆலயத்தின் கிழக்கு, தெற்கு பகுதிகளுக்கு திறந்த வெளி மிகுதி நிதி மூலம் சுற்று மதில் அமைக்கப்பட்டதும். இதன்மூலம் ஆலயம் தன் வெளி வீதியை, அமைப்பை மிளிரச் செய்ததும் ஓர் சிறந்த அத்திவாரமாகும். 2014 ஆம் ஆண்டு கோபுரத்திற்கு அருகாமையில் ஓர் ஒலிபெருக்கி அறை கட்டப்பட்டு வசதி ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. அதே ஆண்டு அடியார் ஒருவர் இவ்வாலயத்தை மையப்படுத்தி, இக்கிராம வளங்கள், தெய்வீகத் திருத்தலங்கள், மடங்கள் பற்றி இக்கிராமப் புகழ் எம் முன்னோர்களில் வழிதோன்றல்கள் சென்ற இடமெல்லாம் ஒலிக்க ‘வதிரிஸ்வரன்’ என்ற ஒலி நாடாவை வெளியிட்டதும். காலத்தின் அழியாத சான்றாகும். அத்துடன் அல்லாமல் 30.06.2004 ஆம் ஆண்டு மூளாய் சித்தி விநாயகரின் புகழ், மூர்த்தி, கீர்த்தி, அற்புதங்கள் போன்ற மகிமைகள் உலகெங்கும் பரவ திருமதி. சாரதா பரம்சோதி என்ற இசைக் கலைஞரால் ‘வதிரகானம்’ என்னும் ஒலிநாடா முதல்முதலாக வெளியிடப்பட்டதும் இன்று அவர் மறைந்தாலும், அவரின் கான இசை ஆலயங்கள் தோறும் ஒலித்துக் கொண்டிருப்பது சித்தி விநாயகர் கருணையேயாகும்.


2013 - 2014 ஆம் ஆண்டுகளில் ஆலயத்தில் புனரமைப்புச் செய்து, கும்பாபிஷேகம் நடாத்த உத்தேசித்த போதிலும் அது கைகூடாமல் போனதும், பின்னர் 2015 ஆம் ஆண்டு 21.08.2015 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு முழு மூச்சில் பாரிய புனரமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, கனவிலும், கற்பனையிலும் பலகாலம் அடியார்கள் மனதில் நிழலாகத் தென்பட்ட புதிய வில்லு மணி மண்டபம், வசந்த மண்டபம், மணிக்கூட்டு கோபுரம், சிவாச்சாரியார்களும் தங்கி நிற்க மேலதிக வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, யாவரும் வியக்கும் வண்ணம் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று, மஹா கும்பாபிஷேகம், வேத விற்பன்னர்களும், சிவாச்சாரியர்களும் மரபு வழி தவறாத கிரியைகள் நடைபெற்று, பக்தர்களில் தெய்வீக முழக்கங்கள் ஒலிக்க பெரும் சாந்தி திருக்குடமுழுக்கு விழா 11.09.2016 அன்று நடைபெற்றது. இவ்வாலயத்தில் இந்த நூற்றாண்டில் 2 ஆவது மைல்கல்லாகும்.

“சித்தி விநாயகர் கருணை மகத்தானது”


**க. செல்வராசா**
**தலைவர்,**
மூளாய் – வதிரன்புலோ,
சித்தி விநாயகர் தேவஸ்தானம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அபிவிருத்திப் பணிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிவேணி சங்கமம் பிரதிஷ்டை விழா

## 17.04.2011












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம் பற்றிய பதிவுகள்

01. யாழ்ப்பாணக் கச்சேரி ஆலயப் பதிவு :

பக்கம் 90 : 28 மூளாய்

பதிவு ஆண்டு 1892

ஆலயம் கட்டப்பட்ட ஆண்டு : 1790 கற்களினால் கட்டப்பட்டது.

அரசாங்க அதிபர் : சேர் டைக் பிரபு

02. இந்துசமயத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி அமைச்சு கொழும்பு

பதிவு இலக்கம் : 6\3\J\4\P\2 திகதி 11.08.1980

03. இந்துசமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு

ஆலயப் பதிவு இலக்கம் : HA\5\JA\642 திகதி 27.04.1992

04. இந்துசமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு.

நிறுவனப் பதிவு : மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை

பதிவு இலக்கம் : HA\4\J\170 திகதி 29.04.1992


05. இந்து சமய இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு

அறநெறிப் பாடசாலை பதிவு இலக்கம் : HA\7\56\14\51

திகதி 28.11.2000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வங்கள் துதித்த விநாயகர்



சின்னக் குழந்தையைப் பார்த்துக் கொண்டேயிருக்க யாருக்குத்தான் சோர்வாகும்? ஆடி அசைந்து வரும் பிரம்மாண்ட யானையும் அப்படித்தான்... சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரையில் யானையை எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை! இரண்டும் ஒன்றாய் ஓர் உருவத்தில் இருந்தால்....? அலுக்காமல் சலிக்காமல் சதா இன்பத்தையே தரும் அந்த மாபெரும் சக்தி சொரூபம்தான் விநாயகர்.

உலகனைத்தையும் பல்வேறு கணங்கள் காத்து கட்டுப்பாட்டோடு இயங்கச் செய்கின்றன. அந்தக் கணங்களைச் சற்றும் கோணாமல் பிசகாமல் இயக்கிவிடும் அதிபதிதான் கணபதி! 'கணேசர்' என்றவுடன் மனதில் தோன்றியதும், எல்லோரும் உடனே வழிபாடு முறையாகக் கொள்வதும், தோப்பிக்கரணம் போடுவதும், தலையில் குட்டிக் கொள்வதுமேயாகும்.

தோப்பிக்கரணம் என்றால் என்ன? பிள்ளையாருக்கு மட்டும் ஏன் தோப்பிக்கரணம் போடுகின்றோம்? தேவகணங்களும் பிள்ளையாருக்கு உட்பட்டவர்கள் தான் என்பதால் மகாவிஷ்ணுவும் அதற்கு விதிவிலக்கல்ல...

பார்வதி - பரமேஸ்வரனைத் தரிசனம் செய்ய ஒரு முறை மகாவிஷ்ணு திருக்கைலாயம் சென்றார். அப்போது அங்கே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை கணபதியிடம் தமது சக்கரத்தைக் கொடுத்தார். விளையாட்டினூடே அச்சக்கரத்தை வாயினுள் போட்டுக்கொண்டு வாயை அழுத்தமாக மூடிக்கொண்டு விட்டார். பிள்ளையார்! காக்கும் கடவுளோ தவித்துப் போனார். கெஞ்சி மன்றாடி தன்னுடைய சக்கரத்தைத் திருப்பித் தருமாறு கேட்டார். எந்தவிதமான கெஞ்சுதலும் பயனளிக்காததால் இரு காதுகளையும் கைகளால் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் விளையாட்டுக் காட்டினார். மாமா இவ்வாறு விளையாட்டுக் காட்டுவதைக் கண்ட கணபதி வாய்விட்டுச் சிரிக்கவும் சக்கரம் வெளியே விழுந்துவிட்டது. நிம்மதி பெருமூச்செறிந்தார் திருமால்.

வடமொழியில் 'தோப்பி' என்றால் கைகள் என்றும் 'கரணம்' என்றால் காதுகள் என்றும் அர்த்தமாவதால், கைகளால் காதுகளைப் பிடித்து வணங்கும் முறை 'தோப்பிக்கரணம்' என்று வழங்கலாயிற்று!

நமக்கு வேண்டியதைப் பிள்ளையாரிடம் கேட்கும்போது தோப்பிக்கரணம் போடுவது வழக்கமாகிவிட்டது. அதை முதல் முதலாக வழிபாடு முறையாகத் துவக்கியவர் மகாவிஷ்ணுவேயாவார்.

விக்னங்களை விலக்குவதால் (விக்ன+ ஈஸ்வரன்) விக்னேஸ்வரன் என்ற திருநாமம் பிள்ளையாருக்கு உண்டு. எந்தவொரு வேலையை நாம் துவக்கினாலும் அது சற்றும் இடைஞ்சலின்றி வெற்றிபெறக் கணநாதனை முதலில் துதித்துவிட்டே துவங்க வேண்டும்.

ஒருமுறை சிவபிரான் திரிபுர அசுரர்களை வென்றிடத் தமது ரதத்தில் புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் ரதத்தின் அச்சாணி கழன்று ரதத்தினின்று சக்கரம் வெளியேறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தான் எடுத்துக்கொண்ட பெரும்வேலை இப்படித் தடைப்பட்டு விட்டதே'' என்று மனம் உடைந்த வேளையில், விக்னத்தை நீக்கும் சக்தியுடைய கணபதியின் நினைவு வந்தது. 'இப்படி ஒரு பிள்ளையைப் பெற்ற உரிமையினால் நாம் அந்த சக்தி வேண்டிப் புறப்படாமல் போய்விட்டோமோ? யாராக இருப்பினும் அவரவர்க்கு கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானத்திற்கான மரியாதை கொடுக்காமல் போகிறோமே?'' என்று மிகவும் மனம் வருந்தினார்.

உடனே அங்கேயே ஆசனமிட்டு அமர்ந்து விக்னராஜா கணபதியை மனமிரங்க வேண்டினார். விநாயகர் ஈசன் முன்தோன்றி இடையூறை அகற்றினார். ரதத்தின் சக்கரம் மீண்டும் பொருத்தப்பட்டு திரிபுர அசுரர்களை வென்றிட சர்வேஸ்வரன் புறப்பட்டார். முடிவில் 'திரிபுராந்தகர்' என்ற வெற்றிப்பட்டமும் பெற்றார் சிவபிரான்.

தந்தையானாலும் ஈன்ற தாயானாலும் கணங்களை இயக்கும் பணியில் பாரபட்சம் பார்ப்பதில்லை விநாயகர். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் காரியங்களை விக்னமின்றி நிறைவேற அவரைப் பிரார்த்தனை செய்வார்களேயானால் உடனே மனமிரங்கி அருள்பாலிக்கும் தயாளனாகிவிடுவார்.

பிரபஞ்சத்தின் சர்வசக்தியான அம்பிகையே ஒரு சமயம் தான் ஈன்ற மகனான கணபதியின் உதவியை நாடினாள். பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான பிரமாண்ட புராணத்தில் வரும் லலிதோபாக்கியானத்தில் பிள்ளையாரின் ஒரு ஆவிர்பாகம் இக்கதை யாகும்.

தேவகன்னிகைகளை மட்டுமே கொண்ட சக்தி சேனையுடன் அன்னை லலிதாம்பிகை பண்டாசுரனோடு யுத்தம் புரியக் கிளம்பினாள். அக்கினிக் கோட்டை ஒன்று எழுப்பி அதனுள் சேனையுடன் முகாமிட்டிருந்தபோது பண்டாசுரனின் தளபதியான விசுக்ரன் விக்னயந்திரமொன்றை அம்பிகையின் அக்னி கோட்டைக்குள் எறிந்துவிட்டான்.

விக்னயந்திரத்தின் தன்மையால் தேவ சேனையினர் மதிமயக்கம் கொண்டு அசுரர்களைத் தாக்குவதையே தவறு என்ற மனநிலைக்கு வந்துவிட்டனர். மனமாற்றத்திற்குப் பின்பு உறங்கவைத்துவிடும் சக்தி கொண்ட விக்னயந்திரத்தின் தன்மையால் சக்தி சேனை உடன் உறங்கியும் விட்டது. ஞானஸ்ரூபிணியான அம்பிகைக்கா இதிலிருந்து விடுபடும் பாதை தெரியாது?

பண்டாசுரனை வதைக்கும் பொருட்டே ''காமேஸ்வரி'' சொரூபத்தை மேற் கொண்ட அம்பிகை காமேஸ்வரன் என்ற திருநாமங்கொண்ட சிவபிரானைக் கண்ணோடு கண் நோக்கி முகம் மலர்ந்த ஆனந்த நேரத்தில்தான் விக்னேஸ்வரரை உத்பவித்தாள். எல்லாமே 'பிரசன்ன' மாக, ஜோதிமயமாக, ஆனந்தமயமாக இருப்பதற்காகவே ஆவிர்பாகம் செய்யப்பட்ட விக்னசக்தியை லலிதாசகஸ்ரநாமத்தில் 'காமேச்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேச்வரா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்ன நிவாரணத்திற்கென்றே உத்பவித்த விக்னேஸ்வரரை அம்பாள் மனத்தில் தியானம் செய்தாள். தும்பிக்கையான் நம்பிக்கை வைத்தவர்களிடம் ஓடோடி வருவான்! அன்னையின் ஆணையை சிரமேற்கொண்டு அக்னி கோட்டையில் புதைந்துகிடந்த விக்னயந்திரத்தை தனது துதிக்கையால் எடுத்து நாசம் செய்தார். தேவசக்திகள் உறக்கத்திலிருந்து விழித்து எழுவது போல் எழுந்து வீராவேசத்துடன் அசுரர்களை வீழ்த்தி வெற்றி வாகை சூடினர்.

**ஞானபூமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பெருமை



''செஞ்சொற் புனைமாலை சிறந்திடப் பஞ்சக் கர ஆனை பதம் பணிவாம்'' என்கிறார் அருணகிரி. ''எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறப் பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்'' என்கிறார் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர். விநாயகர் என்னும் பதத்திற்குத் தனக்கு மேலொரு நாயகன் இல்லாதவர் என்பது பொருள். அதாவது தலைவன் இல்லாதவர். சைவமக்களின் வணக்கத்திலும், வைபவங்களிலும் முதலிடம் பெறுபவர் விநாயகர். அவரில்லாத கருமமே இல்லை. எமது வாழ்க்கையின் இடர்களை நீக்குபவர். இதனால் விநாயகருக்கு இப்பெரும் முதன்மை உண்டு. விநாயகர் ஒப்பற்ற தலைவன். தன்னிகரில்லாத் தலைவன் ஆயினும் அடியார்க்கு எளியவன். இதனாலே தான் பிராமணச் சிறுவனாகவும், காகவடிவினனாகவும் ஒருமுறை திருவிளையாடல் புரிந்தனர்.

இத்தகைய விநாயகருக்கு விக்கினராசா, கணேசர், கணபதி, ஐங்கரன், லம்போதரன், வக்கிரதுண்டர், ஏகதுண்டர் என்றும் பல திருநாமங்கள் உண்டு. விக்கினங்களைப் போக்குபவராதலால் விக்கினராசா என்றும், கணங்களுக்கு அதிபதியாகையால் கணபதி என்று, ஐந்து கரமுடையதால் ஐங்கரன் என்று, ஒருதுதிக்கையுடையதால் ஏகதுண்டர் என்றும், பேழை வயிறுடையதால் லம்போதரன் என்றும் சிறப்பிக்கப்படுபவர்.

யானை முகம், பேழை வயிறும், பெரும் பாரக் கோடும், ஐந்து கரமும், அங்குசபாசமும் அவர் யாவற்றையும் கடந்த பரம்பொருள் என்பதனையும், இந்த உலகம் யாவும் அவருள் அடக்கம் என்பதனையும், அவர் பரமசிவனிலும் வேறல்லர் என்பதையும் உணர்த்தும்.

இத்தகைய விநாயகப்பெருமானின் தோற்றம் பற்றிய கதைகள் பல. சிவனுக்கோ பார்வதிக்கோ மட்டும் பிறந்தவர் என்றும் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்தவர் என்றும் பார்வதி நீராடவைத்த வாசனைத்திரவியங்களில் இருந்து தோன்றினார் என்றும் புராணங்கள் மாறுபடும். எது எப்படி இருப்பினும் சிவமும் சக்தியுமாகிய பிரணவ வடிவமே விநாயகர் என்பதே ஏற்க வேண்டிய பொருள்.

''பிடியதனுருவுமை கொளமிகு கரியது வடிகொடு... கணபதி வர அருளினேன்'' என்று தேவாரம் பாடினார் ஞானசம்பந்தர். பிள்ளையார் கதையும் ''மதகரி உரித்தோன் மதகளிறாகவும் மதர்விழி உமை பிடி வடிவமாகவும் கூடிய கலவியில் குவலயம் விளங்க விநாயகர் அவதரித்தார் எனக்கூறும். சிவ சக்தி வடிவம் ஓங்காரம். ஓங்கார வடிவம் விநாயகர். அகர, உகர, மகரம் சேர்ந்ததே ஓம் எனும் பிரணவம். அகரம் (ஆண் யானையையும் சிவத்தையும்) உகரம் (பெண் யானையையும் சக்தியையும்) குறிக்கும். மேலும் அவர் தம் தோற்ற அழகினைப் பிள்ளையார் கதையிற் கண்டவாறு கண்டின் புறலாம்.

''முண்டக மலர்போல் முழுதும் சிவந்த
தண்டையுஞ் சதங்கையுமலம் புதாளிணையுங்
குண்ட வண்டியும் தண்டரள மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டொளி தழைத்த புண்டர நுதலும்
முடிவுகண் டறியா முப்புரி நூலும்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்கும்
சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்
அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமும்
ஐங்கரக் கரிமுகன் வந்துஅவதரித்தலும்"

என விநாயகர் வடிவு சித்தரிக்கப்படுகிறது. கரிமுகம், ஐந்துகரம், அங்குசபாசம், முக்கண், அவிர்சடை யாவும் சிவனொடு பேதகமற்ற நிலையை உணர்த்தும்.

இவரை வணங்காத சைவ உலகு இல்லை. இவரருள் பெற்றோர் பலர். திருமுறைகளைக் கண்டெடுக்க நம்பிக்கும், கையிலைத் திருமணங்காண ஔவைக்கும், குருட்டுத் தன்மை நீங்கத் திருமாலுக்கும், தவநெறி பிழைத்த தையல் இலக்கண சுந்தரிக்கும் நல்வாழ்வும் அருளும் கிடைத்தமை விநாயகர் பெருமையை உணர்த்தப் போதுமானவையே.

இத்தகைய பெருமைக்குரிய விநாயகப் பெருமான் மூளாயம் பதியில் இருந்து எம்மையெல்லாம் இரட்சித்து வருகின்றார். அவர் பொன்னடிகளை நாம் என்றும் மறவாதிருப்போமாக.

**ஆசிரியை திருமதி வை. கணேசபிள்ளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் அதன் தத்துவமும்

பரம கருணாநிதியாகிய இறைவன் அவரவர் கருமங்களுக்கு ஏற்ப நல்வினை தீவினையை அனுபவிக்கும் பொருட்டே இவ்வுடம்பை அளித்துள்ளார். பசுக்களாகிய மக்கள் ஈடேற ஒரேயொரு வழி காட்டினார். அது சிவாகமத்தின் மூலம் பெறப்படுவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளில் வீடாகிய பேறுதான் ஆன்மாவின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதை எய்யும் வழி பூசனையாம். அதை எப்படிச் செய்வது, பெறுவது அதனால் ஆன பயன் என்ன என்பது போன்ற வினாக்களுக்கு ஐயம்திரிபற விளக்குவது சிவாகம நூல்களாம். எனவே சிவாகமநூல்பிரமாணங்களைக் கேட்டுணர்ந்து தெரிந்து அதன்படி பூஜைகளைச் செய்ய வேண்டும். சிவாகமம் பலவ சாஸ்திரங்களின் நிலைக்களமாகும். சிவனின் ஐந்து திருமுகங் களிலிருந்து வெளிப்பட்டது.

சிவன் நித்தியம் சரீரம் அநித்தியம், அதில் தங்கியிருக்கிற ஆன்மா எந்த நேரத்திலும் வெளிக்கிளம்பிச் செல்லலாம். அந்த ஆன்மா உய்யவேண்டுமானால் அநித்தியமான சரீரத்தைச் சிவன்பால் அடைக்கலம் புகுத்தினாலன்றி மேன்பாடில்லை. ஆதலினால் இறைவன் அருள்பெற வேண்டுமானால் அறிவு பெற்று மலம் ஏற்படவொட்டாமல் செய்தலும் பெற்ற அறிவு தோன்றி விளங்கிடவும் அருவுருவாகிய கடவுள் வழிபாட்டைத் தவிர வேறு வழியே இல்லை. இவ் வழிபாடே பூஜை. இதனை எவ்வாறு செய்வது, செய்யின் பெறும் பயன் யாது என ஆராயப் புகுந்தவேளை தோன்றியதே இக் கட்டுரை.

சிவாகமமுறை கொண்டு ஆலயங்களில் செய்யப்படும் பூஜை நித்தியம், நைமித்தியம், காம்மியம் என மூன்று வகைப்படும். நித்திய பூஜை உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகையாகப் பிரித்து பின் ஒவ்வொன்றிலும் உத்தமம், மத்திமம், அதமம் எனப் பிரிக்கப்பட்டு அதமத்தில் அதமமில்லாமல் எட்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உத்தமத்தில் மூன்றாவதாகவுள்ளது ஆறுகாலப் பூஜை.

**ஆறுகாலப் பூஜைகளுக்குரிய நேரம்**

சூரிய உதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி (4.30 தொடங்கி 6.00 மணிவரை) சூரிய உதயம் வரை செய்ய வேண்டிய பூஜை உஷக்காலம். பூஜையின் முடிவில் சூரியன் உதயமாக வேண்டும். ஏழரை நாழிகை வரை (6.00 தொடங்கி 9.00 மணி வரை) **காலசந்தி.**

பன்னிரண்டரை நாழிகைமுதல் இருபது நாழிகை வரை (11.00 மணிதொடக்கம் 2.00 மணிவரை) **உச்சிக்காலம்.**

சூரியன் அஸ்தமிக்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை முதல் (4.30 மணி தொடக்கம் 6.00 மணி வரை) செய்யப்படும் பூஜை **பிரதோஷகாலம்.**

சூரிய அஸ்தமனம் தொடங்கி ஏழரை நாழிகை வரை (6.00 மணி தொடங்கி 9.00 மணி வரை) **சாயங்காலப் பூஜை.**

அதன்பின் மூன்றே முக்கால் நாழிகை (9.00 தொடக்கம் 10.30 மணி) அர்த்தயாமம்.

**பூஜா தத்துவம்**

செய்யப்படும் பூஜைகள் யாவும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்து பூதசம்பந்தமாகும். அதாவது சந்தனம், பழம், புஷ்பம், அன்னம் இவை யாவும் பிருதுவி உபசாரம். திருமஞ்சனம், பால், தயிர் முதலியவை அப்புவுபசாரம். இரத்தினம், கற்பூரம், அக்கினி உபசாரம், தூபம், சாமரை, விசிரி முதலியவை வாயுவுபசாரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி, தோத்திரம், வாத்தியம் முதலியவை ஆகாசவுபசாரம். சந்தனத்திற்கு கந்தம் என்றும் பெயர் உண்டு. அதிகமான ஆபத்திலிருந்தும் காப்பது துர்ப்பாக்கியம் பயம் இவைகளைப் போக்குவது என்ற செயலினாலே கந்தம் என்று பெயர் வந்தது. இதுபோல புண்ணியத்தை வளர்ப்பதாலும் பாவக்கூட்டங்களை அழிப்பதாலும் புஷ்பம் என்று பெயர் வந்தது. தூபமானது பாவத்தைக் கொளுத்தி ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மலசத்தியாகிய அறியாமையை நீக்கும் தத்துவமுடையது. சிற்சத்தியின் வாசமாய் ஞானவிளக்காய் இருப்பது தீபம். எனவே தீபத்தினால் திடீர் மரணம் இல்லாது போகும்.

**அபிஷேக திரவியங்களின் வரிசையும் அளவும் பயனும்**

| வரிசை | திரவ்யம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| 1ஆவது | வாசனைத்தைலம் | ஒரு படி | சுகமளிக்கும் |
| 2ஆவது | மாப்பொடி | ஒரு பலம் | கடனைத் தீர்க்கும் |
| 3ஆவது | நெல்லிமுள்ளி | ஒரு பலம் | அரசன் வசம் |
| 4ஆவது | மஞ்சள்பொடி | ஒரு பலம் | ரோகத்தைப் போக்கும் |
| 5ஆவது | ஜலதிரவம் | இரண்டு பலம் | |
| 6ஆவது | பஞ்சகவ்யம் | ஒரு மரக்கால் | பாபத்தைப் போக்கும் |
| 7ஆவது | பஞ்சாமிர்தம் | ஒரு மரக்கால் | புஷ்டி அளிக்கும் |
| 8ஆவது | பசுவின் நெய் | அரைப் படி | மோக்ஷமளிக்கும் |
| 9ஆவது | பசுவின் பால் | ஆறு படி | ஆயுளைக் கொடுக்கும் |
| 10ஆவது | பசுவின் தயிர் | 12 படி | பிரஜாவிருத்தியுண்டாகும் |
| 11ஆவது | தேன் | ஒரு ஆழாக்கு | சுகமளிக்கும் |
| 12ஆவது | கரும்பின் சாறு | ஒரு படி | ஆரோக்கியமளிக்கும் |
| 13ஆவது | சர்க்கரை | மூன்று பலம் | |
| 14ஆவது | பழவர்க்கம் | | |
| | வாழைப்பழம் | 25 | பயிரை வளர்க்கும் |
| | மாம்பழம் | 15 | வச்யம் |
| | மாதுளை | 10 | கோபத்தைப் போக்கும் |
| | பலாப்பழம் | 10 | புஷ்டியளிக்கும் |
| 15ஆவது | எலுமிச்சம்பழம் | 25 | |
| | | 10 | நேர்மை |
| 16ஆவது | இளநீர் | 25 | போகமளிக்கும் |
| 17ஆவது | அன்னாபிஷேகம் | ஒரு மரக்கால் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 18ஆவது | சந்தனம் | ஒரு மரக்கால் | லக்ஷ்மியைக் கொடுக்கும் |
| 19ஆவது | கும்பம் | 10 | மோக்ஷப்பரதம் |
| 20ஆவது | பத்ராம்பு | ஒரு மரக்கால் | உலகவசம் |
| 21ஆவது | தாராம்பு | ஒரு மரக்கால் | இன்பமளிக்கும் |
| 22ஆவது | சிருங்கதோயம் | ஒரு மரக்கால் | தைரியத்தையளிக்கும் |
| 23ஆவது | ரத்னோதகம் | ஒரு மரக்கால் | லக்ஷ்மீப்ரதம் |
| 24ஆவது | குசோதகம் | ஒரு மரக்கால் | தூய்மையளிக்கும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 25ஆவது | அர்க்யோதயம் | ஒரு மரக்கால் | ஞானமளிக்கும் |
| இதன்பிறகு | சங்கோதகம் | ஒரு மரக்கால் | புண்யப்ரதம் |
| | தீப எண்ணெய் | ஒரு படி | |

**தீபாராதனை**

கீழ்வரும் பதினாறு தீபங்களும் "தீபஷோடசோபசாரம்" என்று அஜிதாகமத்தில் பெயர் பெறும்.

| வரிசை | பொருள் | பயன் |
|---|---|---|
| 1ஆவது | தூபம் | உற்சாகத்தைத் தரும் |
| 2ஆவது | ஏகதீபம் (உருக்களி) | விழிப்பைத் தரும் |
| 3ஆவது | அலங்காரதீபம் (புஷ்ப தீபம்) | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| 4ஆவது | நாகதீபம் | லோகாகிபத்யம் தரும் |
| 5ஆவது | விருஷபதீபம் | அரசையளிக்கும். |
| 6ஆவது | புருஷா மிருகதீபம் | |
| 7ஆவது | சூலதீபம் | வயிற்றுவலி தீரும். |
| 8ஆவது | ஆமைதீபம் | ஜூலகண்டத்தைக் கொடுக்கும். |
| 9ஆவது | கஜதீபம் | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும். |
| 10ஆவது | சிம்மதீபம் | ஆயுளைக் கொடுக்கும். |
| 11ஆவது | வியாக்கிரதீபம் (புலி) | விலங்குகளிடத்தில் பயத்தைத் தீர்க்கும். |
| 12ஆவது | கொடிதீபம் | சோபையைத் தரும். |
| 13ஆவது | மயூரத்தீபம் (மயில்) | புத்திரப்பேறு அளிக்கும். |
| 14ஆவது | பஞ்ச தட்டுடன் பூர்ண கும்பம் | சாம்ராஜ்யமளிக்கும். |
| 15ஆவது | நக்ஷத்ரதீபம் | பாதுகாப்பு ஆதிபத்தியமளிக்கும் (காவல்துறை அதிகாரி) |
| 16ஆவது | மேருதீபம் | எல்லா நாட்டிலும் செல்வாக் களிக்கும். |

**அபிஷேக பலன்**

சிவபிரானுக்கு நெய்யபிஷேகஞ் செய்தலால் ஆயிரங்கோடி வருடங்களில் செய்யப்பெற்ற மகா பாவங்கள் நீங்கும். ஒரு மாதம் நெய்யபிஷேகஞ் செய்தால் இருபத்தொரு தலைமுறையிலுள்ளாரும் சிவபதத்தையடைவர், கை இயந்திரத்தாலுண்டான தைலத்தை அபிஷேகஞ் செய்தால் அலங்காரஞ் செய்யப்பட்ட அளவில்லாத பசுக்களைத் தானம் செய்தபலன்கிடைக்கும். தயிரபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி முடிவில் சிவபதங் கிடைக்கும். தேன் அபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கும்.

**பிரதோஷ காலத்தில் வணங்கும் முறை**

முதலாவது இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடதுபக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத்தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று கோமுகியைக் கடவாது சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி இடபதேவரைத் தரிசியாது கோமுகி வரை சென்று, அங்கு நின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது இடது பக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துத் திரும்பி வந்து இடபதேவரைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் பிரதக்ஷணத்தில் இடபதேவரை நான்கு முறையும், சண்டேசுவரரை மூன்று முறையும், கோமுகியை இரண்டு முறையும் தரிசித்ததாக ஆகின்றது.

**பூஜாத் திரவியத்தின் பயன்**

எண்ணை அபிஷேகத்தினால் சௌக்கியம் உண்டாகும். இவ்வாறு பஞ்சாமிருதத்தினால் பரிசுத்தம், நெய்யினால் முக்தி, பாலினால் ஆயுள்விருத்தி, தயிரினால் புத்திரப்பேறு, தேனினால் சுகம், அன்னாபிஷேகத்தால் சாம்ராஜ்யம், சந்தனத்தினால் மோக்ஷம் கிடைக்கும். வஸ்திரத்தினால் தாரித்திரியம் நீங்கும். புஷ்பமாலை ஐஸ்வர்யமளிக்கும். நைவேத்தியத்தினால் அரசபதவி கிடைக்கும். தாம்பூலத்தினால் குறைவற்ற பயன் உண்டாகும்.

**திரவிய குறைவினால் ஏற்படும் தீமைகள்**

சந்தனம் இல்லையேல் குஷ்டம் உண்டாகும். புஷ்பமில்லையேல் குலமளியும். தீர்த்தமில்லாவிடில் சுகக்குறைவு உண்டாகும். தீபமில்லையேல் தனநாசம் உண்டாகும். நைவேத்தியமில்லாவிடில் பஞ்சம் உண்டாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.


**பூசையில் ஐந்தொழில்**

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்தியம் காத்தல் தொழில், பலிபோடுதல் சங்காரத் தொழில், தீபம் தீரோபாவத் தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

**பூஜையால் அடையப்படும் நன்மை**


யாகம், தவம், தானம், புண்யதீர்த்தாடனம் இவைகளாலுண்டாகும் பலனுக்கு நூறுகோடி பயன் சிவலிங்கர்ச்சனையால் உண்டாகும். மற்றும் பூசகருடைய தவவலிமையாலும் பூசையின் அதிகத்தினால் பிம்பத்தின் லக்ஷணத்தினாலும் சிலையானது தெய்வத் தன்மையடைகிறது.

**சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களின் அற்புதங்கள்



மக்கட் பிறப்பின் மாண்புடையதாக்க வேண்டுமானால் சிந்தனையும் வந்தனையும் வேண்டற்பாலதாகும். மனிதன், என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே இறைவனை வந்திக்கவுந் தொடங்கிவிட்டான். தனது உயிர்க் கொள்கையாக அறிவு, இச்சை, செயல் மூன்றையும் போற்றினான். அறிவினாற் பொருளீட்டி இச்சையினால் இறையின்பம் நுகர்ந்து செயலினால் அறம் புரிந்து வாழுதல் தனது உயர்ந்த கடனெனக் கண்டான். இந்த வகையில் செம்மையாக வாழ்ந்தோர் செம்பொருளாம் இறைவனைக் கண்டனர். மற்றவர்களும் காண வழிகாட்டினார். கடவுட் கொள்கையின் பயன் கடவுளைக் காணுதலினாலேயே நிறைவு பெறவேண்டும். கடவுள் இருக்கிறார் என்று மட்டும் சொல்லி விட்டாற் போதாது. காண்பதற்குரிய வழிகளிலே நின்று அவரைக் காண முயலவேண்டும்.

பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படரொளிப் பரப்பாக விளங்குகின்ற இறைவன் சிறப்பாக எழுந்தருளி அருள் புரியுமிடங்கள் இரண்டு. ஒன்று கற்கோயில்; இரண்டாவது மனக் கோயில், கற்கோயிலிலே எழுந்தருளியிருக்கும் பெருமானைப் புறக்கண்களாற் கண்டு வழிபடுகிறோம். உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை அகக்கண்களாற் கண்டு வழிபடுகிறோம். புறக்காட்சியும் அகக்காட்சியும் ஒன்று படாவிட்டால் வழிபாட்டால் உண்மைப் பயனை அடைய முடியாது.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான்"

என்று மணிவாசகப் பெருந்தகையார் போற்றுகிறார். புறக்காட்சியில் நம்மை வழிப்படுத்த வந்த நாவரசர்.

"கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றனை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ"

என்று பாடி, அடுத்துத் திருவங்கமாலை முடிவிலே,

"தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தெடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

என முடிவுசெய்கிறார். புறத்திலே தரிசித்த பெருமானைஅகத்திலேயும்இருத்தித்தரிசிப்பது வேண்டற்பாலது. ஆனால், புறக்காட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தாலன்றிஅகக்காட்சி சிறக்காது. இதன் காரணமாகவே ஆயிரமாயிரமாலயங்கள் நம் நாட்டில் தோன்றின.

நம் நாட்டிலே பக்திநெறியை வளர்ப் பதற்குரிய வாயில்கள் ஆலயங்க ளேயாகும். ஆ லயம் எனப் பிரித்தால் உயிர்கள் இலயித்தற்குரிய இடங்களே ஆலயங்கள் எனக் கருத்துத்தருகிறது. கோயில் என்று குறிப்பிடும்போது மேலான தலைவனுடைய இருப்பிடம் என்பதை அறியத்தருகிறது. அமைதியையும் தூய்மையையும் எடுத்துக்காட்டும் பக்தி நிலையங்களாக இவை விளங்குகின்றன. அவற்றைச்சார்ந்து வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனாகிய இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் மாண்புடைச் செயலாகும். உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். பார்க்கும் இடமெங்கணும் நீக்கமற நிறைந்துநிற்கும் பரம்பொருளைக் கோயிலில்தான் சிறப்பாக உணர முடிகிறது. ஏனைய இடங்களில் இறைதரிசனம் பெறும் பக்குவம் உயர்ந்த ஞானிகளுக்கே சாலும்.

"தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியும்நீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தனுள் மைந்துநீ
வேதத்து முதல்நீ பூதத்துள் ஐந்துநீ
வெஞ்சுடர் ஒளியும்நீ செஞ்சுடர் அளியும்நீ
அனைத்தும்நீ அனைத்திலும் பொருளும்நீ"

என்று பாடிய சங்கப் புலவரின் பாவிலே, பெருமானின் வியாபகத்தைக் காண்கிறோம். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணும் பெற்றியுடையோர் ஒரு சிலரே. எனவே, மற்றையோருக்குப் கோயில்களே இறை நினைப்பை ஊட்டு கின்றன. விக்கிரகங்களும் வடிவங்களும் அங்கு அமைந்திருப்பதால் இறைக்காட்சிக்குத் துணைபுரிகிறது.

"திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவ னாங்கே"

என்ற வாக்கை ஊன்றி நினைக்கவேண்டும். தனித்துநின்று உருகுவதிலும் பார்க்க அன்பர் களுடன் கூடிநிற்கும்போது உருக்கம் மிகுந்து தெய்வக் காட்சியில் திளைக்க வைக்கிறது.

"பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணம் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழுவதும் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கையானைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ்கண்டேன் கொன்றை
கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநாம் கண்ட வாறே"

என்பது அப்பருடைய திருப்பாட்டு. பண்டைக்காலத் தமிழ் மக்கள் வாழ்க் கையிற் கோயில்களே முதன்மையாக இடம் பெற்றிருந்தன. அநாதைகள், அடியார்கள், நோயாளர்கள், ஆகியோருக்கு ஆறுதலளிக்கும் நிலையங்களாகவும் கலை வளர்ச்சிக்குரிய ஸ்தாபனங்களாகவும் அவை விளங்கின.

இறைவனுடைய இருவகைப்பட்ட நிலைகள் சொரூபம், தடத்தம் எனப்படும். சொரூபம் எமது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட நிலையாகும். தடத்தம் என்பது, மனம் வாக்குக் காயங்களுக்கு உட்பட்டவனாக இறைவன் நின்று அருள் புரியும் நிலை. இந்த நிலையில் மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான் பெருமான். அவை அருவம், அருவுருவம், உருவம் என்பன.

"உருமேனி தரித்துக் கொண்ட
தென்றலும் உருவி றந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமேனி யதுவுங் கண்டோம்
அருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோம்
செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு தானே."

மூவகைத் திருமேனிகளையும் இறைவன் கொண்டது, எமது கருமேனியைக் கழிக்கவேண்டுமென்ற கருணையினாலேயே. எமது பிறவியையே கருமேனியென்று குறிப்பிடுகிறார். அருணந்திசிவம். உருவத்திருமேனியுடன் விளங்குகின்ற ஆலய அமைப்பு, உடம்பின் அமைப்பைப் போன்றதாகவே அமைந்துள்ளது. தூலம், சூக்குமம், காரணம் என்பவற்றை விளக்க மூன்று வீதிகளும், பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்கக் கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பனவும், தூலலிங்கமாகக் கோபுரமும், உள்ளமாகக் கர்ப்பக்கிரகமும், ஆறு ஆதாரங்களாகக் கொடி மரந் தொடக்கம் மூலஸ்தானம் வரை அமைந்த பகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள். பிண்டம் என்பது எம் முடல். அண்டம் உலகமாகும். பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய ஆலயம் உலகமே. எனவே, மூன்று கோயில்களைக் காணலாம். உலகமாகிய கோயில் கற்கோயில், மனக்கோயில் என்பவை அவை.

கற்கோயிலின் அமைப்பைக் கூர்ந்து கவனிப்போமானால் அதில் பல உறுப்புகளைக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் இடம் விமானம் எனப்படும். இதன் மேற்கூரை ஸ்தூபி எனப்படும் ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிரகம் எனப்படும். அதனை அடுத்திருக்கும் மண்டபங்கள் அர்த்த மண்டபம் என்றும் மகா மண்டபம் என்றும் இருவகைப்படும். இதைவிடச் சபாமண்டபம், வசந்த மண்டபம், வெளி மண்டபம் என்பனவும் அமைக்கப்படும். சுற்றுப் பிரகாரத் தெய்வங்களின் அமைப்பும், கொடிமரம், பலிபீடம், நந்தியின் அமைப்பும் ஆலயங்களில் மிக முக்கியமானவை. இதைவிடத்தூலலிங்கம் எனப்படும் கோபுரமே கோயில் வாயிலாக அமைகிறது. கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

ஆலயங்களில் நல்ல முறையிற் கட்டடங் களும் விக்கிரகங்களும் அமைந்தால் மட்டும் போதாது. காலத்துக்குக் காலம் குடநீராட்டி நித்திய நைமித்தியங்களைச் செய்து விக்கிரகங்களுக்குத் தெய்வீக சக்தியைக் கொடுக்க வேண்டும். மின்விசிறியோடு மின்சார இணைப்புச் சேரவிட்டாற் காற்றின் அசைவை உணர முடியாது. அதேபோன்று மந்திரம், மஞ்சனம், தூபம், தீபம் முதலியவற்றினாற்றான் விக்கிரகத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுகிறது. திருவிழாக்களினால் ஆலயங்கள் சிறப்படைய ஆலயங்களினால் ஊர் சிறப்படைகிறது. ஊருக்குச் செய்கின்ற பெருஞ் சாந்தி போல் விளங்குவன விழாக்களே. நாளாந்தம் நிகழும் நித்திய பூசைகளில் நிகழும் குறைகளை நிவர்த்தி செய்வதற்குரிய மார்க்கம் நைமித்திய விழாக்களேயாகும்.

"சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்றார் வள்ளுவர். இங்கே சிறப்பு என்பது நைமித்திக விழாக்களையும், பூசனை என்பது நித்திய பூசைகளையுங் குறித்து நிற்கின்றது. நித்தியத்தின் தாழ்வு, குறைகளைத் தீரச் செய்வது நைமித்திகமாதலின், 'சிறப்பு' என்பதை முற்கூறினார் என்பர் உரையாசிரியர். இறைவனைப் பற்றி அதிகமாகத் தியானிக்க வாய்ப்பளிக்கும் நாட்கள் விழா நாட்களே. மனிதனுடைய பந்த பாசத்தின் விடுமுறை நாட்கள் இவையென்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. சிறந்த ஒரு ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளத்தெளிவை ஊட்டும் நாட்கள் விழா நாட்களே. இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களை ஒவ்வொருவரும் தமது வாழ்ந்த நாட்களாகக் கருதவேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாடல் தரும் விளக்கத்தைக் காண்போம்.

"புல் நுனிப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளில்லை நாளும்
என் னெக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன் சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை யருளாய்
இடை மருதுறை எந்தை பிரானே."

நாயன்மார்கள் எல்லோரும் தத்தமக் கேற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளிலே நின்று பக்குவ முதிர்ச்சி யடைந்தவர்களாவர். ஆனால் அந்த நிலையிலும் ஆலய வழிபாட்டை அவர்கள் மறக்கவில்லை. தேவார முதலிகள் மூவரும் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசித்தார்கள் என்று பெரிய புராணத்திற் படிக்கின்றோம். நாவரசர் கன்னியாகுமரி தொடக்கம் கயிலைமலை வரை காலாலே நடந்து தரிசனஞ் செய்தார். 'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு' என்று வழிப்படுத்தினார். தொண்டு கிழவரான பின்பும் கயிலையைக் காணவேண்டும் என்ற விருப்போடு சென்று மலையிலேற முடியாமையினால் உருண்டும், புரண்டும், தவழ்ந்தும் ஏறிச் சென்றார். முடியாத நிலையில் சோர்வடைந்திருந்த சமயத்தில் இறைவன் முனிவர் வடிவிலே தோன்றி விசாரித்ததும், கயிலை காண்பதற்கரியதெனக் கூறியதும் இதனைக் கேட்ட அப்பரடிகள்.

"ஆளும் நாயகன் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

எனக்கூறினார். அவருடைய உறுதிப் பாட்டை எம்பெருமான் போற்றி 'அங்கே யொரு தடாகமமைத்து மூழ்கச் செய்து திருவையாற்றிலே எழுந்து கயிலைக்காட்சி யைக் காணலாம்' என அருள்புரிந்தார். அந்நிலையிற் கயிலைக் காட்சியைக் கண்டு உய்ந்தார் அப்பர்பெருமான். சிவாலய வழிபாட்டின் மேன்மையை உலகுக்குக் காட்டு முகமாக ஆளுடைய பிள்ளையாரும் தமது பிஞ்சுப் பாதங்கள் நோவப் பல தலங்களுக்கும் யாத்திரை செய்யத் துணிந்தமையைப் பொறாத எம்பெருமான், முத்துப்பல்லக்கு ஒன்று உதவி யாத்திரைக்கு வழிகாட்டினார். அவர் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் தோறும் சென்று நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருக்கயிலையிற் கொடுத்த வாக்குறுதியின்படி திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொண்ட பெருமானை அறியாத அந்தணர்கள் எல்லோரும் முதிய அந்தண வேடத்தில் வந்தவரைக் கண்டு, நீர் இருக்கும் இடம் எது? என்று வினாவினார். அப்பொழுது வந்தவர், இருப்பிடத்தைக் காட்டுகிறேன் வாருங்கள் என்று அழைத்துச் சென்று திருவருட்டுறை என்ற கோயிலுக்குள் புகுந்தார். அப்படியே மறைந்து விட்டார். நின்றவர்கள் திகைத்தார்கள்.

"திருவருட் டுறையே புக்கார்
கண்டிலர் திகைத்து நின்றார்."

என்று பெரியபுராணத்திற் காண்கிறோம். எம்பெருமான் சிறப்பாகத் தான் எழுந்தருளியிருக்கும் இடம் ஆலயமே என்பதை அறிவுறுத்தியமைக்கு இது ஒரு சிறந்த சான்றாகும். மூவர் பெருமக்களுக்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலைக் கோலம் மூன்று இடங்களிலே காட்டப்பட்டது. திருஞானசம்பந்த மூர்த்திநாயனாருக்குச் சீர்காழியிலும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவையாற்றிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவெண்ணெய் நல்லூரிலும் காட்சி கொடுத்தார் பெருமான். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் தோறுஞ் சென்று தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி அவ்வத் தலங்களின் மகிமையை எடுத்து விளக்கியுள்ளனர்.

சிவாலய தரிசனஞ் செய்யும் முறைகளை நாவலர்பெருமான் தமது சைவ நூல்களில் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். ஆலயத்திற்குச் செல்வோர், ஆலய வழிபாட்டு முறையை நன்கு அறிந்துகொண்டு அதன்படி சென்று வழிபட்டே நலம் பெறல்வேண்டும். சிவாலய தரிசனத்தில் நமஸ்காரம், பிரதட்சணம், நிவேதனம், தோத்திரம், தியானம் என்பன செய்தல் வேண்டும். நமஸ்காரம் என்பது இரு கைகளையும் குவித்து சிரசிற்கு மேலாயினும், முகத்திற்கும் மார்பிற்கும் நேராக ஆயினும் வைத்துக் கும்பிடுதலும் தலைவணங்குதலுமாம். ஆயினும் நிலத்திலே விழுந்து வணங்குவனவாகிய அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் முக்கியமானவை.

இவைகளைக் கோவிலின் உட்புறத்திலே செய்வதிலும் பார்க்க வெளியிலேதான் செய்தல் வேண்டும். ஏனெனில் உட்புறத்தில் எப்பக்கத்திலும் மூர்த்திகள் இருப்பார்கள். ஆகையால் எந்தத் திசையிற் கால் நீட்டினாலும் குற்றமாகும். இதனால் உட்புறங்களிற் கும்பிடுதலும் தலை வணங்குதலுமே செய்தற்குரியன.

பிரதட்சணம் என்பது, கோயிலை வலமாகச் சுற்றி வருதல். இதனை வெளித் திருச்சுற்று இல்லாத கோயில்களில் உள் திருச்சுற்றாகும். பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பன நிவேதனப் பொருள்களாம். காபம், தீபம், பத்திரபுஷ்பம், பூமாலை முதலியன நிவேதனத்தின் அங்கமாகும். இவைகளை அர்ச்சகர் வாயிலாகப் பெருமானுக்கு வைத்துத் தரிசித்தல் வேண்டும். தோத்திரம் என்பது, தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளைப் பாடி இறைவனை அன்போடு வழிபடுதலாகும். வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டரினத்தகத்தானாக இறைவன் விளங்குகிறான். தியானம் என்பது முடிவிலே செய்யப்படவேண்டியது. இது ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபித்து அமைதியோடு மனத்தை இறைவனிடத்துச் சேர்த்து அவனையே நினைந்திருக்கும் நிலையே இதுவாகும். இந்த முறையில் இறைவனை வழிபட்டால் நிறைந்த பலனைப் பெறலாம்.



எனவே, ஆலயங்களே இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் சிறந்த இடங்கள் என்பதும் அவ்விடங்களை மையமாகக் கொண்ட கலை, கலாசாரம், பண்பாடு என்பன வளர்க்கப் பட்டன என்பதும் திருக்கோயில் வழிபாட்டை முறைப்படி ஆற்றி உய்தியடைய வேண்டுமென்பதும் சைவ மக்களின் கவனத்திற்குரியவையாகும்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**
துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் திருவுருவ விளக்கம்



| | | |
|---|---|---|
| 1. | **யானை முகம்** | : ஓம் என்னும் பிரணவ வடிவிலுள்ளது. |
| 2. | **அங்குசம்** | : மதயானையை அடக்கும் ஆயுதம் ஆணவம் மிக்க ஆன்மாக்களை அடக்குபவர். |
| 3. | **பாசம்** | : உயிர்களைக் கட்டிக்காப்பவர் |
| 4. | **தந்தம் அபயம்** | : தியாகத்தின் சின்னம் அடியார்களை காத்தருளல். |
| 5. | **வரதம்** | : உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்பவர். |
| 6. | **மோதகம்** | : பஞ்ச பூதங்களின் வடிவிலான உலகத்திற்கு தாமே ஆதாரம் என உணர்த்தி நிற்றல். |
| 7. | **பருத்த தொந்தி** | : பிரபஞ்சம் முழுவதும் தனக்குள் அடக்கம். |
| 8. | **எலி வாகனம்** | : ஞானம் பெற்ற ஆன்மாக்களை தாமே ஆட்கொள்பவர் என்னும் தத்துவம். பெரிதுக்குப் பெரிதாகவும் சிறியதற்குச் சிறிதாகவும் விளங்கும் தனிப்பெருந்தன்மை. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் திருவுருவம்



இறைவனுக்கு உருவம் இல்லை. இறைவனோ எல்லா உருவங்களிலும் உள்ளார்.

உருவமற்றவர் இறைவன். உருவமுள்ளவரும் இறைவனே. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவன்.

ஒலிகளில் ஓங்காரமாகி உள்ளவர் பிள்ளையார். வரிவடிவங்களில் பிள்ளையார் சுழியாக உள்ளவர். பிரணவமாயும் பிரணவப் பொருளாகவும் உள்ளவர். வேதங்களின் முதலாக உள்ளவர். வேதங்களாகவும் உள்ளவர் பிள்ளையார்.

தன்னை நினைப்பவர், தன்னை வழிபடுபவர், தன்னைத் தியானிப்பவர், இவர்களின் உள்ளத்தில் பிள்ளையார் எப்படித் தோன்றுகிறார்? தத்துவார்த்த மூர்த்தியாகத் தோன்றுகிறார். பொருள் பொதித்த உருவமாகத் தோன்றுகிறார்.

விலங்கு வடிவமாகத் தோன்றுகிறார்.

மனித வடிவமாகத் தோன்றுகிறார்,

பூத வடிவமாகத் தோன்றுகிறார்.

தேவர்கள் வடிவமாகத் தோன்றுகிறார்.

விலங்காய், மனிதராய், பூதமாய்த், தேவராய் இந்நான்கு படைப்புகளின் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார்.

யானைத் தலையும், சுளகுச் செவியும், தும்பிக்கையும் யானையாகிய விலங்கிடம் இருந்து பெற்றார்.

புருவ வடிவத்தையும் கண்களையும் மனிதரிடம் இருந்து பெற்றார்.

பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூதகணத்தில் இருந்து பெற்றார்.

நான்கு கைகளையும் தேவர்களிடம் இருந்து பெற்றார்.

"ஐந்து கரத்தனை, யானை முகத்தனை இந்து இளம் பிறை போலும் எயிற்றனை, எனத் திரு மூலர் பிள்ளையாரின் வடிவத்தைத் திருமந்திரத்தில் எடுத்துக்கூறி உள்ளார்.

**திருவடிகள்**

இறைவனின் திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே உயிர்களின் நோக்கம், பிள்ளையாரின் திருவடிகள் உயிர்கட்கு அபயம் கொடுக்கும் திருவடிகள்.

உண்மையான அறிவு எதுவோ அதுவே ஞானம், உயிர்கள் பாசங்களால் கட்டப்பெற்றுத் துன்பப்படாமல், இறைவன்பால் உயிர்களை வழிப்படுத்துவதே ஞானம்.

ஊழ்வழி வினைகள் அறவேண்டும். வருவினையும் செய்வினையும் நீங்கவேண்டும். ஞானம் பொருந்தினால் வினைகள் தாமாக நீங்கும். துன்பம் போகும். இன்பம் பெருகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன. உயிர்களின் துன்பத்தைப் போக்குகின்றன. இன்பம் பெருக்குகின்றன.

**வயிறு**

பிள்ளையாரின் வயிறு பெரு வயிறு. பேழை வயிறு. அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கமாகி உள. பரவெளியாக உள்ள அனைத்தும் அடங்கி உள. அண்டங்கள் யாவும் அடங்கி உள. அனைத்து உலகமும் அடங்கி உள. அனைத்து உயிர்களும் அடங்கி உள.

பிள்ளையாரின் திருவுருவம் அனைத்தையும் அடக்கிய திருவுருவம். பிள்ளையார் எங்கும் எதிலும் உள்ளார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து வியாபித்து நிற்கிறார். இந்தத் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கும்.

**ஐந்து வகைகள்**

பிள்ளையாரின் நான்கு கைகளுடன் தும்பிக்கையும் சேர்ந்தால் ஐந்து கைகள் தொடர்ச்சியாக, இடையீடு இன்றி நடைபெறும் ஐந்து தொழில்களையே ஐந்து கைகளும் குறிக்கின்றன.

ஐந்து கைகளுள் ஒரு கையில் பாசம் உள்ளது.

ஒரு கையில் அங்குசம் உள்ளது.

ஒரு கை அஞ்சேல் என அபயம் காட்டி நிற்கிறது.

ஒரு கையில் மோதகம் உள்ளது.

மற்றது தும்பிக் கையாகும்.

பற்றுள்ளதைப் பிறப்பிப்பதும் பாசம், பிணித்து நிற்பதும் பாசம், படைத்தலைக் குறிப்பது பாசத்தைத் தாங்கிய கை. ஐந்தொழில்களுள் முதலாவது படைத்தல் தொழில்.

பிறவி எடுத்தாலே வினை சூழ்ந்து கொள்கிறது. துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருகின்றன. இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு ஓடி, பிறவியில் இருந்து விடுபட வரும் உயிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிக்கும் கை அபயக் கை. காத்தல் தொழில் ஐந்தொழில்களுள் இரண்டாவது.

அங்குசம் அழித்தலைக் குறிக்கும். பிள்ளையாரின் ஒரு கையில் அங்குசம் உண்டு. ஐந்தொழில்களுள் மூன்றாவதாகிய அழித்தல் தொழிலை அங்குசம் தாங்கிய கை செய்கிறது.

அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளித்த, அபயம் பெற்ற உயிர்கட்கு அருளலைச் செய்வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கீழ் நோக்கி இருப்பதன் காரணம் பிறவிக்கு அஞ்சி வரும் உயிர்கள். அடையுமிடம் திருவடியாகிய முத்திப் பேறு என்பதை உணர்த்தவேயாம். ஐந்தொழில்களுள் நான்காவது அருளல் தொழில்.

ஐந்தொழில்களுள் ஐந்தாவது மறைத்தல் தொழில் திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கையே.

பிள்ளையாரின் முகத்தில் இரு கொம்புகள் உள. இடது பக்கத்தில் உள்ள கொம்பு முழுமையான ஆழமான கொம்பாகும்.

வலது பக்கத்தில் உள்ள கொம்பு ஒடிந்த கொம்பாகும். வலது பக்கத்தில் முழுமையான நீட்டுக் கொம்பு இருந்தது. பிள்ளையார் பாரதக் கதையை எழுதியவர் வியாச பகவான் சொல்ல எழுதியவர். அப்பொழுது, வலது கொம்பை உடைத்து எழுத்தாணியாகப் பயன்படுத்தி எழுதினார்" இதனால் வலது கொம்பு உடைந்த கொம்பாகவே உள்ளது.

இடது கொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாசஞானத்திற்குரியது.

சுளகு போன்ற இரு செவிகள் பிள்ளை யாருக்கு உண்டு. அகன்று விரிந்த இச் செவிகள் யானையின் செவிகளைப் போன்றவை.

உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் இச்செவிகள் காக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைகளினால் வரும் துன்பங்களில் இருந்து போக்கி அருள்கின்றன.

பின்ளையாருக்கு மூன்று கண்கள் உள. வழமையான இரு கண்களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாக உள.

பிறைச் சந்திரனைத் தனது முடியில் பிள்ளையார் அணிந்துள்ளார். குற்றங்கள் தேய்ந்து உடல் சிறுத்து, வட்டமான சந்திரன் பிறைவடிவம் கொண்டது.

அறியாமை என்னும் இருள் தேய, ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல்வைப்பார் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை எடுத்துக்காட்டுகிறது.

பிள்ளையார் பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தி பாம்பு படம் விரித்தது போல எழுந்து பரந்து நின்று, உயிர்களைச் சிவ மயமாக்குகின்றது.

இப்படியாக, பிள்ளையார் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக எடுத்த திருமேனியின் திருவுருவத்தில் சிவதத்துவங்கள் அடங்கி உள்ளன.

நாம் பிள்ளையாரின் திருவுருவத்தை நினைந்து, வழிபட்டு, தியானிக்கும் பொழுது நமக்கு ஈடேற்றம் உண்டு. ஆன்ம ஈடேற்றம் உண்டு. உயிர் உயர்ச்சி உண்டு.

ஓங்கார ஒலியானவன்

பிள்ளையார் சுழி வரி வடிவானவன்

விலங்கு, மனிதன் பூதர், தேவர் இவர்கள்

இணைந்த திருவுருவத்தைக் கொண்டவர் அவரே பிள்ளையார்.

- கஜமுகாசுரனுடன் நடந்த போரின் போதே பிள்ளையார் தனது வலது கொம்பை ஒடித்தார் என்றும் கூறப்படு கின்றது.

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் 32 தோற்றங்கள்

### பால கணபதி



வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு,
மோதகம் இவற்றை வைத்துக்
கொண்டிருப்பவரும், பால சூரியனைப் போன்ற
சரீர காந்தியை உடையவருமான பால கணபதி.

### தருண கணபதி



கைகளில் பாசம், அங்குசம், அபூபம்,
விளாம்பழம், நாவல்பழம், தன்னுடைய ஒரு
தந்தம், நெற்கதிர், கரும்பு வைத்துக்
கொண்டிருப்பவர் வீர கணபதி.

### பக்தி கணபதி



தேங்காய், வாழைப்பழம், மாம்பழம்,
பாயாசத்துடன் சரத்கால சந்திரனின் வெண்ணிற
சரீரத்தையுடைய பக்தி கணபதி.

### வீர கணபதி



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில்,
சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம் கதை,
அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தம், மழு,
த்வஜம் தரித்திருக்கும் வீர கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி கணபதி




சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவராக இருப்பவரும், பாசம், அங்குசம் இவற்றை வைத்துக்கொண்டிருப்பவருமான பயத்தைப் போக்கும் சக்தி கணபதி.

## த்விஜ கணபதி




புத்தகம், ஜெபமாலை, தண்டம், கமண்டலம் உடையவரும், கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில் அணிந்திருப்பவரும், சந்திரனின் வெண்ணிறமுடையவருமான நான்முக த்விஜ கணபதி.

## சித்தி கணபதி



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவருமான சித்தி கணபதி.

## உச்சிஷ்ட கணபதி



இவரை "விஜய கணபதி" என்று ஸ்ரீதத்துவ நிதி கூறுகிறது. இவருக்கு மற்றொரு தோற்றமும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷிப்ர கணபதி




தந்தம், கற்பக விருட்சத்தின் கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் இவற்றைத் தரித்துக்கொண்டிருப்பவர். அழகான சிவந்த சரீர காந்தியையுடைய ஷிப்ர கணபதி.

## விக்ன கணபதி



சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்துப் போல சுருட்டிய மாலை ஆகியவற்றுடன் பொன்மேனி ரூபமாக விளங்கும் விக்ன கணபதி.

## ஹேரம்ப கணபதி



அபய வரத முத்திரைகளுடன் பாசம், தந்தம், ஜெபமாலை,அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவற்றைத் தரித்துக்கொண்டு சிம்ம வாகனத்தில் ஐம் முகங்களுடனிருப்பவர் ஹேரம்ப கணபதி.


## லக்ஷ்மி கணபதி



மிகவும் பிரகாசிக்கின்ற ஜோதியாகிய அமிருதப் பிரவாகத்தையுடையவரும், நீலோத்பலத்தைக் கையில் கொண்டவரும், இரு தேவிகளை இருபக்கத்திலும் கொண்டவரும், வரதஹஸ்தத்தோடு இருப்பவர் லக்ஷ்மி கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்கா கணபதி




எட்டுக்கை, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம், பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றைக் கொண்டவர், பொன்னிற மேனியர்.

## சங்கடஹர கணபதி



இளஞ்சூரியனின் நிறத்தோடு இடது தொடையில் அம்மையை உடையவர். நீல நிற மேலாடை அணிந்தவர்.

## மகா கணபதி



மாதுளை கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர். தந்தம், ரத்னகலசம் இவற்றை ஏந்தியவர். செங்கதிர் நிறத்தவர், முக்கண்ணர், பிறை முடியர்.


## விஜய கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருத்த கணபதி



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி
ஆகியவற்றை ஏந்திய கற்பக விருட்சத்தினடியில்
இருக்கும் நர்த்தன கணபதி. வேறு தியானத்தில்
ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.

## ஊர்த்துவ கணபதி



செங்கழுநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு
வில், அம்பு, தந்தம் இவற்றைக் கரங்களில்
கொண்டவரும், தங்க நிறம் கொண்டவருமான
ஊர்த்துவ கணபதி.

## ஏகாட்சர கணபதி



செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர்
மாலையர், பிறை முடியர், முக்கண்ணர்,
குறுந்தாளர், குறுங்கையர், மாதுளை பாசம்,
அங்குசம், வரதம் இவற்றைத் தாங்கியவர்.


## வர கணபதி



செவ்வண்ணர், யானை முகத்தவர்,
முக்கண்ணர், பிறை முடியர், பாசம், அங்குசம்
தரித்தவர், தேன் நிறைந்த கபால பாத்திரத்தை
ஏந்தியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரயாக்ஷ்ர கணபதி



பொன்னிறமானவர், நான்கு கரத்தவர், பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர், துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

## க்ஷிப்ரபிரசாத கணபதி




பாசம், அங்குசம், கற்பகக் கொடியின் சுவைதரும் மாதுளம்பழம், துதிக்கையில் தாமரை மொட்டு இவற்றைத் தரித்தவர். பேழை வயிற்றை உடையவர்.

## ஹரித்திரா கணபதி



மஞ்சள் நிறமானவர், நான்கு கரத்தவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

## ஏகதந்த கணபதி



பேழை வயிற்றுடன் நீல மேனியர், கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றை உடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிருஷ்டி கணபதி




பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர், சிவந்த திருமேனியர்.

## உத்தண்ட கணபதி



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர். சிவந்த மேனியையுடையவர்.

## ரணமோசன கணபதி



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு நிற மேனியர், செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.


## துண்டி கணபதி



அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிமுக கணபதி




தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர், மயில் நீல மேனியர், செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர்.

## மும்முக கணபதி




வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர்.

## சிங்க கணபதி



வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிற மேனியர்.

## யோக கணபதி



யோக நிலையில், யோக பட்டம் தரித்து, இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து, பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்

விக்கினங்களை நீக்குபவர் விநாயகர். தனக்கு மேலாக ஒரு நாயகன் இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகனாக விளங்குபவர். பிரணவ சொரூபியும் அவரே! ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு 'ஓம்' என்னும் பிரணவ நாதமேயாகும். அந்த 'ஓம்' என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திருவுருவமாகும். அதனால் 'ஓங்கார ரூபன்' என்று அப் பெருமான் அழைக்கப்படுகிறார். ஓங்காரத்துக்கு இடப்புறம் மட்டும் ஒரு கோடு இருக்கிறது. வலப்புறம் கோடு இல்லை. விநாயகப்பெருமானுக்கு இடப்புறம் மட்டும் கொம்பு உண்டு. வலப்புறம் இல்லை. எனவே, விநாயகப் பெருமான் 'பிரணவ ரூபி' என்பது பின்வரும் பாவால் நன்கு விளங்கும்.

'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே'

விநாயகருக்குப் பிள்ளையார், கணபதி, விக்கினேசுவரர், ஏரம்பர், மூத்த நாயனார் முதலிய பல திருநாமங்கள் உள்ளன. சிவகணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதனால் 'கணபதி' என்னும் திருநாமமும், மெய்யன்போடு தன்னை வழிபாடு செய்பவர்களின் கருமங்களை இடையூறின்றி இனிது நிறைவேறச் செய்வதனால் 'விக்கினேஸ்வரன்' என்னும் திருநாமமும் வழங்கப்பட்டு வருகிறது.

விநாயகப் பெருமானது அருளை வேண்டி அனுட்டிக்கப்படும் விரதங்களுள் வெள்ளிக்கிழமை, விநாய சதுர்த்தி, விநாயக சஷ்டி ஆகிய மூன்று விரதங்களும் முக்கியமானவை. இந்த விரதங்களைப்



பக்தி சிரத்தையோடு தவறாது அனுட்டித்து வருபவர்களுக்கு விநாயகன் அருளால் சகல நன்மைகளும் உண்டாகும். நீண்ட வாழ்நாளும் நோயற்ற வாழ்வும் கிடைக்கும். எண்ணிய எண்ணங்கள் கைகூடும். சிறந்த கல்வியும் ஞானமும் வீடுபேறும் கிடைக்கும்.

எந்தக் கருமமும் இடையூறின்றி இனிது நிறைவேறுதற் பொருட்டு விநாயகன் அருளை வேண்டி வணங்குதல் தொன்று தொட்டு வரும் அனுஷ்டானமாகும். விநாயகரை வழிபடும் முறைகளிலே சிரசிலே குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன சைவப்பெருமக்களால் பாரம்பரியமாகக் கைக்கொள்ளப்பட்டு வரும் பண்பாட்டுப் பழக்கங்களாகும். விக்னேஸ்வரப் பெருமான் சந்நிதியில் அடியார்கள் சிரசிலே இரு கைகளையும் மாறிப் பொத்திப் பிடித்து மூன்று முறை குட்டிக் கொள்ளுதலையும், இரு செவிகளையும், இரு கைகளாலும் மாறிப் பிடித்துக் குந்தி எழுந்து தோப்புக்கரணம் போடுதலையும் இன்றும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. 'தோர்பி கர்ணம்' என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. 'தோர்பி'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் கைகளால் என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது. 'தோர்பி கரணம் என்றால் கைகளால் காதைப் பிடித்துக்கொள்வது. விநாயகப் பெருமானையே முழுமுதற் கடவுளாகக் கருதி உபாசிக்கிற மதத்திற்கு காணாபத்தியம் என்று பெயர்.

தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியை அறியாதவர் ஒருவருமிலர். விநாயகப் பெருமானை உள்ளன்புடன் பூசிப்பவள். அல்லும் பகலும் அனவரதமும் அப் பெருமானது சிந்தனையிலே திளைப்பவள். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி வேண்டு கின்றாள். விநாயகப் பெருமானே! துங்கக் கரிமுகத்துத் தூமணியே! ஐயனே! பால், தெளிதேன், வெல்லப்பாகு, பருப்பு முதலிய நான்கு பொருள்களையும் கலந்து உனக்கு நிவேதிப்பேன். நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்று சொல்லப்படும் சங்கத்தமிழ் மூன்றையும் தருவாயாக, என்று அன்புடனும் பணிவுடனும் பாட்டி எம்பெருமானிடம் உள்ளம் உருகிக் கேட்கின்றார்.

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்
கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.'

சங்கத் தமிழின் இனிமையைப் பாட்டி நன்கு சுவைத்திருக்க வேண்டும்.

சேரமான்பெருமாள் நாயனார் திருக்கைலை செல்வதைக் கேள்வியுற்ற ஔவைப்பாட்டி தானும் உடன் கைலைக்குச் செல்ல வேண்டும் என்று பெரிதும் விரும்பி வழக்கமாகச் செய்துவரும் விநாயக பூசையை வேகமாகச் செய்தாள். அமைதியாகப் பூசை செய். உனது விருப்பம் நிறைவேறும் என்று அசரீரி எழுந்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரும் இல்லை விநாயகப் பெருமானே இவ்வாறு திருவருள் பாலித்தான் என உணர்ந்து அமைதியாகப் பூசையைத் தொடர்ந்து செய்தாள். கைலையின் நினைவையே பாட்டி மறந்து விட்டாள், சேரமான் பெருமாள் நாயனாரைப் பற்றிய சிந்தனையும் அகன்றது. தன்னையே மறந்து பெருமானுடைய திருவருட் பேற்றிலே திளைத்து 'சீதக் களப ......... என்று தொடங்கும் விநாயகர் அகவலைப் பாடி உள்ளன்போடு துதித்தாள். 'வித்தக விநாயகா விரைகழல் சரணே' என்று பாடி முடித்ததும் விநாயகப் பெருமான் தமது துதிக்கையால் பாட்டியைத் தூக்கி கைலையம்பதியிலே கொண்டு சேர்த்தார்.

எமது வெவ்வினையை வேரறுக்கவல்லவர் விநாயகப் பெருமானே! வேட்கை தணிவிப்பவரும் அவரே! விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் அவரே! எனவே, எழுபத்திரண்டு அடிகளைக் கொண்ட இந்த விநாயகர் அகவலைத் தினந்தோறும் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்துவரின் ஔவைப் பாட்டிக்கு அருள் செய்த விநாயகன் நமக்கும் நிச்சயம் அருள்புரிவான்.

'அத்தி முகவனை நித்த நினைப்பவர்
சித்த மகிழ்வோடு முத்தி பெறுவரே'

**வை. அநவரதவிநாயகமூர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சமுக விநாயகர்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தும் இறைவனின் அருட்செயல்கள், ஆன்மாக்களைப் பிணித்துள்ள பாசத்தளையினின்றும் நீக்கிப் பேரின்பப்பேறு நல்கும் பொருட்டு இந்த ஐந்தொழில்களும் இடையீடின்றி நிகழ்கின்றன.

மனிதப் பிறவி கிடைத்தற்கரியது. சமய நூல்களில் விதித்தன செய்யவும். விலக்கியன தவிர்க்கவும் ஆறறிவுடைய மக்களுயிர்க்கே முடியும். சமய ஒழுக்க நெறியில் முதன்மையானது இறைவனைப் பக்தி சிரத்தையோடு அநுதினமும் நியமந் தவறாது வழிபடுதல்.

ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத இறைவனைச் சிவம் என்றும் விநாயகர் என்றும் முருகன் என்றும் இன்னும் பல மூர்த்திகளாக அமைத்து வழிபடுகின்றோம். எல்லாத் திருக்கோயில்களிலும் முதலில் விநாயக பூசை நிகழ்ந்த பின்பு ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை நிகழ்வதைக் கொண்டு விநாயக வழிபாட்டின் பெருமையை அறியலாம். விநாயகர் என்பதற்கு மேலான நாயகர் (தலைவர்) இல்லாதவர் என்பது பொருள்.

எல்லாக் காரியங்களையும் இடையூறின்றி இனிது முடிக்க வல்ல விநாயகப் பெருமானுக்கு உரிய மூர்த்தங்கள் 16 எனவும் 32 எனவும் நூல்கள் கூறுகின்றன. இவற்றின் விரிவை விநாயக புராணம் விநாயக பராக்கிரமம் ஆகிய நூல்களில் பரக்கக் காணலாம். அவற்றை இங்கே விரிப்பிற் பெருகும்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கி நான்கு முகங்களும் இவற்றின் நடுவே உச்சியில் ஊர்த்துவம் என ஒரு முகமும் கொண்ட மூர்த்தி பஞ்சமுக



விநாயகர் எனப்படும் இத் திருமுகங்கள் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் எனப் பெயருடைய என்றும் இவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களை ஆன்மாக்கள் உய்தியடையும் பொருட்டுச் செய்கின்றன என்றும் சைவ சமய நூல்கள் கூறுகின்றன. இதனால் பஞ்சமுக விநாயகர் எனப்படும் திருவுருவத்தின் மேன்மை அறியப்படும்.

ஒரு திருக்கோயிலில் மூர்த்திகளை அமைக்கும் போது அக்கோயிலின் அமைப்பு அதன் கர்ப்பக்கிருகத்தில் உள்ள திருவுருவத்தின் அமைப்பு கிராமப் பொருத்தம் என்பவற்றுக்கு ஏற்ப அவைகளை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பது நியமம். மூர்த்திகள் சிரசு முதல் பாதம் வரை விஸ்வகன்மீயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசாரம் முதலிய சிற்ப சாஸ்திர விதிகளுக்கு ஏற்பத் தேவாம்சம் உடையனவாக அமைதல் வேண்டும்.

இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலங்களுள் மானிப்பாயில் உள்ள மருதடி விநாயகர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்த ஒரு திருக்கோயில். இப் பெருமானின் பேரருள் நிறைவைத் தரிசித்து உய்தி பெற்றோர் அளப்பலர்.

விநாயகப் பெருமானின் திருவருளால் சைவ நன்மக்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யத் தங்கம் முதலிய லோகங்களால் சாஸ்திர விதிப்படி பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமைக்கப்பெற்று அதனை இவ்வாண்டு தை மாதம் 20 ஆம் திகதி உத்தரட்டாதி நட்சத்திர தினத்தில் வேதாகம விதிப்படி மந் சித்தி வல்ல அந்தணர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 45 தினங்கள் அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனைகளும் நியமந் தவறாது நிகழ்ந்து வருகின்றன. தர்மகர்த்தா சபையினரும் வழிபடுவோர் சபையினரும் சைவாபிமானிகளும் இத் திருப்பணியைத் திருவருள் கைகூட்டச் செய்து முடித்தார்கள்.

இப் புனித தெய்வ கைங்கர்யத்தை நிறைவு பெறச் செய்த விநாயகப் பெருமானின் பேரருள் எங்கும் நிறைந்து பொலிவுற்று இடர்களைந்து இன்பம் பெருகி ஆன்மாக்கள் உய்தி பெறும் பொருட்டு எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப் பெருமானின் திருவடிகளை மெய்யன்போடு வழிபடுவோமாக.

**பிரம்மஸ்ரீ சாமி விசுவநாத் குருக்கள்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விநாயகப் பெருமானின் திருக்கரங்களில் உள்ள பொருள்கள்

விநாயகப் பெருமானின் திரு உறுப்புக்களில் ஒவ்வொன்றுக்கும் தத்துவம் உண்டு. அவ்வாறு அமைந்த கரங்களிலே பல்வேறு ஆயுதங்களையும் வேறு பொருள்களையும் வைத்துள்ளார். அவற்றின் பெயர்களையும் அவைபற்றிய விளக்கத்தையும் பார்ப்போம்.


1. **அங்குசம்:** இது இரும்பினால் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும் குத்தி அடக்கும் கூரிய நேரான பகுதியும் கொண்ட யானையை அடக்கப்பயன்படும் கருவியாகும். இதனை நீண்ட தண்டில் செருகியிருப்பர்.



பெருமானின் சிறப்புக் கருவிகளில் இதுவும் ஒன்று. பாகன் இதனை யானையின் காதிலே மாட்டி வைப்பதும் உண்டு. இது அறிவைக் குறிக்கும். மனம் என்னும் யானையை அறிவு என்னும் அங்குசம் கொண்டு அடக்கி தன் திருவடியின் கீழே ஒன்ற வேண்டும் என்பதைக் குறிக்கவே அங்குசத்தினைத் தன் திருக்கரத்திலே ஏந்தியுள்ளார். ஆன்மாக்களின் ஆணவ யானையை அங்குசத்தால் அடக்கி உயிர்கட்கு விடுதலை தருபவர் விநாயகர் என்பதையே அவரது அங்குசம் உணர்த்துகின்றது.

2. **பாசம்:** இது கயிற்றைக் குறிக்கும் இது ஒன்று அல்லது இரண்டு கயிறுகள் சேர்த்து எளிதாக பிரிக்கும் வகையில் சுருக்கு முடிச்சாகப் போடப்பட்டிருக்கும். சில போது சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். சிலபோது நாகமே பாசமாகக் காணப்பெறுவதுண்டு. அதனை நாகபாசம் என்பர். நமன்தமர் எமபாசத்துடன் அணுகு முன் தன் திருவடி நிழலை அடைந்தால் உய்யலாம் என்பதை உணர்த்தும். மறுமை இன்பத்தினை அடையப் பற்றினை ஒழித்து விட்டுப் பற்றற்றான்தாளை பற்ற வேண்டும். பாசங்களை ஒரு எல்லைக்குட்படுத்தி மீண்டும் தலை எடுக்காதவாறு செய்தலைக் குறிக்கும் மூளையின் இடப்புறம் உள்ளது. எனவே பாசத்தை இடக்கரத்தில் கொண்டுள்ளார் பெருமான்.

3. **தந்தம்:** இது பெருமானின் வலப்புறக் கொம்பின் ஒடித்த பகுதியாகும். யானை தன் தந்தத்தால் பெரும் மரங்களையும் சாய்ப்பது போல கீழுள்ள ஆசைகளைப் பெயர்த்தெடுத்து ஒளி மண்டலத்தில் உள்ள ஜீவதரிசனத்திற்கு வழிசெய்யும் ஆற்றலை உடையது இது. ஔவையார் தந்தத்தினைப் "பெரும் பாரக்கோடு" எனக் குறிப்பிடுகின்றார். ஒடிந்த தந்தம் கஜமுகாசூரனுடைய மார்பை குத்திப் பிளந்த ஆயுதமாக தீமைகளை அழித்தலையும் எழுதுகோலாகப் பயன்படுத்தப்பட்டதால் கல்வியை உணர்த்துவதாகவும் உள்ளது.



4. **மோதகம்:** இதனை இடது கரத்தில் தாங்கியிருக்கின்றார். மோதகம் என்பதற்கு அழிவற்ற தன்மை அல்லது நிஜாநந்தம் என்பது பொருள். இது எள், வெல்லம் ஆகியவற்றால் செய்யப்படுவது. ஒரு பொருளைத் தானம் செய் என்பதற்கு "தாரை வார்த்துக்கொடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வழக்காகும். மோதகத்தில் உள்ள எள் உலகப்பற்றைக் குறிப்பது. அதனை மனிதன் தியாகம் செய்யவேண்டும். அப்போது தான் மறுமை இன்பங் கிட்டும். வெல்லம் மறுமை இன்பத்தைக் குறிப்பது பெருமான் தன் திருக்கரத்தில் வைத்திருப்பது தம்மை நம்பி வழிபடுபவர்களைக் காத்து ரட்சிப்பதன் அடையாளமாகும்.

5. **மாதுளம்பழம்:** இப்பழத்தின் உள்ளே பல முத்துக்கள் அடங்கியுள்ளன. ஆனால் அவை புறத்தே தெரிவதில்லை. அது போல பெருமானிடம் பல புவனங்களின் ஞானமும் அடக்கம் என்பதைக் குறிப்பிட்டு காட்டுகின்றார்.

மாதுளங்கனியில்உள்ளமுத்துக்கள்தனித்தனி அண்டமாகவும், அவ் அண்டங்களைக் கொண்ட மாதுளங்கனி ஒவ்வொன்றும் அகிலாண்டமாகவும் உருவகப்படுத்துகின்றார். இத்தகைய அகிலாண்டங்கள் தம் கையுள் அடக்கம் என்பதனை உணர்த்துகின்றார். விநாயகப்பெருமான்.

6. **சக்தி:** இது வேலைக் குறிக்கும் தகடுவடிவில் சூலம் போன்ற அமைப்பில்




இருபுறமும் அமைந்த ஆறு கூரிய பகுதிகளைக் கொண்டது. வேல் என்றதும் அது முருகனுக் குரியது என்று கருதப்படுமளவுக்கு முருகனுக் குரிய சிறந்த ஆயுதமாகும். இது சக்தி (உமை) முருகனுக்கு கொடுத்தது என்பதும் புராண வரலாறு. இது பிடித்தபடி எறியும் ஆயுதமாகும். இரு புறமும் குத்தும் இயல்புடையது.

7. **வேதாளம்:** தசை இறுக்கமற்று அச்சமும் அருவருப்புத்தரத்தக்க பூதவடிவுடன் இருப்பதாகும். இதனை ஏவிப் பகைவர்களை விழுங்குவார். இவ் ஆயுதம் வீரகணபதியின் கரங்கள் ஒன்றில் இருக்கும்.



8. **அம்பு:** கரியமுள் போன்ற நுனியினைக் கொண்ட இரும்பாலான கருவியாகும். இதனை ஒரு தண்டின் முனையில் செருகி அதன் கீழ்ப் புறத்தில் கழுகின் இறகு கட்டப்பட்டிருக்கும் இதன் நுனி பிறை மதிபோல கவர்பட்டிருக்கும். இதனை பிறை அம்பு என்பர்.



9. **வில்:** இது அம்பினைக் குறிபார்த்து எய்யப் பயன்படுத்தும் கருவியாகும். வளையும் தன்மை கொண்ட மூங்கில், சிலை போன்றவற்றில் இரு முனைகளையும் சேர்த்து தோல் அல்லது நார்க்கயிற்றைக்கொண்டு நாண் இழுத்துக் கட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து அம்பு விரைந்து சென்று இலக்கைத்தாக்கும் பிரணவத்தைக் குறிக்கும். மூலாதாரமும் சக்ஸ்ரதளமும் வில்லின் இரு கோடிகளாகும். கழுமுனா நாடி என்னும் நாணால் இறுக்கி வளைத்து லட்சியமாகிய அம்பை எறிந்தால் பிறவிப்பிணி அகலும் என்பதனைக் குறிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **சக்கரம்:** பொதுவாக சக்கரம் விஷ்ணுவின் கருவியாகும். இதில் ஒரு வகை தேரின் உருளை போன்றும், மற்றொன்று




வளையம் போன்றும், பல்வேறு வடிவங்களுடனும் காணப்பெறும். இது தரும விரோதத்தைச் சென்று சங்கரிப்பது என்பதை உணர்த்துகிறது.

11. **பிச்சுவா (சக்தி)** இதன் தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ளது நீளத்தண்டில் செருகப் பெற்றிருக்கும், தலைப்பகுதி மண்டை ஓடு போலவும், தண்டு முழங்கால் எலும்பாகவும் கூட அமையும், இதனால் பகை வரை அழிப்பது போன்று அடியார்களுக்கு ஏற்படும் பகைகளை அழிப்பவர் என்பதையே உணர்த்துகின்றது.



12. **கேடகம்:** இதைச் சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் போன்ற வடிவங்களில் பலகையாலும் காட்டெருமை, நீர்யானை, காண்டா மிருகம் போன்றவற்றின் தோலாலும் அமைப்பர்.




கத்தியால் வெட்டுவதனைத் தடுக்கப் பயன்படுவது போன்று அடியவர்களுக்கு ஏற்படும் தீமைகளில்இருந்து காப்பாற்றுவது என்பதை உணர்த்துகின்றது.

13. **கதை:** பகைவர்களை நொறுக்கப் பயன்படும் தடியாகும். இதன் மேல்பகுதி பருத்தும் கீழ்பகுதி கையில் பிடிக்கக் கூடியதாகவும் காணப்படும். இது கையை விட்டகலாது.



14. **சம்மட்டி:** இரும்பினால் செய்யப்பட்ட கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிட்டு அதில் கைபிடிக் காம்பைக் கோத்திருப்பர். இதை கையில்



வைத்தபடி அடியவர்களின் எதிரிகளை அடித்து தாக்குவார் என்பதை உணர்த்துகிறது.


15. **சூலம்:** இது மூன்று நுனிகளைக் கொண்டு கரைவரை இரும்பினால் செய்யப்பெற்று நீளமான காம்பில் செருகப்பட்டிருக்கும். இது சிவபெருமானுக்குரியது. சிவனின் அம்சமாகத் தோன்றிய வைரவப் பெருமானைக் குறிக்க சூலம் மட்டுமே சில ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும். வீர கணபதியின் திருக்கரத்தில் காட்சி தருவதாகும்.



16. **நாகபாசம்:** பாச வகையில் ஒன்று பெருமானின் திருவுடலில் காணும் நாகமே பாசமாக விளங்கும். இதனைத் தமது திருக்கரத்தில் வைத்திருப்பதன் மூலம் மாயையை அவர்தம் விருப்பம் போல இயக்க வல்லவர் என்பதை உணர்த்துகிறது.



17. **குந்தாலி (கொந்தாலி):** தலைகனமாக கூரிய முளையினையுடைய இரும்பினால் செய்யப்பட்ட கருவி. இது நிலப் பாறைகளை உடைக்கப் பயன்படும் கருவியாகும். இதுபோல அடியாள்களின் பகையை உடைத்துக் காப்பவர் என்பது இதன் தத்துவாந்தமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. **மழு:** மரங்களை வெட்டப் பயன்படும் மிகக்கூர்மையான கருவி, இதன் வெட்டும் வாய்ப்பகுதி சதுரமாய் விளங்கும். இது கம்பில் சொருகப்பெற்றிருக்கும். இதனை எறி என்றும் கூறுவர்.





19. **கட்டுவாங்கம்:** பகைவர்களை வெட்டப் பயன்படும் நீளமான கத்தி. இது குத்துக் கத்தியாக கூரிய நுனியுடையது.

20. **கமண்டலம்:** கெண்டி போன்ற அமைப்பினை உடைய நீர் வைக்கும் கலம் காயினாலும் செய்வர். முனிவர்கள் நாட்கடன்களைக் கழிக்க வைத்திருப்பது இதை துவிஜ கணபதி தமது திருக்கரத்தில் வைத்திருப்பார்.



21. **புஷ்பபாணம்:** தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்னும் ஐந்து பூக்களால் ஆன பாணம், போக நிலையில் உள்ள தெய்வங்கள் இவற்றைத் தாங்குவர் மன்மதன் மக்களிடத்தில் காமத்தினை நினைவூட்ட எய்வார் என்பது வரலாறு.




22. **அஷமாலை:** இது உருத்திராஷ மாலை மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓர் ஆயுதம் போல யோகநிலையினை விளக்குவதாக திருக்கரங்களில் விளங்கும். இது சிந்தனா சக்தியை வளர்ப்பது அவசியம் என்பதை உணர்த்தும்.



23. **சங்கம்:** இது விஷ்ணுவுக்குரிய ஆயுதமாகும். வெற்றியை அறிவிக்கும் கருவி, பகைவர்கள் இதன் ஒலி கேட்டதும் ஒடுங்கி அடங்கச் செய்யும். அச்சக்கருவியாகும். இதிலும் வடிவங்கள் உண்டு. இது தர்மவிரோதத்தை சங்கரிப்பது.



24. **கரும்புவில்:** கரும்பினை வில்போல் வளைத்திருக்கும். மன்மதனுக்குரிய சிறப்புக் கருவி யோக நிலையில் விளங்கும் தெய்வங்களும் காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர். கரும்பின் கீழ்ப்பகுதி மிகுந்த சுவையுள்ளது. மேல்பகுதி சுவையற்றது. சுவையுள்ள போது தான் அது சுவைக்கும். காமாக்கினியை சுழுமுனாநாடி வழி மேலேற்றி விட்டவர்க்கு அது சுவையற்றதாகி விடும்.



25. **கோடரி:** மரம் பிளக்கப் பயன்படுவது மரத்தை பிளப்பது போல பகைவரின் உடலைப் பிளக்கப் பயன்படுவது. அடியவர்களிற்கு ஏற்படும் இடர்களைப் பிளந்து அழிப்பார் பெருமான் என்பதை உணர்த்துகிறது.




26. **தண்டம்:** மரத்தால் ஆன நீளமான கைத்தடி





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


27. **வீணை:** இது ஓர் இசைக்கருவி போரில் தளர்ந்த வீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது. வீணையை உடையது தூரதிருஷ்டி உடையவர் என்பதனை உணர்த்துவது. உச்சிஷ்ட கணபதியின் திருக்கரத்தில் விளங்கும்.





28. **சாமரம்:** இது கவரிமானின் வால் முடியினால் அமைக்கப்பட்டது.

29. **கொடி:** இது துணியால் செய்யப்பட்டு தடியில் போடப்பட்டு இருக்கும். வெற்றிக்கு அறிகுறியானது.





30. **கற்பகக்கொடி:** கற்பக விருட்சத்தின் ஒரு கிளையாகும். இது நினைப்பன எல்லாவற்றையும் வழங்கவல்லது.

31. **பரசு:** மழுவைப் போன்ற அமைப்பினை உடையது இதன் வாய்ப்பகுதி சற்று வளைந்து கூரியதாக விளங்கும். இதுவும் மழுப்போன்று காம்பில் செருகப் பெற்றிருக்கும்.

32. **தாமரை:** தாமரை சூரிய ஒளியில் மலர்வது. இலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் உறைவிடம் விநாயகரை வழிபட்டால் செல்வமும், கல்வியும் கிட்டும் என்பதை உணர்த்துவதாகும்.

33. **நீலோற்பலம்:** இது சந்திரன் ஒளியில் மாலையில் மலர்வது. காதல் சின்னமாக விளங்குகிறது. உலகப் படைப்புக்குத் தலைவன் என்பது இதன் தத்துவார்த்தமாகலாம்.

34. **நெற்கதிர்:** தானிய இலட்சுமியைக் குறிப்பது விநாயகரை வழிபட தானியம் செல்வம் பெருகும் என்பதை உணர்த்துவது.

இவை தவிர விநாயகப் பெருமான் திருக்கரங்களில் வித்தியாசமாக கரும்பு, வெண்ணெய், லிங்கம், நாகம், வில், பாதிரிப்பூ, மாம்பழம், கற்பகமலர், தருப்பை, புத்தகம், வாழைப்பழம் போன்ற பொருட்களை வைத்துக்கொண்டும் காட்சி தருகிறார். கணபதியின் திருவடிவங்களை அறிஞர்கள் பலப்பலவாக விரிந்துப்பேசுவர்.

**செல்லையா பரமேஸ்வரன்** B. A Dip in Ed
ஆசிரியர், வசாவிளான் ம.ம.வி

**உசாத்துணை நூல்கள்**

1. வரம் தரும் விநாயகர் பாலமுருகன்
2. பிள்ளையார் புராணம் - சிவதொண்டன் நிலையம், செங்கலடி.
3. விநாயகர் கதைகள் - புலவர் செந்துறைமுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழி

பிள்ளையார் சுழி போட்டாயிற்றா? என்பது ஒரு பழமொழி. ஒரு நற்காரியம் தொடங்கியாயிற்றா, ஒரு தொழில் அல்லது வணிகம் தொடங்கிவிட்டதா என்பதை இவ்வாறு கேட்பர்.

நம்பெரியவர்கள் "பிள்ளையார் சுழி" போட்டே எதையும் தொடங்குவர். கடிதமானாலும் கட்டுரையானாலும் ஒரு நூலானாலும் முதலில் 'உ' எனப் பிள்ளையார் சுழி போட்டுவிட்டே தொடங்குவர்.

பிள்ளையார் என்று ஏன் பெயர் வந்தது? அவர் சிவபெருமானின் மூத்த பிள்ளை; இளையபிள்ளை முருகன் 'ஆர்' இறுதி மதிப்புக் கருதிச் சேர்ப்பது பிள்ளை என்பது வீரன், மைந்தன் என்றும் பொருள்படும். பிள்ளையார் அரச மரத்தின் அடியிலும் இருப்பார்; ஆலயங்களிலும் 'முதல்வராக' முதலிடத்தில் இருப்பார். பிள்ளையார் மிகமிக எளியவர். "பிடித்துவைத்தால் பிள்ளையார்" என்பது ஒரு பழமொழி மஞ்சளை அல்லது குழைத்த மண்ணைப் பிடித்து வைத்து 'பிள்ளையார்' எனக் கும்பிடுவர்.

**பிள்ளைகளின் பிள்ளையார்**

இளம்பிள்ளைகளுக்கு பிள்ளையாரின் வடிவத் தோற்றத்தில் ஒரு கவர்ச்சி உண்டு. யானை மணி ஓசை கேட்டதும், அப்பெரிய உருவத்தை, இவர்கள் வியப்போடு விழித்துப் பார்ப்பர். யானைமுகக் கடவுளும், தும்பிக்கையுடன் இருப்பதால், அக்காட்சி பிஞ்சு மனங்களில் பதியமாகும். அதனால்தான் ஔவையார் கடவுள் வணக்கப் பாடல்களைக் குழந்தைகளுக்கு ஏற்ப பாடியுள்ளார்.

நாட்டுப்புற மக்கள் குழந்தையைப் பாடவைக்கும் முதற்பாட்டு எது தெரியுமா?



குள்ளக் குள்ளரே
குண்டு வயிறரே
வெள்ளிப்பிள்ளையாரே
விநாயக[1] மூர்த்தியே!

என்று சிரிப்புக் கலந்து பாடும் இப்பாடல் தான் அது. இதைப் பிள்ளைகள். மழலைச் சொற்களில் திரும்பப்பாடும்! இப்படிப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் பாடல்கள் மிகப் பல உள. ஏற்றப்பாட்டிலும் பிள்ளையார் தான் முதலில் வருவார். ஆழமான வயல் கிணறுகளில், ஏற்றல் இறைப்பவன்,

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்

என ஒரு வாளி தண்ணீரை இறைத்து ஊற்றுவான், பாட்டிமார்கள் தம் பேரன் பேத்திகளுக்கு இவ்வாறு இரண்டடிப் பாடல்களைபலவற்றைப்பாடி, அப்பிள்ளைகள் நெஞ்சில் பக்தியையும் பண்பாட்டையும் பதியம் போடுவர்.

குள்ளக் குள்ளனைக் குண்டு
வயிறனை
வெள்ளைக் கொம்பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகனைத் தொழு!
வெள்ளைக் கொம்பன்
விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடரும்
வினைகளே!

அதுமட்டுமா?

முப்பழம், வெல்லம், மோதகம் தின்னும் தொப்பை அப்பனைத் தொழ வினை இல்லையே என்று பாடிப் பிள்ளைகளை மகிழ்விப்பர். இது "கைத்தல நிறைகனி, அப்பமொடு அவல் பொரி கப்பிய கரிமுகன்" என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ் போல் உள்ளது.

பள்ளியில் 'வேழமுகம்' என்று ஒரு பாடலை முன்பு கற்பிப்பார்கள். அதுவும் நாட்டுப்புற இலக்கிய வழக்கேயாகும்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்!
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனை தொழ வினை அறுமே!

நாடோடிப் பாடல்களை இவ்வாறு இடத்திற்குத் தகவும் பாடுபவர்க்குத் தகவும் சிறுசிறு வேறுபாடுகளுடன் பாடப்படுவது அவற்றின் இயல்பு. ஏட்டில் எழுதாமல் நினைத்ததும் பாடுபவை அவை.

வேழமுகப் பாட்டு என்பது போற்றிப் பாட்டு பிள்ளையாரைத் தொழப் பிள்ளைகள் முதல் பெரியவர் வரை அது பயன்படும்.

சிந்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய
சீரிய ஆனைக் கன்றே சயசய
அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய
ஆவித்துணையே கணபதி சயசய
இண்டைச் சடைமுடி இறைவா சயசய
ஈசன் தந்தருள் மகனே சயசய
உன்னிய[2] கருமம் முடிப்பாய் சயசய
ஊர் நவசந்தி[3] உகந்தாய் சயசய
எம்பெருமானே இறைவா சயசய
ஏழ் உலகும் தொழநின்றாய் சயசய
ஐயா கணபதி நம்பியே சயசய
ஒற்றை மருப்புடைய வித்தகா சயசய
ஓங்கிய ஆனைக் கன்றே சயசய
ஔவியம் இல்லா அருளே சயசய
அக்கரப்[4] பொருள் ஆனவா சயசய
கணபதி என்வினை கரைவாய் சயசய
ஙப்போல் மழு[5] ஒன்று ஏந்தியே சயசய
சங்கரன் மகனே சதுரா சயசய
ஞயன்[6] நம்பினர் பால் ஆடில் சயசய
இடம் பட[7] விக்கின விநாயகா சயசய
இணங்கிய பிள்ளைகள் தலைவா சயசய
தத்துவ மறைதரு வித்தகா சயசய
நன்னெறி விக்கின விநாயகா சயசய
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் சயசய
மன்றுள் ஆடும் மணியே சயசய
இயங்கிய[8] ஞானக் குன்றே சயசய
அரவக்[9] கிண்கிணி ஆர்ப்பாய் சயசய
இலவக்[10] கொன்பு ஒன்று நந்தியே சயசய
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் சயசய
அழகிய ஆனைக் கன்றே சயசய
இளமத யானை முகத்தாய் சயசய
இறகு[11] பதி விக்கின விநாயகா சயசய
அனந்தலோடு[12] ஆதியில் அடி தொழ சயசய.

இதனை வேழமுகம் என்றும் "பிள்ளையார் சிந்தனை" என்றும் கூறுவார். ஐயம், வெற்றி, பேச்சில் 'சயம்' என்பர். இதைப் போற்றி என்றும் சரணம் என்றும் முடிப்பதுண்டு.

தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே. உயிர் 12, மெய் 18 இப்பாடலில் உயிர் 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாய் வருகிறது. அக்கரம் என்பதில், மெய்க்கு அடையாளமாகப் புள்ளியுள்ள எழுத்து உளது.

பிறகு கஙசஞடணதநபமயரலவழளறன எனும் பதினெட்டு மெய்யும் வரிசை மாறாமல் இடம் பெறுகின்றன. பாட்டுக்குப் பாட்டும் ஆயிற்று, படிப்புக்கு படிப்பும் ஆயிற்று. ஒருவாறு தமிழ் நெடுங்கணக்கு அகரவரிசை அரிச்சுவடி மழலைகள் நெஞ்சிலும் நாவிலும் பதிந்து விடுகின்றன அல்லவா.

உயிரும்மெய்யுமேதமிழ்முதலெழுத்துக்கள். ஆங்கிலம் 26 என்றால் தமிழ் 30 மட்டுமே.

சார்பெழுத்துக்கள்என்பனமொழியிடையே வரும்போது, பொருள் வேறுபாடு தருவன. அவை தனி எழுத்துக்கள் அல்ல. அவ்வாறு பார்த்தால்பிறமொழிகளில்"சொல்லிடையே" வரும் சார்பெழுத்துக்கள் மிகப் பலவாகும். உயிர்மெய் எழுத்துக்கள் தமிழுக்குக் கிடைத்த கொடை. 'க்' 'இ' என்று எழுதவேண்டியதை (Ki) போல 'கி' என ஒரே வடிவமாக்கினர்; 'க்' 'உ' என்பதை (Ku) என்பதை இரண்டெழுத்து ஆகாமல் கு என ஒரே எழுத்தில் அடக்கினார். அவை தனி எழுத்துக்கள் அல்ல. இடச் சுருக்கம், காலச் சுருக்கம், முயற்சிச் சுருக்கம் மற்றும் சிக்கனம் கருதிப் படைக்கப்பட்ட 'வடிவங்கள்'. இது தெரியாதார் உயிர்மெய் 216 என்று (12 X 18) கொண்டு, தமிழ் எழுத்துக்கள் ஆயுதத்துடன் 247 என்பர். இத்தனை எழுத்துக்களா என மயங்குவர். இவ் 'வேழமுகம்' தமிழ் முதலெழுத்துக்களை அறிமுகப்படுத்துவது சிறப்பு. ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கை கற்றுத் தருவது போன்றதே இதுவும். முற்காலத்தில் இது திண்ணைப் பள்ளியில் பாடமாக இருந்தது என்பதற்கு, 'பிள்ளைகள், தலைவன்,' 'நன்நெறி', 'பள்ளியில் உறைதரும் பிள்ளை' போன்ற தொடர்கள் சான்றாக உள்ளன.

**கடவுள் வணக்கப் பிள்ளையார்**

எதனையும் பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்குவது திருக்கோயில்களில் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டு பிறகு தந்தையும் தாயுமாகிய அம்மை அப்பரைக் கும்பிடுவது; எந்தவொரு நூலையும் பிள்ளையார் வணக்கத்துடன் தொடங்குவது என்பன கடந்த ஆயிரம் ஆண்டுகளாக உள்ள நடைமுறைகளாகும்.

கூட்டம் தொடங்கும் போது, பதினொராம் திருமுறைப்பாடல் ஒன்றைப் பாடுவர்.

**திருவாக்கும், செய்கருமம்**

**கைகூட்டும், செஞ்சொற்**

**பெருவாக்கும், பீடும்பெருக்கும் -உருவாக்கும்**

**ஆதலால் வானோரும்**

**ஆனைமுகத்தானைக் காதலால்**

**கூட்புவர் தம்கை.**

நிகழ்ச்சி தடங்கலின்றி இனிதே முடிதற் பொருட்டு, பிள்ளையார் வணங்கப் பெறுகிறார். அதுபோலவே நூல்களை எழுதத் தொடங்குபவர்கள், முற்காலத்தில் சிவனையோ திருமாலையோ வணங்கிப் பாடி பிறகு நூலை எழுதுவர். இடைக்காலம் முதல் நூற்கடவுள் வணக்கமாகப் பிள்ளையாரைப் பாடுவது பெருவழக்காயிற்று. பிள்ளையார் கடவுள் வணக்கப் பாடல்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. அவற்றுள் நீதி நூல்களைச் சிறிய வயதினருக்காகப் பாடிய ஔவையார், புதுமை தோன்றப் பாடியவற்றை மட்டும் பார்க்கலாம்.

**ஆத்திசூடி அமர்ந்த தேவனை**

**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்தி மாலையைச் சூடிக்கொண்டு ஆல மரத்தடியில் அமர்ந்து உலகோர்க்குப் போதித்த சிவனே " ஆத்திசூடி" எனப்பட்டனன். ஆலமர் செல்வன், தென்முகக் கடவுள். இன்று 'தட்சணாமூர்த்தி' என்பர். அவ்விறைவன் உலகோர்க்கு ஞானத்தைப் போதித்தவன். முனிவர்களுக்கு என்பது, அவர்வழியாக நமக்கேயாகும். அந்த "ஆத்திசூடி" யாம் சிவபெருமானால் விரும்பப்பட்ட தேவன் பிள்ளையார் (அமர்ந்த - விரும்பிய). அப்பிள்ளையாரை"ஏத்தி ஏத்தி" தொழுவோம். ஏத்தி ஏத்தி தொழுவது புகழ்வது அதுதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருச்சனை" எனப்படுவது. இதில் சிவனையும் கூறி அவருடைய பிள்ளையாரை வணங்கும் சாதுரியம் காணப்படுகிறது.

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திமாலைபோலக் கொன்றை மாலையும் சிவனுக்குரியது. அதனை அணிந்த தலைவன் சிவபெருமான். அவனது செல்வன் பிள்ளையார். அப்பிள்ளையாரது அடியினை என்றும் புகழ்ந்து பாடி வணங்குவோமாக.

ஆத்திசூடி இரண்டு சீர்களாலானது; கொன்றை வேந்தன் ஒவ்வோர் அடியாலானது. திருவள்ளுவர் ஒன்றேகால் அடியிற் சொன்னதை விட சுருக்கமாகப் பாடிப்பார்த்த ஒளவையார் திறம் வியக்கத்தக்கது. அவற்றிலுள்ள கடவுள் வணக்கங்களோ, ஈரடியால் உலகளந்த மாயவனின் தோற்றம் போல், பொருள் பொதிந்து விரிந்து செல்கின்றன.

ஒளவையார் மூதுரைக்குப் பாடியுள்ள வாழ்த்து பள்ளிப் பிள்ளைகளுக்காகப் பாடியதுபோல் உளது. நல்வழிப் பாடலும் அதுபோன்றதே.

வாக்கு உண்டாம் நல்ல

மனம் உண்டாம் மாமலராள்

நோக்கு உண்டாம் மேனி

நுடங்காது - பூக்கொண்டு

துப்புஆர்த் திருமேனித்

தும்பிக்கை யான்பாதம்

தப்பாமல் சார்வார் தமக்கு.

வாக்கு, நல்லமனம், செல்வம் தரும் திருமகளின் நோக்கு (பார்வை) யாவும் கிடைக்குமாம். உடம்பு சோம்பற்படாது. பூக்கொண்டு பிள்ளையாரை வணங்குபவர்களுக்கு (துப்பு - பவளம்) எல்லா நலமும் கிடைக்கும் என்பது கருத்து. நல்வழிப்பாடல் மேலும் சிறப்புடன் உளது.

பாலும் தெளிதேனும்

பாகும் பருப்பும் இவை

நாலும் கலந்து உனக்கு

நான்தருவேன் - கோலம் செய்

துங்கக் கரிமுகத்துத்

தூமணியே! நீ எனக்குச்

சங்கத் தமிழ்தூமூன்றும் தா!

பிள்ளையார் இப்பிள்ளைகள் வணக்கத்தைப் படித்தால் தமிழறிவு தானாக வரும். இப் பாடலில் உள்ள நயங்கள் பல.

ஒருவரிடம் ஓர் உதவியை வேண்டும் போது, அவரைப் பாராட்டி ஓரிரு வார்த்தை சொல்லிவிட்டுத் தொடங்கினால் காரிய வெற்றி நிச்சயமாகும். "ஊரார் உங்கள் பெருந்தன்மையை மெச்சுகிறார்கள்" என்று பலப்பல கூறிவிட்டு, நன்கொடைச் சீட்டை நீட்டினால், பெருந்தொகை எழுதப்படக்கூடும். "துங்கக் கரிமுகத்துத் தூமணியே! (சிறந்த அழகிய யானைமுகமுடைய தூய மாணிக்கமே) என்றால், பிள்ளையார் திரும்பிப் பார்க்காமல் இருப்பாரா? தும்பிக்கை முகத்தை யார் இவ்வளவு பாரட்டப் போகிறார்கள்?

"நான் தருவேன்" ஏதோ மிகப் பெரிய பரிசு தரப் போவதுபோல் அல்லவா இது தொனிக்கிறது?

என்னென்ன அவை? பால், தெளிதேன், வெல்லப்பாகு, பருப்பு எல்லாம் இனிப்பு. ஒளவையார் 'பேரம்' பேசுவதில் வல்லவராகத் தோன்றுகிறார். நாம் கூடுதலாக விலைகொடுத்து வாங்கியதை சிலர் சாதுரியமாகப் பேசிக் குறைந்த விலைக்கு வாங்கிவிடுவார்கள்.

ஒளவையார் "நான் நான்கு பொருள் தருகிறேன் நீ மூன்று பொருள் தந்தால் போதும்" என்று கூறுகிறார். எண்ணிக்கையைப் பார்த்தால், ஒளவையார் கொடுப்பது தான் கூடுதல். ஆனால், கேட்பது, "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்பது இயல்தமிழ் (இலக்கியம்), இசைத் தமிழ், நாடகத் தமிழ் எவ்வளவு சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அரியபொருள்கள் "அப்பமொடு அவல் பொரி கப்பிய கரி முகனிடம்" "பால் தேன்" போன்றவற்றைச் சொல்லி தமக்கு தமிழைக்கேட்ட ஔவையாரின்இப்பாடலைப் படிக்கும் ஒவ்வொருவரும், அக்கடவுளிடம் தமிழைப் பெற்றுக் கற்றுத் தெளிவர் என்பது உறுதி. ஒருவருக்கு பிடித்தமானதைக் கொடுத்து நமக்கு வேண்டியதைப் பெறுவது போன்றது இது. பிள்ளையார்க்கு மிகப் பிடித்தமானவை. அப்பம், அவல், பொரி, மோதகம், பால், தேன் போன்ற எளிய பொருள்களே. எளியவையாயினும் அவர் விரும்புவன, அதனால் நாம் கேட்பது கிடைப்பது உறுதி.

**மக்கள் போற்றும் பிள்ளையார்**

எங்கு நோக்கினும் ஊர்த் தெரு, நெடுஞ்சாலைகள், சந்து, மன்றம், மரத்தடி தோறும் பிள்ளையார் இருப்பதால் ஏழைகளும் எளியோரும் தொட்டு வணங்கும் கடவுளாக இவர் உள்ளார். அவரை எளிதில் நெருங்க முடிகிறது.

மக்கள் இவர் மீது வைத்திருக்கும் அன்பை, அவருக்கு சூட்டியிருக்கும் ஆயிரக்கணக்கான பெயர்களைக் கொண்டு அறியலாம்.

வழிவிடும் பிள்ளையார், வெயிலுகந்த பிள்ளையார், வரசித்தி விநாயகர், கற்பகப் பிள்ளையார், துணைவந்த விநாயகர், உச்சிப் பிள்ளையார் (திருச்சி), பணக்காரப் பிள்ளையார் (காரைக்குடி), கடுக்காய் விநாயகர், கூப்பிடு பிள்ளையார், முக்குறுணிப் பிள்ளையார், பொல்லாப் பிள்ளையார், வலம்புரி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர், சாலக்கிராம விநாயகர், சித்தி விநாயகர், மாணிக்க விநாயகர், பால கணபதி இவ்வாறு ஒரு கலைக்களஞ்சியம் தொகுக்குமளவு சண்பக[1] விநாயகர் விளங்குகின்றார். இவை தனியே தொகுத்து ஆராயத்தக்கன. மக்களுடன் நெருங்கிய உறவுடைய கடவுளர்கள் முருகனாம் தண்டாயுதபாணியும் பிள்ளையாருமே எனலாம்.

**குறிப்புக்கள்**

1. முனைவர் தமிழண்ணல் விநாயகரை விநாயகர் என்றும் செண்பகத்தை சண்பகம் என்றும் பழைய முறையில் எழுதுவதே சிறப்பு எனக் கருதுபவர். "னா" வைப் பயன்படுத்தினால் தான் "வினை" என்ற வேர்ச் சொல்லோடு தொடர்புபடுத்தி நினைக்க ஏதுவாகு மென்று சொல்கிறார்.


சண்பகத்தில் 'ச' வை 'செ' ஆக எழுதுவதில் பொருள் மாறாததால் தவறேதும் இல்லை. எனினும் அகரத்தை எகராக மாற்றி எழுதும் பழக்கம் தண்டாயுதபாணியைத் தெண்டாயுத பாணி என்று விபரிதமாகப் பொருள் மாறும்படி எழுத வைத்துவிடும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

2. உன்னிய - நினைத்த
3. நவ - புதுமையான; சந்தி - தெருக்கள் சந்திக்குமிடம்
4. அக்கரப் பொருள் - அகரத்தின் பொருள், முதல்வனாவது
5. மழு - மழு ஆயுதம், சூலம்
6. ஞயம் - நயம், நன்மை
7. விக்கினம் இடம்பட - துன்பம் விலக
8. இயங்கிய - அசைகின்ற
9. அரவ - ஓசை இடுகின்ற
10. இளவம் - மரக்கொம்பு
11. இறகு - மயிற்பீலி
12. அனந்தல் - முடிவு. முதலிலிருந்து முடிவுவரை உனைத் தொழ அருள் செய்.

**தமிழண்ணல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி வழிபாடு



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.
திருமூலர் திருமந்திரம்.

இந்துசமயத்தின்காணபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம், சைவம், வைணவம் ஆகி ஆறும் சண்மதம் எனப் பெறுவன. இவற்றுள் காணபத்தியம் அல்லது காணபதமென்பது கணபதியே முழுமுதற் கடவுளென நம்பி வழிபடுஞ் சிறப்பினையுடையது. 'க' என்பது அறிவாகவும் 'ண' என்பது வீடாகவும் பொருள் கொண்டு, அறிவிற்கும் வீட்டுப் பேற்றிற்கும் தலைவராகவே கணபதி விளங்குகிறார் என்பர்.

பொதுவாகத் தத்துவம், புராணம், சடங்கு என்ற மூன்று திறத்தாலும் கணபதிக்குச் சிறப்பிடமுண்டு. பெரும்பாலான மக்களிடையே திருவிழாக்களும் சடங்குகளுமே ஈடுபாட்டினைப் பெறுகின்றன. சிவன்கோயில் திருவிழாக்களில் 'பஞ்சமூர்த்தி புறப்பாடு' அடியவர்களின் நாட்டத்தைக்கவரும்; அந்தப் பஞ்ச மூர்த்தி வரிசையில் சிவன், சக்தி, முருகர், சண்டேசுரர் ஆகியோருடன் கணபதிக்குச்சிறப்பிடம் கிடைப்பதை எல்லோரும் அறிவர்.

கணபதியை விநாயகர், ஆனைமுகன், பிள்ளையார், மூத்தநாயனார், கணேசர், விக்கினேஸ்வரர் போன்ற பலபெயரிட்டு அழைத்து வழிபடுவர். இந்து சமயத்தில் பல பிரிவினரும் கொள்கையினரும் ஆர்வமுடன் வணங்கத்தக்க பொதுத் தெய்வமாகக் கணபதி விளங்கி வருகிறார். அல்லாமலும் புறமதத்தினராகிய சமணர், பௌத்தர் முதலிய பிறருங் கூட வணங்கும் நிலையில் ஏற்றம் பெற்றுள்ளார் கணபதி.

கணபதி வழிபாடு இந்திய நாடு மட்டுமேயன்றி நேபாளம், திபேத்து, இலங்கை, பர்மா, மலேசியா, சயாம், சீனா, இந்தோசீனா, ஜாவா, ஜப்பான், கொரியா முதலிய பல நாடுகளிலும் சிறப்பாகத் திகழ்ந்து வருகிறது.

கி. பி ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மனின் தானைத் தலைவராகச் சென்ற பரஞ்சோதியாம் சிறுத்தொண்டரால் சாளுக்கிய நாட்மு வாதாபி நகரத்திலிருந்து கணபதிசிலை கொண்டுவரப்பட்டது. அக்காலந்தொட்டே தமிழகத்தில் கணபதி வழிபாடு ஏற்பட்டதென்பர். என்றாலும், இந்தியாவின் பிறபகுதிகளில் கணபதி வழிபாடு முன்னரேயிருந்தமை பற்றிச் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாகக் கி.மு 2 ஆம் நூற்றாட்டைச் சார்ந்தனவாக மதிக்கப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள் கணபதியுருவமுள்ளதென்பர். இந்தியாவைப் பொறுத்த வரையில் மகாராஷ்டிர மாநிலத்தில் கணபதி வழிபாடு பண்டுதொட்டு நிரம்பவுள்ளதென்பர்.

கணபதி தத்துவம்: கணபதியின் திருவுருவம் ஓசை ஒலிகளுக்கெல்லாம் மூலாதாரமாகத் திகழும் பிரணவத்தின் அடையாள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாகும்; அதுவே மூலாதார சக்தியின் முழுமைத்திருக்கோலமாகும். நாததத்துவமாக விளங்கும் கணபதியும் விந்து தத்துவமாக விளங்கும் முருகனுமே அனைத்தையும் இயக்கி அனைத்துமாய் விளங்கி உலகிற்கு நலம் பயக்கின்றனர். எனச் சமயஞானிகள் அலையலையாகத் தத்துவ நுட்பங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வாறான சில கருத்துக்களைச் சிந்திப்போம்.

கணபதியின் திருமேனியானது இடைக்கு கீழேபூதஉடம்புடனும்இடைக்குமேல்கழுத்து வரையில் தேவ அல்லது மானுட உடலுடனும் அமைந்துள்ளது. கணபதிக்கமைந்த ஆனைமுகமும் அஃறிணையையும், தேவ அல்லது மானுடவுடல் உயர்திணையையும் சுட்டும். ஒள்றைக் கொம்பு ஆண் தன்மை யையும், கொம்பில்லாப் பகுதி பெண் தன்மையையும் சுட்டி நிற்கும். எனவே பூதமாய், தேவனாய், மானுடனாய், விலங்காய், ஆணாய், பெண்ணாய் இவையுள்ளிட்ட எல்லாமுமாய் விளங்குபவர் கணபதி என்பது உய்த்துணரத் தகும்.

கணபதியின் திருவுருவத்தில் நாபிக்கமலம் நான்முகனையும், முகம் திருமாலையும், முக்கண்சிவனையும், இடப்பக்கம்சக்தியையும், வலப்பக்கம் சூரியனையும் குறிப்பதாகக் கொள்வர்.

கணபதியின் ஐந்து திருக்கைகளிலும் உள்ள பொருள்களுள் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும் ஒற்றைக் கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளுதலையும் உணர்த்துமென்பர்; எனவே, சிவனை ஒருவாறு ஒத்த உலகத்தின் ஐந்தொழிலுக்கும் நாயகராகக் கணபதி விளங்குகிறாரெனலாம்.

யானையையடக்கும் பாச அங்குசங்களை யானைமுகத்தினராகிய அவர் கைக் கொண் டிப்பது அவரை அடக்கி ஆதிக்கஞ் செலுத்த வேறொருவரில்லை என்பதன் அடையாள மாகும்.

பொதுவாகக் கணபதியின் துதிக்கை மறைத்தலை உணர்த்தினாலும், சிறப்பாக அது தன்னடியவர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மையையும் குறிக்கும்.

கணபதி தம் வலக்கண்ணாலும் இடக் கண்ணாலும் இகத்தையுணர்கிறாரென் றும், நெற்றிக் கண்ணால் பரஞானக்காட்சி தந்தருளுகிறாறென்றும் கூறுவர். பொதுவாகத் தம் கண்களால் இகபர ஞானமளிக்கச் சித்தமாயுள்ளார் என்பது தத்துவ உட்கிடை.

கணபதியின் பெருத்து விரிந்த காதுகள் அடியவர்களின்குறைகளைஎப்போதும்கூர்ந்து கேட்டு அருள்புரியும் நோக்கங் கொண்டவை.

அனைத்துலகங்களும் அவருடைய அழகுப் பெருவயிற்றில் அடங்கிக்கிடப்பன என்ற அடையாளமாகவே மத்தளவயிறு அமைந்துள்ளது.

கணபதி பொழியும் மும்மதங்களும் இச்சை கிரியை ஞானமென்ற மூன்று சக்திகளின் பொழிவை உணர்த்துமென்பர்.

பெருச்சாளி இருள்நாடிக் கீழறுத்துச் செல்லும் இயல்பினது. எனவே, ஆணவத்தையடக்கும் அறிகுறியாகப் பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டுள்ளார் கணபதி.

தம்மை வழிபடும் அடியார்களின் செயல் சித்தியையும் அதற்குரிய புத்தியையும் அருளுபவர் கணபதி; ஆதலின் சித்தி, புத்தி என்ற இரு பண்புகளையே இரு மனைவியராக உருவகப்படுத்தி மணந்துள்ளார் என்பர்; புராண அடிப்படையிலே சித்தியும், புத்தியும் நான்முகனின் புதல்வியராகவும் கூறப்படுவர். அவர்களை மணந்து நல்வாழ்வு ஊதியம் என்ற இரு குழந்தைகளைப் பெற்றுள்ளார். கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் விரித்துரைப்பர். 'கணபதி பூசை கைமேற் பலன்' என்பது தமிழக அனுபவப் பழமொழி.

**கணபதி வழிபாடு**

அடியவர்களுக்கு எளிதில் கிட்டுந் தெய்வமாக விளங்குவது கணபதியே. கையில் கிடைக்கும் சந்தனத்தையோ, மஞ்சளையோ, களிமண்ணையோ, சாணத்தையோ பிடித்து வைத்தால் பிள்ளையார் உருவாகிவிடும், வடிவச் சிறப்புடன் மரத்தையோ, கல்லையோ, உலோகத்தையோ கொண்டும் கணபதியை உருவாக்கலாம். எல்லாம் அவரவர் உள்ளத்தையும் தேவையையும் சூழ்நிலையையும் பொறுத்ததாகும். என்றாலும், வெள்ளெருக்கின் முற்றிய வைரத்தால் உருவாக்கும் கணபதிக்குத் தனிச்சிறப்புண்டென்பர்.

கணபதியாகிய யானையை அடிமைகளாகிய நாம் நம் உள்ளமாம் கூடத்திலே ஊக்கமெனும் பெரிய கட்டுத் தறியினைப் பிணைத்து நிற்கச் செய்யவேண்டும். உறுதி மிக்கதும் இடையறாததுமாகிய அன்பெனும் இரும்புச் சங்கிலியைக் கொண்டு கட்டிவைத்து. நம் தீவினையையும் அறியாமையையும் யானையுண்ணும் கவளமாக உண்பித்து, ஆர்வமுடன் பணிந்து வழிபட வேண்டும். அந்நிலையில் அவர் தம் கருணை ததும்பும் மதவெள்ளத்தினைப் பொழியச் செய்து நமக்குப் பல நலங்களுண்டாகுமாறு செய்வார். அதனால், நம் தீவினைகள் நீங்கி உய்தி பெறலாம், இக்கருத்தினைப் பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடற் புராணத்துள்.

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைத்துவரு வினைகள் தீர்ப்பாம்

என வழிபட்டு நிற்றலால் உணரலாம்.

கணபதியை வழிபாடு புரியும் அடியவர்கள் வன்னியிலையையும், அறுகம்புல்லையும் சிறப்பாக வைத்துத் தொழுகின்றனர். அறுகம்புல்லானது ஓரிடத்தில் முளைத்துக் கொடியாய்த் தழைத்து ஆறு இடங்களில் பொதுவாக வேரூன்றிக் கிளைக்குந்தன்மையது. அந்த அறுகினால் அருகிருத்து அருச்சித்தால் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் நம்மைப் பொருந்தச் செய்து ஈடேற்றி அருள்புரிவார் என்பது மக்களின் யோக நம்பிக்கை.

கணபதியைக் கண்கண்ட தெய்வமாக வழிபடும் ஔவையார் தமக்குச் சங்கத்து முத்தமிழையும் தந்தருளுமாறு ஆர்வமுடன் வேண்டுகிறார்; அதற்குப்படையற் பொருளாகப் பாலையும் தெளிந்த தேனையும் வெல்லப் பாகினையும் தேங்காய் உள்ளீடாகிய பருப்பினையும் கலந்து பக்குவப்படுத்தித் தரச் சித்தமாக இருப்பதாகவும் புலப்படுத்துகிறார். இதனை நல்வழியில்,

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

எனவரும் வெண்பாவால் உணரலாம்.

**செ. வைத்தியலிங்கன் எம்.ஏ.,எம்.லிட்**
**தமிழ் விரிவுரையாளர்,**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்

மூளாய் வதிரன்புலோவில் எழுந்தருளியிருக்கும் பொன் மணி நிலத்தில், மாரித வழுங் காலங்களில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம்புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்து உரைக்கப் பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப் புராணம் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து. அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினார்.

முதலாவது உபாசனா காண்டத்தில் அறுகம்புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பலவகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபட வேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்படுகிறது. சுபலனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்தணனுடைய பெயர் மதுசூதன். அம்மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப்படுகின்றது. மேலும், அனலாசுரனை அழித்த ஆனைமுகக் கடவுளின் வெப்பம் தண்ணெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. ஒரு புல்லுக்கு நிகராகுமா குபேரனுடைய செல்வம்; என்று கூறுமளவுக்கு அறுகின் நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. "ஆனைமுகக் கடவுளினுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது." என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக் கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட்பொதிந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்புகளும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமாய் ஆற்றலாய் ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.

**கலாநிதி சபா ஜெயராசா,**
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக் கொள்ளல்

முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர், சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருவாராய் குடகு மலையில்சிவபூசைசெய்து கொண்டு இருந்தார். அப்போது இந்திரன் சீகாழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது. நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து "அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும்" என்று கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரியடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஓட்டினார். காகம் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார். அகத்தியர் அச்சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார். ஐங்கரங்களுடன் விநாயகர் காட்சி தந்தருளினார். அகத்தியர் திகைத்து நடு நடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே!" வேத வித்தகனே! உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுவதற்குக் கையை ஓங்கினேனே. என்னே என் சிறுமதி 'என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றிக் கருணை புரிந்தார்." "இன்று முதல் நம் திருமுன் பய பக்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள்" என்று வரமளித்தருளினார். இதனால், விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில், குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று.

**தேங்காய் உடைப்பதன் காரணம்**

தேங்காய் உடைப்பதன் காரணம், தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயா மலம், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்ம மலம், உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம். இந்த மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படுகின்றது. இறைவனிடத்தில் "மும்மலத்தை நீக்கி சுத்த, சத்துவ, சித்தத்தை அருள வேண்டு" மென்று குறிப்பிடுவதே தேங்காய் உடைப்பதன் உட் பொருளாகும்.

**வாரியார் சுவாமிகள்**

**திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோப்புக்கரணம்

நமது உள்ளங்காலிலிருந்து தலையுச்சிவரை அநேகம் நரம்புக் கற்றைகள் உள்ளன. நாம் சுறுசுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருந்தால் (தோப்புக்கரணத்தால்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல், இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும். அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுஷீம்னா என்ற நாடி, தட்டி எழுப்பப்படுகிறது. இரு கரங்களில் நெற்றிப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஷஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும், விநாயக உபாஸனையின் மூலம் சுஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்தத் தேவதையை வணங்கத் தொடங்கினாலும், முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸ்துதியைக் கூறி நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வதால் ப்ரம்மரந்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷீம்னா நாடி. இது மனித சரீரத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஷஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரசிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலைநிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து ப்ரும்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பாள். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு - தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ணவேண்டும். அதற்கு மனத்தை ஒரே நிலையில் ஐக்கியப்படுத்தி, நெடுங்காலம் ஐபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து பூஜை முதலியன புரிதல் மறைமுகமாக யோகத்தீமூட்டு என்று உணர்த்தவேயாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திரவிற்பனர்கள் ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான அறுகம்புல், வெள்ளெருக்கு, வன்னிப்பத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.

**பிரம்மஸ்ரீ வேதாகமமாமணி**
**சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விரதங்கள்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் நான்கு. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக் கிழமையும் (சுக்கிரவாரம்), ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும் தேய்பிறைச் சதுர்த்தியும் (சங்கட ஹர சதுர்த்தி) விநாயக சஷ்டியுமே அவை. சிறப்பாக ஆவணி மாத வளர்பிறையில் வரும் சதுர்த்தியையே, மக்கள் விநாயக சதுர்த்தி எனக் கொண்டாடுகின்றனர்.

மிகப் பழங்காலத்தில், ஆவணித் திங்களை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களைக் கணித்தல் பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஞாயிற்றுக் கிழமைக்குரியது சிங்க ஓரை (சிம்ம இலக்கினம்) என்றும், அதற்குரிய திங்கள் ஆவணி ஆதலின் ஆவணி தொடங்கி மாதங்களைக் கணக்கிடுதல் ஒரு முறை என்றும் பண்டையோர் கொண்டிருந்தனர்.

இந்த ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியே விநாயகர் அவதரித்த நாளாகும் என்பர். ஒரு சமயம் உமாதேவியார் விநாயகர் மந்திரமாகிய ஏகாக்ஷரத்தை உபதேசமாகக் கேட்டுப் பிள்ளையாரை உபாசித்து வந்தார். விநாயகர் ஆறு திருக்கரங்களோடும், யானை முகத்தோடும் வெண்ணிறமான குழந்தையாகப் பாலசந்திர விநாயகர் என்ற திருப்பெயர் தாங்கி, உமாதேவிக்கு மகனாகத் தோன்றினார்.

அந்நாள் ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும் (முருகன் அவதரித்ததும் விசாக நட்சத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது) சோமவாரமும் (திங்கட்கிழமை), சிம்ம இலக்கினமும் கூடிய நாளாகும், ஆகையால் ஆவணிச் சதுர்த்தி மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணால் விநாயகப் பெருமானின் திருவுருவம் அமைத்து, அதில் விநாயகரை மந்திரம், பாவனை, கிரியைகளால் எழுந்தருளச் செய்து, அபிஷேக அலங்காரங்கள் செய்து நிவேதனப் பொருள்கள் வைத்துப் போற்றி வழிபடுதல் முறையாகும்.

நிவேதன வகையில் மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம் முதலியவை சிறந்தவையாகும். அவருக்கு உகந்த மலர்கள், தும்பை, வன்னி, எருக்கு, அறுகு, கொன்றை முதலியவையாகும். இவ்விதம் பெருமானை வழிபட்டு மறுநாள் அவ்வுருவத்தைத் திருக்குளத்திலோ, புண்ணிய ஆறுகளிலோ விட்டு விடுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறைகளில் வரும் சதுர்த்தி திதிகள்[1] வழிபாட்டுக்கு உகந்தவை.

வளர்பிறை (சுக்லபட்ச) சதுர்த்தி திதியின் அதிபதியான தேவி, தன்னை அவருடைய இருப்பிடமாகச் செய்து கொள்ளுமாறு வேண்டினாள். அதற்கு அருள் புரிந்த விநாயகர், 'நான் உனக்கு மத்தியானத்தில் காட்சி அளித்த படியால், சுக்லபட்ச சதுர்த்தியும், மத்தியானமும் கூடிய நன்னாளில் என்னை வழிபடுவோர், என் அருளைப் பெறுவர். சதுர்த்தியன்று ஆகாரமில்லாமல் என்னை வழிபடுவோருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் வழங்குவேன்' என்றார்.

ஆவணித் திங்கள் வளர்பிறையில் வரும் சதுர்த்தி நாளில், இந்தச் சதுர்த்தி விரதத்தைத் தொடங்கவேண்டும். அன்று விடியற்காலையில் எழுந்து நீராடி, அன்றாடக் கடமைகளைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பிறகு, அர்ச்சனைக்குரிய மலர்களையும் மற்றும் அபிஷேகப் பொருட்கள், தூபதீபம், பூசைக்குரிய பொருட்களையும் சேகரித்துப் பூஜை மண்டபத்தை அமைத்து, விநாயகரை வழிபட வேண்டும், இவ்வாறு அடுத்த மாத வளர்பிறைச் சதுர்த்தி வரையில் நாள்தோறும் முறைப்படி பூஜை செய்யவேண்டும்.

இந்த முப்பது நாள்களிலும் ஆகாரம் பகலில் உறக்கம் இல்லாமல், இந்திரிய ஆசைகளை நீக்கி, இறை எண்ணத்திலேயே ஈடுபட வேண்டும். 31 ஆவது நாள் விருந்தினர், ஏழைகளோடு இருந்து உணவு உண்ண வேண்டும்.

முப்பது நாள் உண்ணாவிரதம் இருக்க இயலாதவர்கள், பூஜைக்கு முதல் நாளாவது அப்படி இருந்து, மற்ற நாட்களில் பால், பழம், அவிசு, (உப்பின்றி சமைத்த உணவு) முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை உண்ணலாம். முப்பது நாள் விரதம் இருக்க முடியாதவர்கள், பூஜை தொடங்கிய ஒரு நாளாவது உணவு, உறக்கம், இச்சை முதலியவற்றை நீத்து, இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.

கிருஷ்ணபட்ச சதுர்த்தியின் அதிபதியான சக்தி, விநாயகரை வழிபட்டபோது அவர் கூறினார். 'சந்திரோதயத்தில் நீ என்னை வழிபட்டதால், கிருஷ்ணபட்ச சதுர்த்தியும் சந்திரோதயமும் கூடிய காலம் முக்கிய விரத நேரமாகும். அப்போது என்னை வழிபடுவோருக்கு என் அருள் நிச்சயம் கிட்டும். சங்கடஹர சதுர்த்தி[2] விரதம் கடைப்பிடிப்போரின் சங்கடமெல்லாம் தீர்ந்து விடும். உனக்கும் சங்கஷ்டஹரணி என்ற பெயர் உண்டாகட்டும்[3] என்றார்.

அங்காரகன் விநாயகரை ஒரு செவ்வாய்க் கிழமை சதுர்த்தியில் (மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தி) பூஜை செய்து பேறு பெற்றான். அதனால் செவ்வாயும் சங்கடஹர சதுர்த்தியும் சேரும் நாள் மிகச்சிறப்பு வாய்ந்ததாகும். மாசி மாதம் தேய்பிறைச் செவ்வாய்க்கிழமையன்று சதுர்த்தி வருமானால் அன்று கணபதிக்கு உகந்த சங்கடஹர சதுர்த்தி விரதத்தைத் தொடங்குவார்கள்.

சங்கடஹர சதுர்த்தியன்று காலை முதல் சந்திரோதயம் வரை, நீர் தவிர வேறு ஏதும் உட்கொள்ளாமல் சந்திரனைப் பார்த்த பின்னர்[4] அருக்கியம் கொடுத்து (மந்திர நீர் இறைத்தல்) 21 அறுகம்புல் கொண்டு, விநாயகனின் 21 திருப்பெயர்களை அர்ச்சித்து அதன்பின் உப்பு, காரம், சேர்க்காத உணவை உட்கொள்ளவேண்டும்.

இரவு கண்விழித்து விநாயகரின் கதைகளைக் கேட்க வேண்டும். இவ்வாறாக ஓராண்டு காலம் சதுர்த்தி நாட்கள் தோறும் விடாமல் விரதம் மேற்கொள்ளவேண்டும்.

ஆண்டு முழுவதும் 24 சதுர்த்திகளிலும் விரதம் மேற்கொண்டு ஆவணி சுக்கில சதுர்த்தியில் விரதத்தைப் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவதன் வழி பெறற்கரிய பேறுகளைப்[5] பெறலாம்.

விநாயகரை வழிபடுவதற்கு ஏற்ற 21 பத்திரங்கள் (இலைகள்) வருமாறு: அலரி, துளசி, மருதமர இலை, எருக்கு, அறுகு, (வேருடன் கூடிய வெள்ளறுகு மிகச் சிறந்தது என்று கூறுவர்), கையாந்தகரை (கரிசிலாங்கண்ணி), முள்ளி, அரசமர இலை, பச்சை (மாசிப் பச்சை), நாயுருவி, நாவல்மர இலை, எலுமிச்சை இலை, நொச்சி, சாதிப்பூ இலை, இலுப்பைமர இலை, இலந்தைமர இலை, தேவதாருமர இலை, மாதுளை இலை, விஷ்ணுகாந்தி இலை[6].

**விநாயக சஷ்டி**

ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சோம வாரமும், சிம்ம இலக்கினமும் கூடிய நன்னாளில் கயமுகாசுரனைச் சம்ஹரிக்கும் பொருட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் அவதரித்தார். அவர் கயமுகாசுரனை அடக்கி வாகனமாக்கிக் கொண்ட வரலாற்றையும் அறிந்துள்ளோம்.

முருகனைப் போலவே விநாயகப் பெருமானுக்கும் சஷ்டி விரதம் உகந்த தாகிறது. ஒரு முறை சிவபெருமானும் உமாதேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தபோது, மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகிவிட்டது. அதனால் கோபமுற்ற உமாதேவி, மகாவிஷ்ணுவைக் குருட்டு மலைப்பாம்பாகப் போகுமாறு சபித்துவிட்டார். அவருக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரை காத்திருக்குமாறு சொன்னார்.

விநாயகர் கயமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர், கணபதீச்சரத்திலிருந்து மூஷிஹ வாகனத்தில் திரும்பும் வழியில், ஆலங்காட்டில், மலைப்பாம்பாக மாறியிருந்த மகாவிஷ்ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சுய உருவைப் பெற்றார்; மகிழ்ச்சி அடைந்தார். விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துயரங்களிலிருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங்களையும் அடையும்படி அருள்புரிய வேண்டும் என்று கோரினார். அதற்கு விநாயகரும் மகிழ்ச்சியோடு இசைந்தார்.

இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறப்பெறுகிறது. கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக, மார்கழித் திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப்பிடிக்கப் பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

இவ்விரத காலத்தில் 21 நூல் இழைகளினால் ஆகிய காப்புக் (காவல்) கட்டிக் கொள்வர். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக்கட்டிலும் கட்டிக் கொள்வர்.)

21 நாட்களும் ஒரு பொழுது உண்டு, இறுதி நாளில் உபவாசம் இருந்து, இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலானவற்றை நிவேதித்துச் சிறப்பு வழிபாடு செய்ய வேண்டும். 21 நாட்களும் பெருங்கதை எனப்பெறும் விநாயக புராணம் (பார்க்கவ புராணம்) படிக்க வேண்டும்; கேட்கவேண்டும். (இந்த 21 நாட்களிலும் விநாயக கவசத்தை நாள் ஒன்றுக்கு 21 முறை பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கைகூடும்.)

அடுத்த நாள் ஏழை எளியவரோடு இருந்து உணவு உண்டு. விரதத்தை நிறைவேற்ற வேண்டும்.

**குறிப்புகள்**

1. விநாயகருக்குரிய ஷோடச (16) நாமாக்களில் இது ஒரு பெயர்; Baala - chandran, அதாவது குழந்தை சந்திரன் என்று நிறையப்பேர் இதைத் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். Baa இல்லை; அது தப்பு. Bhaa என்பதே சரி, Pa, Pha, Ba, Bha என்ற சம்ஸ்க்ருதத்தில் நாலு இருப்பதில், நாலாவதான Bha காரம் போட்டு Bhaala chandran, என்று சொல்ல வேண்டும். Bhaalam என்றால் நெற்றி அல்லது முன் தலை. முன்னந்தலையில் எவர் சந்திரனை தரித்துக்கொண்டிருக்கிறாரோ அவர் Bhaala chandran, அல்லது இரண்டாவது ப - வாக, Phaala என்றும் சொல்லலாம். அப்படிச் சொன்னால், கேசத்தில் இரண்டு பக்கங்களில் ஒன்று. ஈசுவரன் ஜடாபாரத்தில் நேராக சந்திரனை வைத்துக் கொள்ளாமல், இடப்பக்கமாகச் சாய்த்து வைத்துக் கொண்டிருப்பதாக அநேக சில்ப் - சித்திரங்களில் பார்க்கிறோமல்லவா? அங்கே பரமசிவன் Phaala ஆகிறார். ஆனால், பாலசந்திரன் என்ற பெயர், முக்கியமாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்குத்தான். காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், 4 ஆம் பாகம்.

2. சாதாரணமாக ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு குறிப்பிட்ட திதி விசேஷமானதாகும். அது வளர்பிறை, தேய்பிறை என்கிற இரண்டில் ஏதோ ஒன்றில் வருவதாகத்தான் இருக்கும். முருகனுக்கு சஷ்டி என்றால் அது சுக்கல சஷ்டிதான் பரமேஸ்வரனுக்குச் சதுர்த்தசி என்றால் கிருஷ்ணபட்ச சதுர்த்தசிதான். அதற்கு மாத சிவராத்திரி என்று பெயர். இராமருக்கு நவமி பூஜை என்றால் சுக்கல நவமிதான். கிருஷ்ணருக்கு அஷ்டமி பஜனை என்றால் கிருஷ்ணபட்ச அஷ்டமிதான். அம்பாளுக்குப் பௌர்ணமி - அது சுக்லபட்சத்தில் மட்டும்தான் உண்டு. ஆனால் பிள்ளையாருக்கும் மட்டும் சதுர்த்தி விசேஷம் என்றால், சுக்லபட்ச சதுர்த்தி, கிருஷ்ணபட்ச சதுர்த்தி இரண்டுமே அந்த விசேஷத்துக்கு உரியவனாக இருக்கின்றன- காஞ்சிப் பெரியவர், தெய்வத்தின் குரல் 4 ஆம் பாகம்.

3. சங்கடஹர சதுர்த்தி என்றால் உபத்திரவங்களைப் போக்குகிற சதுர்த்தி என்று அர்த்தம். ஆனால் ஹர என்ற இந்த முக்கியமான வார்த்தையை விட்டு விட்டு சங்கட சதுர்த்தி என்று சொல்கிறார்களே என வருத்தப்படுகிறார் சங்கராச்சாரிய சுவாமிகள்.

4. இந்தப் பூஜை முடியும்போது ரோஹிணி சமேதனான சந்திரனையும் பூஜை பண்ண வேண்டும் என்று, புராணத்தில் விநாயகர் குறிப்பிடுவதாகக் காஞ்சிப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

5. விநாயகப் பெருமானைச் சதுர்த்தி நாட்களில் வழிபடுவதால் கிடைக்கும் 21 பெரும் பேறுகள்: தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோட்சம், முகத்தில் பால் வடியும் தன்மை, வீரலக்ஷிமி கடாட்சம், விஜயலஷ்மி கடாட்சம், எல்லோரும் தன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்ப ரஷை, மக்கட்பேறு, நுண்ணறிவு நற்புகழ், சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன் வாக்குக்கு எதிர்வாக்கு அடங்கிப் போதல், கோபங் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிசாரம் (பகைவன் மரணம் அடையும்படி செய்யும் கொடுந்தொழில்), அடக்குதல், துயர் தீர்த்தல் - நஜன், வினை, தீர்க்கும் விநாயகர்.

6. அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ்ப் பாடல் ஒன்றில் (வருகைப் பருவம்)இவை குறிப்பிடப் பெறுகின்றன.

**எஸ்ஸாரெம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்குணத்தை விடுத்து நற்குணத்தை நாட வழிகாட்டும் விநாயக சதுர்த்தி விரதம்

இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் விசேட தினங்களில் விநாயக சதுர்த்தி மிக விஷேசமானது. விநாயக சதுர்த்தியிலே அடியார்கள் விரதமிருந்து, ஆலயத்திற்குச் சென்று, பூசைகள் வழிபாடுகளுடன் கொண்டாடுவர். விநாயகருக்குரிய விரதங்களுள் சிறப்பான இத்தினத்தினுடைய முக்கியத்துவம். அதனை அநுட்டிக்கும் முறைகள். அவற்றின் உள்ளார்ந்தமான தத்துவங்கள் என்பவற்றை அறிந்திருப்பது மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு மாதத்திலும் விநாயக சதுர்த்தி வழிபாடுகள் நடைபெறினும் ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி மிக விஷேசமானது. இத் தினம் விநாயகருடைய பிறந்த தினமாகக் கருதப்படுகிறது. விநாயக சதுர்த்தியின் சரியான பொருள் துர்க்குணத்தை விட்டு விலகியிருத்தலும், நற்குணத்தை நாடுதலுமாகும்.

கணபதி எமக்கு ஆன்மீகசக்தியையும், உயர்ந்த ஞானத்தையும் அளிக்கின்றார். இவைதான் சித்தி, புத்தி என அழைக்கப்படுகின்றன. மனது பரிசுத்தமாக இருக்கும் போதே புத்தி நன்கு செயற்படுகின்றது. புத்தி மலர்ச்சியடைந்து செயற்படும் போது சித்திகள் அடையப் பெறுகின்றன.

ஆகவே மனம் பரிசுத்தமாக இருக்கும் போதுதான் புத்தி, சித்தி இவையிரண்டும் சிறந்து விளங்குகின்றன. விநாயகர் புத்தியினையும், சித்தியினையும் வசீகரிக்கின்றார். புத்தியும், சித்தியும் ஷேமம், ஆனந்தம் ஆகியவற்றைத் தருகின்றன. இதனையே புராணமானது விநாயகருக்கு சித்தி, புத்தி என்று இரு மனைவியரென்றும், சேமம், ஆனந்தம் என்ற இரு புதல்வர்கள் என்றும் கூறுகின்றன.

தங்கம், வெள்ளி, இரும்பு என்ற உலோகங்கள் வைக்கப்பட்டு இவற்றிடையே காந்தம் ஒன்று வைக்கப்பட்டால் அது இரும்புத் துண்டையே கவர்கின்றது. மற்றவை எவ்வளவு மதிப்பில் உயர்ந்தவை என்றாலும் அவற்றைக் கவர்வதில்லை. அவ்வாறே விநாயகரும் புத்தி, சித்தி வரம் பெற்ற மனிதனையே பிரியமுடன் கவர்ந்து கொண்டு அருள் புரிகிறார்.

**யானைத் தலையின் தத்துவம்**

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது. யானைக்கு மேதாசக்தி அதிகம் மேலும் யானையின் காதுகள் பெரியதாக இருப்பதால் நுண்ணிய சப்தங்களைக் கூட அதனால் கிரகிக்க முடிகிறது. இறைவன் புகழைக் கேட்பது என்கின்ற ஆத்மீக சாதனையின் முதற்படி காதுகள் கூர்மையாக இருப்பது அவசியம்.

யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக்கொள்கிறது. தேவையற்றவற்றை உதறி விடுகின்றது. நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்றுக்கொள்கிறது. இவ்வாறு மனித குலத்திற்குத் தேவையானவற்றை விநாயகர் எமக்குக் கற்றுத் தருகின்றார்.

**மூஷிகத்தின் தத்துவம்**

விநாயகரின் வாகனம் மூஷிகம். இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் தான் சஞ்சரிக்கும். மூஷிகம் வாசனை பிடித்துக் கொண்டே எந்தெந்த உணவுப் பொருள் எங்கிருக்கிறது எனக்கண்டு கொள்ளும் ஆத்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும் வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கின்றது. எனவே தான் அஞ்ஞானத்தையும் ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு உள்ளார்.

விநாயக சதுர்த்தியில் விஷேசமான உணவுப் பொருள்கள் கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன. அப் பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் சம்பந்தமானவையாக இருக்கும். எள் அறுவடையாகும். எள்ளானது சுவாசம் தொடர்பான நோய்களையும், கண் நோய்களையும் தீர்க்கவல்லது. நீராவியில் அவித்த பண்டங்கள் சுலபமாக ஜீரணிக்கக் கூடியது ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும், ஆனந்தமும் கூடிய வகையில் இறைவனை வழிபட்டார்கள்.

**விநாயகர் பூசை**

விநாயகர் பூசைக்கு அறுகம்புல் பயன்படுத்தப்படுகின்றது. அதற்குரிய காரணத்தை விளக்கப் புராணங்களில் ஒரு நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

ஒருமுறைசிவனும்பார்வதியும்கைலாயத்தில் தாயம் ஆடிக் கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றனர் என்ற பொறுப்பு நந்தியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நந்திக்கு ஈஸ்வரன் மீது மிகவும் பிரியம். அதனால் அவர் தோற்றபோதும் ஈஸ்வரனே வென்றவர் என அறிவித்தார். பார்வதி கோபமடைந்து நந்தியைச் சபித்தார். நந்திதேவர் பார்வதியின் பாதம் பணிந்து பாப விமோசம் கோர பார்வதி மனமிரங்கி பாப விமோசனம் அளித்தார். ஆவணிச்சதுர்த்தியாகிய என் மகன் கணபதியின் பிறந்த தினத்தன்று உனக்குப் பிரியமான அறுகம்புல்லினால் அவனை அர்ச்சித்தால் உனக்கு சாபம் நீங்கும் என அருளினார்.

உயிர் வாழ்க்கைக்கே தலைவர் விநாயகர். சுயலாப நோக்கம், சுயநலம் இவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துவர். பிறர் நலம் நாடி ஆன்மீக வாழ்க்கை நடத்தவேண்டும். அதன்மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே விநாயக வழிபாட்டின் தத்துவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவு செய்கின்றன

குமாரசாமி சோமசுந்தரம்

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம் ஆன்மீகத்தை விளங்க வைக்கிறது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும் போதே வாழ்க்கை செழுமையும் சீரும் பெறுகிறது. இதனாலேயே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்துள்ளனர்.

சைவப் பண்பாட்டின் சிகரமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இறைவன் உயிர்க்கு உயிரானவர். எம்மையெல்லாம் படைத்துக், காத்து அருள்பாலிப்பவன். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்ற தலைவன் அவன். எம் இறைவன் திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறார் உமாபதிசிவம்.

சைவம் சிவ சம்பந்தமுடையது. சிவம், சக்தி சம்பந்தமுடையது. சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு, சைவத்தின் சிறப்பு இதனை விளக்குவது அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் "அம்மையே அப்பா" எனத் தீர்க்கமாகக் கூறுகிறார். மணிவாசகப் பெருமான். சிவபெருமானைத் "தோடுடைய செவியன்" ஆகவே திருஞானசம்பந்தர் தரிசித்துள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள் அணியும் ஆபரணம், குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் எனபது கவனிக்கத்தக்கது.

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் என்பனவும் ஆகம விதிப்படியே நடத்தப்படுகின்றன. தெய்வ சான்னித்தியம் ஆலயங்களில் பேணப்படுவதற்கு இவையே அனுசரணையாக உள்ளன.

ஆலயங்கள், தனிமனித நல்வாழ்விற்கும், நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும், உலகத்தவர் நன்மைக்கும், பண்பாட்டு ஒழுக்க வளர்ச்சிக்கும், சமூக, கலை கலாசார விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி வருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கண் ஆலயங்களேயாகும்.

**ஆலயம் ஏன்?**

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு, நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, சுவர்கள் அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் நிறுவி, அதனையே இறைவனின் இல்லமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக்கூடியதாகும். என வினா எழுப்புகிறார்கள் சிலர். அவர்களுக்குத் தக்க பதில் அளிக்க வேண்டியது நம் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அவற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகிறது. அவ்வாறிருந்தும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலப்படக்கூடிய பொருள் அன்று. அதுவே கடவுளின் இயல்புமாகும். கடவுளின் சுய நிலை அருவம் அதாவது உருவமற்றது, உரையற்றது, குணங்குறிகள் அற்றது, நாமமற்றது.

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளை தியானிக்கவோ, அதனுடன் உறவு கொள்ளவோ பேசவோ, ஞானிகளுக்கு மட்டுமே இயலும். எம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும் சிதறிய எண்ணங்களும் உடையவர்கள். ஒரு கணமேனும் சிந்தையை அடக்கிச்சும்மா இருக்கின்ற திறன் அற்றவர்கள். அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் செய்ய வேண்டுமாயினுஞ் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினுஞ் சரி, ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவமாக முன்னிலைப் படுத்திக் கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக்கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மலையைப் பற்றிய எண்ணக்கருவை ஏற்படுத்துவதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்க வேண்டும். அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றைக் காட்ட வேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல், அது பற்றிய விளக்கத்தைப் பெறமாட்டார்கள். ஒன்றை விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே, சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவமாகத் தியானிப்பதற்கோ அருவ நிலையிலான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகின்றது. அன்றேல் உருவத்தின் சாயல் வேண்டப்படுகின்றது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப்படுத்தாமல், சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ, தியானிக்கவோ, அல்லது கடவுளுடன் பேசவோ, உறவாடவோ இயலாமற் போய்விடுகிறது. சிவாகமங்களின் தோற்றம், எமக்கு எந்த வகையில் இப்பரிசோதனையைத் தீர்ப்பதற்கு உதவிற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்களை அமைப்பதற்கும், தேவப்பிரதிஷ்டைக்கும், நித்திய, நைமித்தியக் கிரிகைகள், வழிபாடுகள் மூலம் தெய்வ சான்னித்தியத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழி வகுத்தன. உருவ வழிபாட்டை அதிகார பூர்வமாக்கிய பெருமை ஆகமங்களைச் சாரும். கடவுளை உருவமாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிபடவும், கடவுளுடன் பேசவும், உறவாடவும் சாதாரண மக்களுக்கு இயலுவதாயிற்று. ஆலயங்கள் ஏன், என்பதற்கு இப்பொழுது விடை கிடைத்துள்ளதல்லவா.

### ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கு சான்னித்தியத்தை ஏற்படுத்துபவை. அதனால் ஆலயத்தில் அமைதியும், தூய்மையும் நிலவச் செய்ய வேண்டியது வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களின் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் நமக்கு அறிவிக்கின்றார். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குவதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடம் தூய்மையாக வைத்திருத்தலும், ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்தனையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்வதற்கு ஆலயச் சூழலில் அமைதி இருக்கவேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக் கலைப்பாண்கள் காணப்படின், மன அடக்கம், புலன் அடக்கம் இரண்டுமே கலைந்துவிடும்.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறை, மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கு அவர்களில் பெரும்பாலானோர் நடந்து கொள்ளும் விதம், அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகிறது. தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகா பாவம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள், கோபுர வாயிலினூடாகவே செல்லுதல் வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடி நின்று பேசிக் கொண்டும், வீண் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டும் ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டும் இருந்தால், பிறருக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்தும், அங்கேயும் அமைதி இல்லையென்றால், வேறெங்குதான் அமைதியைக் காணமுடியும். இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கிறார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலிபெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப் புகின்றனர். பக்திப் பாடல்கள் என்ற பெயரால் ஒலிகளை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள், இரச்சல்களின் மத்தியில் மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவனை வழிபாடு செய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்.

அமைதி, சாந்தி, நிம்மதி - இவைதான் இன்று எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை, வேலைத் தலத்தில் இல்லை, வாழும் சமூகத்தில் இல்லை. ஏன் நாட்டிலும் இல்லை. இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல்; தூய்மை பேணல்; வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல்; பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுத்தாதிருத்தல்; ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்துதல் என்பனவற்றின் மூலம், திருவருட் துணைகொண்டு திருக்கோயில்களில் தெய்வ சான்னித்தியம் நிலைபெறச்செய்தல் வேண்டும்.

**செய்யத் தகாதன**

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, நித்திய நைமித்தியகங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்று தெய்வ சான்னித்தியம் நிலவ வழி செய்யப்படுகிறது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப் பெற்றிருப்பவற்றிற்கு புறம்பாக எதுவும் நடைபெறக்கூடாது, நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரகங்களைச் சிவாச்சாரியார்கள், அர்ச்சகர்கள் என்போரைத் தவிர வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டு தீண்டுவதையும் கைகளால் அளைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டு வந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும்போதும், வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரகங்கள் மீது தாமும் போடுகிறார்கள். சிலர் கோயில் மணிகளை தாம் நினைத்த நேரங்களில் அடித்துவிட்டுச் செல்கிறார்கள். சுவாமி திருஉலா வருவதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது இருத்திப் புகைப்படங்களும் எடுக்கிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு சிலர் செய்வதைப் பார்த்து விட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதிப் பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகிறார்கள்; சுவர்கள், தூண்கள், வாகனங்கள் என்பவற்றில் பூசியும் விடுகிறார்கள். பூக்கள், பத்திரங்கள், வில்வங்களைக் கீழே போட்டு விடுவதால் பிறர் கால்களால் அவை மிதிக்கப்பட்டு விடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டு விடுவதால் பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றது. இவை யாவும் பாவச் செயல்களாகும்.

விபூதிப் பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கிப் பின் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியில் அணிதல் வேண்டும். நெற்றியை நீட்டி விபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரியாரைக் கேட்பது முறையன்று. தீர்த்தத்தை இருகைகளாலும் வாங்கிப் பருகுதல் வேண்டும். தீர்த்தத்தை வாங்கித் தலையிலே பூசிக் கொள்ளலாகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும் போது கோமுகியில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையற்றது.

கூந்தலைவிரித்து விடுதல், மூக்குநீர்சிந்துதல், எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகளில் கலந்து விட்டும் ஆலயத்திற்குள் செல்லுதல் ஆகாது. இவை யாவும் பாவச் செயல்களாகும் தெய்வ சான்னித்தியம் பாதிப்படைகிறது.

**பிரார்த்தனை**

சைவசமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள். ஆலயங்களிலும் வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம் என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இவ்விடத்திலும் "அவன் தாள்நினை" என்று பெரியோர்நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனைகள், கடவுட் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில் நிறைக்கின்றன. அதனால் மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயற்தூய்மை என்பன ஏற்படு கின்றன. அப்படி யானவர்களின் வாழ்க்கையும் தூய்மை கெட்டு விடுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டு விட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப் பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.

பிரார்த்தனைகள், காமியம், நிஸ்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பிரார்த்தனை, காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிஸ்காமியம் என்றும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.

உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எந்த ஒன்றையும் கேட்காது, அவனைப் பிரார்த்திப்பதும், அவனுக்குப் பணிந்து நடத்தலும்அவன்எமக்குத்தருபவற்றைமனமார ஏற்று மகிழ்வதுமேயாகும். பிரார்த்தனையின் அதி உச்சநிலை, இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்து விடுதலேயாகும். பூரண சரணாகதி என்பது இதனையேயாகும்.

கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், எமது தேவைகளையும், விருப்பங்களையும் கடவுள் அறிவார். ஆயினும் எம்மில் பலர் உலகியல் ஆசைகளையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாதவிடத்துக் கடவுளை வைது தீர்க்கிறோம். இவ்வாறு நடந்து கொள்ளுதல் பிரார்த்தனையை கொச்சப்படுத்துவதாக அமையும். எனவே, பிரார்த்தனை செய்தல் எமது பணி; மிகுதியைக் கடவுள் பார்த்துக்கொள்வர். "என் கடன் பணி செய்து கிடப்பதே"; "இறைவன் கடன் என்னைத் தாங்குதல் என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஓர் ஆன்மீகப் பயிற்சியாகக் கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், நாமசங்கீர்த்தனம், கூட்டுவழிபாடு, தியானம், ஜெபம், விரதமனுட்டித்தல், தேவார திருவாசக பாராயணம், பூசை வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டேன், பொருள் வேண்டேன் உன் திருவருள் தான் வேண்டும்" என்கிறார் ஓர் அருளாளர். மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மையுடையோராக்குகின்றன.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல் என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும் பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப் பெறுதலுக்கு உறுதுணையாக விளங்குகின்றன என்பதை உணர்வோமாக.

**குமாரசாமி சோமசுந்தரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணியின் மகத்துவம்

ஆலயத் திருப்பணி சிவத்தொண்டுகளில் மகத்துவம்வாய்ந்ததொன்றாக நமது முன்னோர் கருதினர். பெரியபுராணம் கூறும் அடியார் களில் பூசலார் நாயனார் என்பவரும் ஒருவர். அவர் சிவபெருமானுக்கு ஆலயமெடுக்க எண்ணிப் பணம் இன்மையால் அந்த யோசனையைக் கை விட்டு மனத்தால் ஆலயம் எழுப்பினர் எனவும் காடவர் கோமான் பெரும் பணச் செலவிற் கட்டிய ஆலயப் பிரதிஷ்டை நாளும் பூசலாரது அகக்கோயிற் பிரதிஷ்டை நாளும் ஒரே முகூர்த்தத்தில் அமைந்து விட இறைவன் பூசலார் ஆலயத்துக்கே முன்னுரிமை கொடுத்தது எனவும் பெரிய புராணம் விரித்துப் பேசும், இது ஆலயத்திருப்பணியோடு அன்பின் மகத்துவத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தாய்நாடாகியதமிழ்நாட்டில்முன்னாளைய அரசர்களே முன்னின்று ஆலயத் திருப்பணி களை நடத்தியதாக அங்கு காணப்படும் சாசனங்கள் பறைசாற்றி நிற்கின்றன. சேய் நாடாகிய ஈழநாட்டிலும் அரசர்கள், பணம் படைத்த பிரபுக்கள், பொது மக்கள் ஆகிய முத்தரப்பினரும் ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்டனரெனத் தலவரலாறுகள் கூறும், பண்டைய தமிழ் அரசர்கள் தமது அரண்மனைகளையும் அரசிருக்கைகளையும் பெரும் பொருள் செலவு செய்து அமைக்காமல் ஆலயங்களைச் சிறப்புற அமைப்பதிலேயே கண்ணும் கருத்துமாகவிருந்து செயலாற்றினர். "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க ஆலயங்களை நன்கு அமைப்பதாற் கிடைக்கும் பெரும் பேற்றினை அவர்கள் அறிய வைத்திருந்தனர் என்பது நன்கு புலனாகிறது.

ஒரு தாவரத்தின் வேரில் ஊற்றப்படும் நீர் அத்தாவரத்தில் இலை உள்ளிட்ட அனைத்துப் பகுதியையுஞ் செறிவது போல பிரபஞ்சத்தின் வேராகவும் எல்லாமாகவும் விளங்கும் இறைவனுக்கு ஆற்றும் பணி எல்லாவுலகமும் பெறுமென்பது அறிவு நூற் கருத்தாகும். திருப்பணி என்ற பதம் இறைவனுக்குச் செய்யும் எல்லாப் பணிக்கும் பொதுவானதாயினும் சிறப்பாக ஆலயக் கட்டடப் பணியே சுட்டுவதாகும். தாய் நாட்டிலுள்ள தஞ்சைப் பெருங்கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், கோயில் என்பதற்கே தனியுரிமை பெற்ற சிதம்பரேஸ்வரர் ஆலயம் முதலாய பலப்பல ஆலயங்களை ஆகம விதி பிறழாது அமைத்து அவ்வாகம விதிப்படியே நித்திய நைமித்தியங்கள் நடைபெற பலவற்றின் ஒழுங்குகளை மேற்கொண்டதில் அரசர்களுக்கு முக்கிய இடமுண்டென்பதை மறுக்கமுடியாது. ஈழத்திலும்குளக்கோட்டன்முதலிய மன்னர்கள் புரிந்த அரும்பணியை கல்வெட்டுக்களும், புராணங்களும் புகழ்ந்து பேசுகின்றன. ஆட்சியாளர் சைவமதத்தினராயிருந்து செய்த ஆலயத் திருப்பணிகளைப் பிற சமயஞ் சார்ந்த ஆட்சியாளர்கள் இடித்துத் சிதைத்ததும் சரித்திரம் புகலும் பாடமாகும். எனினுஞ் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையுமுடைய நம் முன்னோர் அத்தகைய அரக்கர் கூட்டத்திலிருந்து நமது ஆலயங்களையும் சைவ ஆசார சீலர்களையும் பாதுகாப்பதில் கொண்ட சிரத்தையும் ஆற்றிய பணிகளும் போற்றத்தக்கவை.

ஈழநாடு சுகந்திரமடையும் போது ஆட்சியாளர்களாக இருந்த ஆங்கிலேயர் ஆட்சியில் மத சுதந்திரம் ஓரளவுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டிருந்தாலும் தம் மதஞ்சார்ந்த மதத்தினருக்கே சலுகைகள் வழங்கி அம்மதங்கள் வளரவே மறைமுகமாக உதவினர். இந்நிலையிலும் அரசினரின் எதிர்பார்ப்பின்றிச் சைவ ஆலயங்களைக் கட்டியும் பிறபணிகளை மேற்கொண்டும் சைவசமயத்தை வளர்த்த நம் முன்னோர் பாராட்டுக்குரியவர் என்பது பேருண்மையாகும்.

நாடு சுதந்திரமடைந்த பின்னும் ஈழநாட்டவராகிய எமது ஆலயக் கட்டடங்களுக்கும் பூசை வழிபாடுகளுக்கும் பேரிடர் விளைந்தது அனைவருமறிந்ததே. தமிழ் இளைஞர்கள் தமது சுதந்திரத்திற்காக ஆட்சியாளர்களுடன் மோதத் தொடங்கியதை சாட்டாக வைத்து ஆட்சியாளரின் படைகளால் எமது ஆலயங்களுக்கும் குடியிருப்புக்களுக்கும் ஏற்பட்ட சேதம் பற்றிச் சொல்ல நாக்கூசும். உள்ளினும் உள்ளஞ்சுடும். குண்டு வீச்சுக்கு இலக்காகாத ஆலயங்கள் மிக மிகச் சிலவே. இடம் பெயர்ந்த மக்கள் பின்பு சொந்த இடங்களுக்கு வந்தபோது ஆலயங்களும் வீடுகளும் அவர்களைத் திடுக்கிட வைப்பனவாகவே காணப்பட்டன. மக்கள் பொருளாதாரத்தால் நொந்துபோயிருப்பினும் ஆலயங்களை மீளக் கட்டியெழுப்ப அவர்கள் எடுத்த முயற்சி சிறிதளவல்ல. அம்முயற்சியின் பேறாக மீள எழுந்து நிற்கும் ஆலயங்களில் ஒன்றே மூளாய் சித்தி விநாயகர் ஆலயம்.

ஆலயப் புனரமைப்பு வேலைகளில் மக்கள் பல்வேறு வழிகளில் முனைப்புடன் ஈடுபடும் போது அதற்கு முட்டுக்கட்டை போடும் விதத் தில் கேள்விக்கணைகளை எழுப்புவோரும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை. ஆலயங்களைப் பெரும் செலவில் கட்டுவது அவசியந்தானா? கட்டடத்துக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி வேலை வாய்ப்பற்றோருக்கு வேலை வழங்கினாற் பெரும் பயன் விளையுமல்லவா? கடவுளை ஆலயமில்லாத இடத்தில் தொழ முடியாதா? எங்கும் நிறைந்திருப்பவர் கடவுள் என்றால் அவர் ஆலயங்களில் மட்டும் இருப்பதாகக் கருதுவது அறிவுடைமையாகுமா? என்ற பலவித வினாக்கள் இக்காலப் பகுத்தறிவாளர்களால் எழுப்பப்படுகின்றன.

கைத்தொழில் மேம்படுத்த வசதியுள்ள இடங்களில் தொழிற்சாலையைத் தொடங்கி வேலை வாய்ப்பு வழங்குவது அரசினர் கடமை. வருவாய் கருதித் தொழில் அதிபர்களும் தொழிற் பேட்டைகளை ஆரம்பித்துத் தாமும் பணஞ் சம்பாதிப்பதோடு அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பணம் பொசியச் செய்யலாம். தமிழர் ஆட்சிக்கிடமில்லாத ஈழநாட்டில் ஆலயங்களைத் திருத்திப் புனரமைப்புச் செய்யப் பொதுமக்களே முயலவேண்டியுள்ளது. இப்பொழுது மக்கள் ஆலயம்எதற்குஎன்றவினாஎழுப்பாதுகட்டடத் திருப்பணிக்குப் பெருஞ் சிரமப்பட்டேனும் நிதி வழங்கி வருவதை நாலா திசைகளிலும் பார்க்கின்றோம். கேட்கின்றோம். ஆனால் ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதாகச் சொல்லி மக்களிடஞ் சென்றாற் பணங்கிடைக்குமா? கிடையாது என்பது உண்மை. பணஞ் சேர்க்கமுன் வருபவர் தமது பணப்பையை நிரப்ப வருகின்றாரென்றே மக்கள் அஞ்சி அகல்வர். ஆனால் ஆலயத் திருப்பணிக்குச் செலவிடும் பணத்தை ஏதாவது தொழில் வாய்ப்புத்தரும்வழியிற்பயன்படுத்தலாமென்ற கூற்று மக்கள் மத்தியில் எடுபடாதென்பதில் ஐயமில்லை. கூட்டுறவு முறையிற் சிலர் சேர்ந்து ஏதாவது தொழிலை ஆரம்பித்து நடத்தலாம். அத்துறையில் நாட்டமுள்ளோர் அவ் வழியில் முயல்வதை எவரும் விமர்சிக்கவும் மாட்டார்.

கடவுளை எவ்விடத்தும் வழிபடலாமென்ற கூற்று முற்றிலுந் தவறானதன்று. கடவுளை எவ்விடத்தும் வழிபடக்கூடிய தகுதியுடையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு வழிபடலாம். ஆனாற் சாதாரண மக்கள் வழிபடுவதற்குக் குறிகளும் அடையாளங்களுந் தேவை. அவை முறைப்படி அமைந்தவிடம் ஆலயமே. இறைவன் சைவசமயக் கோட்பாட்டின் படி அருவாயும், உருவாயும், அருவுருவாயும் இருக்கின்றான். எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் தனது வடிவம் சாதாரணமாகப் புலப்படாதிருப்பது அவன் இயல்பு புலப்படாத கடவுளுக்குப் புலப்படும் உருவங் கற்பித்து அமைந்துள்ளவை ஆலயங்களே. இவ்வாலயத் திருவுருவங்கள் ஞானிகளின் தரிசனப்படி அமைந்தவை. ஆலயம் இறைவனை நினைவிப்பதோடு மட்டும் நின்று விடாது இறைவனின் திருவுருவையுங் கொண்டிருப்பதால் அவ்வுருவங்கள் எமது இறை வழிபாட்டுக்குப் பேருதவி புரிவனவென்பதை மறுக்க முடியாது. இந்த வடிவங்களை உள்ளத்தமைத்து வழிபடுவோர்க்கு அவர் நினைத்த அவ்வடிவோடு அருள்புரிவன் என்பது நூற்றுணிவு.

"மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்னுந் திருக்குறளில் வரும் "மலர்மிசை யேகினான்" என்ற சொற் தொடர்க்குப் பரிமேலழகர் எழுதிய உரை விளக்கமும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. நிறைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார் என்பது அவர் தரும் விளக்க மாகும். அன்றாடம் கடவுளை நேரே கண்டு தரிசிக்கும் பேறு பெற்ற திருஞானசம்பந்தர் முதலாய பேரறிஞர்களே வழிபாட்டுக்கு ஆலயங்களையே நாடிச் சென்றனரென்னும் பேருண்மையையும் நாம் புறக்கணிக்கலாகாது.

ஆலயத்தை அமைப்பதற்கும் பூசை வழிபாடுகளை ஆற்றுவதற்கும் உரிய வழிமுறைகள் எமது சிவாகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது சைவ சமயக் கோட்பாடு. வேதங்களும் ஆகமங்களும் மனித அறிவினால் எட்டவுஞ், சுட்டவும் படாத பேருண்மைகளை யெடுத்துச் சொல்வதால் அவை இறைவன் வாக்கு என நம்முன்னோர் கொண்டு போற்றியது பொருத்தமானதே. இறைவன் உண்மையே உருவானவன். அவ்வாறான இறைவனிடமிருந்து வேத, சிவாகம உண்மைகளை உணர்ந்து உலகிற்கு வழங்கியோர் ஞானிகள். அதனால் அந்த உண்மைகள் மனித ஆற்றலுக்கு எட்டப்படாதவை. அநாதியானவை. நித்தியமானவை.

இறைவன் ஒருவனேயென்பதை ஒப்புக் கொள்ளுஞ் சைவசமயம் சிவன் என்றும் சிவகாமியென்றும் விநாயகரென்றும் வீரபத்திரரென்றும் சுப்பிரமணியரென்றும் இன்னும் பலவாறாகத் தெய்வங்களின் தொகையைப் பெருக்கிறது முறையா என்றும் வினாவும் சிலரால் எழுப்பப்படுவது முண்டு. பரம்பொருள் ஒன்றென் பதில் அசையாத நம்பிக்கை கொண்ட சமயம் சைவசமயம். சைவசமய முழுமுதற் கடவுள் சிவன் ஒருவனே என்பதிற் கருத்து வேறுபாட்டிற்கு இடமேயில்லை. ஒரு மனிதன் தொழில் ரீதியாகவும் இனசன வேறுபாடு காரணமாகவும் பல வேறு பெயர் கொண்டு சுட்டப்படுவது அனைவரும் அறிந்ததே. அதுபோல ஒரு பரம்பொருளே தனக்குரிய பல்வேறு கடமைகளைச் செய்யப் பல்வேறு மூர்த்திகளாகிப் பல்வேறு பெயர் தாங்கி நிற்பரென்பது சமயக் கோட்பாடு. தக்கன் வேள்விப் பொங்கலைத் தீர்த்தவர் வீரபத்திரர். அவருக்குஞ் சிவனுக்கும் பேதமில்லை. தக்கன் வேள்வியைச் சிதைத்தவர் வீரபத் திரரே யானாலும் அறிஞர்கள் சிவனே தக்கன் வேள்விக்கு முடிவு செய்தவரென்பது இருவரும் பேதாபேதமாக இருப்பரென் பதைச் சுட்டுவதாகும். பேதங் கருதும் போது அவர் சிவகுமாரனாக இருப்பரென்பதும் உண்மையே. தந்தையே மைந்தனாகப் பிறக்கிறானென்ற உலகியல் கோட்பாடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒப்பு நோக்கி இன்புறபாலது. சூரனின் தீரம் போக்கத் தோன்றியவர் சுப்பிரமணியர். அவருக்குஞ் சிவனுக்கும் பேதமின்றேனும் சிவனின் மைந்தனாகவே புராணங்கள் பேசும். பிரணவத்தின் பொருளறியாது தடுமாறிய பிரமதேவர் தலையிற் குட்டிச் சிறையிற் தள்ளியவர் முருகப் பெருமான். முருகனிடம் பிரணவப் பொருளைச் சிவனுக்குரைத்துச் சிவகுருவான நிகழ்ச்சியும் புராணங்களிற் கேட்டதே. கஜமுகாசுரனை அழிக்கத் தோன்றியவர் விநாயகர். ஆயுதங்களாற் கொல்லப்படாத வரம் பெற்றவன் கஜமுகன். அவனைத் தனது கொம்பால் அழித்தவர் விநாயகர் என்பார். சிவனின் சக்தி என நூல்கள் பாராட்டும் இறைவி நெருப்புஞ் சூடும் போல இறைவனின் வேறாகாதவன் என நூல்களே கூறும். இப்புராணக் கதைகள் எல்லாம் தத்துவார்த்த முடையவையெனத் திருமூலர் கூறுவர்.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றெனை ளென்பர் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரஞ் செற்றதை யாரறி வாரே"

என்பதன் மூலந் திரிபுரமெரித்த வரலாற்றை மும்மலங்களை யழித்த செய்தியாக அவர் கூறுவார். அவ்வாறே புராணக் கதைகளுக்குந் தத்துவார்த்தம் வேறு இருக்கலாம். அவ்வுண்மை வெளிச்சத்திற்கு வரும் வரை புராணக் கதை களை உண்மையென நம்பிக் கற்பதால் தீயபல னேதும் நிகழ்ந்து விடாது. புராணங்கள் தூல அருந்நதி நியாயம் பற்றி எழுந்தவை யென்பதும் பொருத்தமுடையதாகலாம். உண்மையான அருந்ததியை உணர்வதற்கு முதற்படியாகத்தூல அருந்ததியை உண்மையான அருந்ததியாகக் கொள்ளலாம். முதற் படியிலுள்ள மாணவர்கள் காகமும், நரியும் பிறபிராணிகளும் தம்முள் உரையாடியதை மறுக்காமல் ஏற்றுக் கொள்வதால் தீய பலன் ஏற்பட்டு விடுமென அஞ்சுவாரில்லை. பஞ்சதந்திரக் கதைகள் இந்த உண்மையின் அடிப்படையிலெழுந்து அரச குமாரர்களை விவேகிகளாக்கியதாக அக்கதை கூறுவதை யாருமறிவாரன்றோ? ஆதலால் புராணக் கதைகளை உண்மையெனக் கொண்டு மேலும் உண்மையைத் தேட முயல்வோமாக.

ஆலயத் திருப்பணியின் மகிமை பற்றிக் கும்பாபிஷேக மலரில் வெளிவரும் இக்கட்டுரையில் ஆலய மகத்துவம் பற்றிச் சில வார்த்தைகாளவது பேசாமல் விடுவது நன்றன்று. சித்தி விநாயகர் ஆலயம் அருள் வெளிப்பாடு நிறைந்த திருத்தலங்களில் ஒன்றென்பதை நம்முன்னோர் உறுதி செய்துள்ளனர். இவ்வாலயத்தை நிர்வகிக்கும் பரிபாலன சபை ஆலயத் திருப்பணியை மிகச் சிறப்பாக அமைக்க எண்ணியதும் அதற்காக உள்ளூரிலும் வெளியூர்களிலும் பரிபாலனசபை நிதி திரட்டி ஆலயத்தைக் கண்ணும் மனமும் கவரும் வகையில் அமைத்ததும் பாராட்ட வேண்டியன வென்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை. குற்றமே காண்பார் அகத்தியர் சொற் பாவிலுங் குற்றங் காண்பாரென்பது உலகறிந்த உண்மை. மனித முயற்சியால் முடிவனவற்றில் குற்றமில்லாதிருப்பது அரிதென்பது ஆன்றோர் கருத்து. குற்றம் பார்க்கில் சுற்றமில்லை யென்பதைக் கொண்டு,

"குணம்நாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்ற சான்றோர் வாக்கைக் கடைப்பிடித்து ஆலயத் திருப்பணியின் சீர்மை பகர்ந்து கீழ்மை கைவிடுவதே அறிவுடமை.

இவ்வழகிய ஆலயத்தில் எழுந்தருளும் விநாயகப் பெருமான் வழிபடுவோர்க்கும் மட்டுமன்றி மற்றையோர்க்கு விக்கினம் போக்கி விக்கினேஸ்வரராக விளங்க வேண்டுமென அன்புடன் அவர் பாதார விந்தங்களைச் சிரமேற் சூடி அமைவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்தப்படுவது எதற்காக?

இறைவனின் அளவிடமுடியாத - பகுத்து உணர இயலாத பெரும் சக்தியால் பிரபஞ்சம் இயங்குகின்றது. இறைவனின் சக்தி, சித்சக்தி என்று கூறப்படும். சித்து என்றால் அறிவு, தெய்வீக அறிவே சித்சக்தி ஆகும். ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது இந்த மாபெரும் சக்தியை, வேத ஆகம நெறிகளின் படி திருக்கோயில்களில் எழுந்தருள செய்விக் கப்படுகின்ற சிலை வடிவிலான திருமேனிகளில் நிலைபெறச் செய்கிறார்கள். திருக்கோயில் களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளில் தெய்வீக ஆற்றல் தேங்கி நிற்கிறது. அந்த மூர்த்திகளை நாம் வழிபட்டுப் பயனடைகிறோம்.

ஓடுகின்ற நீரை ஓர் அணையைக் கட்டி, அதில் தேக்கி வைத்து விவசாயக் காரியங்களுக்கும் இதர பணிகளுக்கும் பயன்படுத்துவதைப் போல, எல்லாம் வல்ல - எங்கும் நிறைந்துள்ள - கடவுளின் மாபெரும் சக்தியைத் திருக்கோயில்களில் தேக்கி வைத்து உயிர்கள் மேன்மை அடைவதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இதுதான் ஆலயங்களின் அடிப்படையான தத்துவம். மனத்தில் மாசு - அழுக்கு - உள்ள மனிதன் தினசரி சென்று தீண்டுவதால் ஆலய விக்கிரகங்களில் தேங்கியுள்ள இறைவனின் சித்சக்தி நாளாவட்டத்தில் நிலைபெறாமல் அகன்று விடும். அவ்வாறு நிகழாமல் தடுப்பவை கும்பாபிஷேகங்கள் என்று சைவநெறியிலும் சம்ப்ரோட்சணங்கள் என்று வைணவ நெறியிலும் குறிப்பிடப்படுகின்றன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் அல்லது சம்ப்ரோட்சணம் செய்விக்க வேண்டும். இவ்வாறு செய்ய இயலாத ஆலயங்களில் அஷ்டபந்தனம் சாத்தியாவது குடமுழுக்குச் செய்விக்க வேண்டும். ஆலயங் களில் திருவுருவங்கள் அஷ்டபந்தனம் இல்லாமல் இருத்தல் கூடாது.

பழுதடைந்த மின்சார சாதனங்களைப் புதுப்பிக்காவிட்டால் மின்விசிறிகள் ஓடாது. மின் விளக்குகள் எரியாது. மின் அடுப்புகளில் சமைக்க முடியாது. அதுபோல் அஷ்டபந்தனம் இல்லாத ஆலயங்களில் மூர்த்தங்களில் தெய் வீக சக்தி தேங்கி நிற்காது.

கொம்பரக்கு, கருங்குங்கிலியம், சுக்கான், காவிக்கல், வெண்மெழுகு, வெண் ணெய், செம்பஞ்சு, இலிங்கம் ஆகிய எட்டுப் பொருள்களால் விதிப்படி தயாரிக்கப்படுவது அஷ்டபந்தனம். திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு இந்த அஷ்டபந்தனத்தைப் பக்தியுடனும், ஆகம நெறியின் வண்ணமும் சாத்தினால் இறை வனின் அளப்பரிய சித்சக்தி மூர்த்திகளில் தொடர்ந்து நிலை பெற்றிருக்கும்.

மஹா கும்பாபிஷேகத்தில் அஷ்டபந்தனம் சாத்துவது மிக முக்கியமான ஒரு பணி.

இறைவனின் எல்லையற்ற சித்சக்தி ஆலயங்களில் பிரமரந்திரம் எனப்படும் விமான உச்சித்துணை வழியாக விமானக் கலசம் வரையில் ஊடுருவி நிற்கிறது. ரி.வி நிலையங்களிலும், வானொலி நிறுவனங்களிலும் ஒலி அலைகளை வாங்கிப் பல இடங்களுக்குப் பரவச் செய்யக் கருவிகள் அமைக்கப்படுகின்றன அல்லவா?

அதே தொழில்நுட்பம்தான் திருக்கோயில் களிலும் செயற்படுகிறது. ஆலயங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் முன்னைய தோற்றம்



ஆலயத்தின் புதிய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானக் கலசங்கள் செம்பினால் அமைக்கப் படுவதற்கு இதுவே காரணம். செம்பு வழியாகச் சக்தி எளிதில் பரவும். மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்பாக ஆலயங்களைப் பழுது பார்த்து புதிய பகுதிகள் அமைப்பார்கள்; அல்லது ஏற்கனவே உள்ள பகுதிகளைப் புதுப்பிப்பார்கள்.

திருக்கோயில் கர்ப்பக் கிருஹத்தைத் தூய்மை செய்வதற்கு முன்பாக கோயிலுக்கு வெளியே ஒரு யாகசாலை அமைத்து அங்கு சில தினங்கள் இறைவனைக் குடங்களில் எழுந்தருளச் செய்வார்கள். இறைவன் தற்காலிகமாக எழுந்தருளும் இடம் யாகசாலை. "பிம்ப வடிவில் உள்ள பெருமானைக் கும்பத்தில் (குடத்தில்) உள்ள புனிதமான நீரில் ஆவாஹனம் செய்விப்பது" என்று இதனைக் குறிப்பிடலாம்.

கும்பாபிஷேக காலத்தில் யாகசாலை பூஜைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. யாகசாலையில் ஆலமரம், அரசமரம் முதலியவற்றின் சமித்துகளாலும், பசு நெய்யினாலும் ஹோமங்களைச் செய்வார்கள். ஹோமகுண்டத்தில் உள்ள அக்கினியில் பொருள்களை இட்டால். அவை இறைவனிடம் சென்று அடையும்.

யாகசாலையில் சிறப்பு வழிபாடுகள், வேதபாராயணம், ஆகம பாராயணம், மங்கலவாத்திய இசை, சமய விரிவுரைகள் முதலியவையும் இடம்பெறும். இறுதியாக, யாகசாலைக் குடங்களில் உள்ள புனித நீரினால் கோபுர உச்சியின் விமானக் கலசங்களுக்கும் கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்யப்படும்.

கும்ப நீரினால் அமையும் அபிஷேகம் கும்பாபிஷேகம். வேத ஆகம நெறிமுறை தவறாமல் மஹா கும்பாபிஷேகங்களையும் சம்ப்ரோட்சணங்களையும் (புனித நீரைத் தெளித்தல்) செய்பவர்களுக்கும், செய்விப் பவர்களுக்கும் பகவானின் பரிபூரணமான அருள் கிடைக்கும்.

**மங்கை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக முகூர்த்தங்களின் முக்கிய வகிபாகம்

ஜோதிட சாஸ்திரத்திலே முகூர்த்த நிர்ணயம் என்பது மிகமிக முக்கியமான விடயமாகும். ஒரு குழந்தை பிறந்தது முதல் பெயர் சூட்டலில் இருந்து திருமணம் வரை ஒவ்வொரு விடயங்களுக்கும் நாம் முகூர்த்த நேரம் கணித்தே செயற்படுவோம். அதே போலவே ஒரு கிராமத்தை ஊரைக் காத்து நிற்கின்ற கற்பகத்தரு ஆலயங்கள் இதனாலேயே 'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என்கின்ற முதுமொழி ஆன்றோரால் கூறப்பட்டது.

ஆகம நியமங்களுக்கு அமைய பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை அமைகின்ற மஹா கும்பாபிஷேகம் எனும் பெரும் குடமுழுக்கு செய்கின்ற போது அதனை செய்யும் நாள் மிக மிக சிறப்பானதாக அமைய வேண்டும். தேவசான்னித்தியம், நல்ல மழை, பயிர்ச் செழிப்பு, வியாபார பெருக்கம், குடும்ப மகிழ்வு, கிராம முன்னேற்றம், ஆலயச் செழிப்பு, கன்னிப் பெண்கள் திருமணம், மாணவர் கல்வி, முன்னேற்றம் எனும் ஒன்பது விதமான சிறப்பும், ஒன்பது நவக்கிரகங்களும் சன்னித்தியமாகக் கொடுக்கின்ற மிகச் சிறப்பான பலன்கள் இந்த கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயச் சிறப்பிலேயே அமைகின்றன.

இதை ஜோதிட நூல்களும் தெளிவாக செப்பி நிற்கின்றன. எனவே, ஒரு ஆலயம் என்பது முழுமையாக ஊருக்கும் மக்களுக்கம், ஆலய பரிபாலனருக்கும், ஆலய குருவிற்கும் சிறப்பான அனுகூலமான பலன்களைக் கொடுக்கின்ற சுப நிலைகள், மஹாகும்பாபிஷேகம் நிர்ணயம் செய்யப்படுகின்ற நாளிலேயே இருக்கின்றது.

இதை ஆலய நிர்வாகிகளும், குருமார்களும் மிக மிக கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும். முன்னைய காலங்களில் கும்பாபிஷேக சுபமுகூர்த்தங்களுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தற்காலங்களில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதன் தாக்கமும், பிரச்சினையும் அவ்வூரைச் சாருகின்றது. கும்பாபிஷேக முகூர்த்தத்திலே மூன்று முகூர்த்தங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

முதலாவது கர்ம ஆரம்பம் எனப்படும் கும்பாபிஷேகபூர்வாங்ககிரியை ஆரம்பிக்கின்ற நாள். இரண்டாவதாக யந்திர விம்ப ஸ்தானம் செய்யும் நாள் அதாவது யந்திரங்களும் தெய்வ திருவுருவங்களும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்படும். நாள், மூன்றாவதாக மஹா கும்பாபிஷேம் செய்யும் நாள் என இந்த மூன்று நாட்களும் மிகவும் முக்கியம் வாய்ந்த நாட்களாக இருக்க வேண்டும். இவற்றிலே அன்றைய வார, திதி, நட்சத்திர, யோக, காரணம் எனப்படுகின்ற பஞ்சாங்க ஐந்து நிலைகளும் சுப நிலைகளில் அமைய வேண்டும்.

முதலில் ஒரு கும்பாபிஷேகம் செய்வதற்குச் சிறந்த உத்தம முகூர்த்தமாக அமைகின்ற மாதம், நட்சத்திரம், திதி, வாரம், லக்னம் என்பவற்றை அறிந்து கொள்ள வேண்டும். உத்தம மாதங்களாக சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி, சிறப்புப் பொருந்திய மாதங்களாய்க் கூறப்படுகின்றன. அதேபோல் சிறப்பான நட்சத்திரங்களாக ரோகிணி, புனர்பூசம், ரேவதி, உத்தரம். அத்தம், உத்தரட்டாதி, மிருகசீரிடம், சுவாதி ஆகியவை உத்தம நட்சத்திரங்களாக அமைகின்றன.

அதேபோன்று துவிதியை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, இவை உத்தம திதிகளாக கூறப்படுகின்றன. சிறப்பு வாரங்களாக திங்கள், புதன், வெள்ளி, முதன்மை நிலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழன், ஞாயிறு வாரம் இரண்டாம் நிலையும் பெறுகின்றன. அதேபோன்று கும்பாபிஷேகம் அமைகின்ற முகூர்த்த லக்னம் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. உத்தமமான லக்னமாக ஸ்திரராசி லக்னமே கூறப்படுகின்றது. அவை இடபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய லக்னங்களே உத்தமமாகக் கூறப்பட்டு இருக்கின்றது. பெண் தெய்வங்களுக்கு மிதுனம், கன்னி, தனுசு, மீனம், போன்ற உபயராசி லக்னங்கள் நல்லவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதிலே அன்றைய முகூர்த்தக் கிரக நிலையிலே ஜென்ம லக்னத்திலே பாபக் கிரகங்கள் அமையக்கூடாது. 7 ஆம் பாவத்தில் சுபக் கிரகம் அமைவது மிகவும் நன்று. 8ஆம், 12ஆம் பாவங்களில் எந்தக் கிரகமும் இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும்.

குரு, சுக்கிரன், கிரகங்கள் அஸ்தமன நிலை பெறாது இருக்க வேண்டும். கும்பாபிஷேக நட்சத்திரம்,ஆலய அனுகூலமானதாக இருக்க வேண்டும். கும்பாபிஷேக முகூர்த்தத்திற்கு இரண்டாம் நிலை மத்திமமான நட்சத்திரங் களாக திருவோணம், சித்திரை, அஸ்வினி, மூலம், அவிட்டம், அனுசம் ஆகிய ஆறு நட்சத்திரங்களும் கூறப்பட்டு இருக்கின்றன. அதேபோன்று மத்திமமான வாரமாக வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை கூறப்படுகின்றன.

எனவே, இவற்றை முகூர்த்த நிர்ணயம் செய்யும் காலங்களில் மிகவும் கவனத்திலே எடுத்துச்செயற்பட வேண்டும். ஒரு மாதத்திலே இரண்டு அமாவாசை அல்லது பௌர்ணமி அமையும் காலங்களில் முகூர்த்தம் தவிர்க்கப் பட வேண்டும். முகூர்த்த நேரங்களில் அதிகாலை நேரங்கள் 6.30 முதலாக 8.00 மணிக்குள் அமையும் முகூர்த்தம் உத்தமம். நண்பகல் 12 மணிக்குப் பின்னர் கும்பாபிஷேக முகூர்த்தம் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும். கும்பாபிஷேகக் கிரியை நாட்கள் 5, 7, 9, 11 என அமைப்பதும் யாக பூஜைக் காலங்கள் 4, 6, 8,12 என அமைவதும் மிகவும் உத்தமம் இவைகள் தெய்வ சன்னித்தியம் பூரணத்துவமாகத் தருகின்ற கால நிர்ணயங்களாக அமைகின்றன.

இதிலே, திருவாதிரை நட்சத்திரம் கும்பாபி ஷேகம் செய்ய உகந்ததா? என்கின்ற ஒரு விவாதமும் உண்டு. நடைமுறையில் உள்ள ஆகம ஜோதிட நூல்கள் திருவாதிரை கும்பாபிஷேகத்திற்கு உகந்ததல்ல என்றே கூறுகின்றன. பூர்வாகாமிகம் கால விதிப்படலம் மட்டும் திருவாதிரை சிவனுக்குப் பிரதிஷ்டை செய்யலாம் எனக் கூறப்பட்டு இருக்கின்றது. ஆனால் நடைமுறையில் இந்தியா, இலங்கை நாடுகளில் கும்பாபிஷேகத்திற்குத் திருவாதிரை நட்சத்திரம் தவிர்க்கப்பட்டே வருகின்றது. அதேபோல் உத்தம நட்சத்திர வரிசையில் அமையும் சுவாதி நட்சத்திரமும் அனுபவ ரீதியாக கும்பாபிஷேகத்திற்குப் பெரும் சிறப்புடையது என்று சொல்லுகின்ற நிலையில் இல்லை.

இதற்குக் காரணம் இரு நட்சத்திரங்களின் அதிபதிக்கிரகம் ராகுவாக அமைந்திருப்பது. எனவே, ஒரு கும்பாபிஷேக முகூர்த்தம் நிர்ணயம் செய்கின்ற போது, மிகவும் ஆய்வு செய்து உத்தம முகூர்த்தமாக எடுக்கின்ற பொழுது அது அந்த ஆலயம் சார்ந்த ஊருக்கும், மக்களுக்கும் நிறைவான பூரணத்துவமான பலன்களைக் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மிக முக்கியமான நட்சத்திரமும், திதியும், வாரமு,ம், லக்னமும், ஹோரையும் சிறப்பாகக் கும்பாபிஷேக முகூர்த்தத்திலே அமைய வேண்டும்.

**ஜோதிடபூஷணம் சிவசக்தி ஸ்ரீ**
**துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்.**
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹா கும்பாபிஷேக கிரியா விளக்கம்

இவ்வுலகத்தில் சகல ஆன்மாக்களும் பிறந்து இறந்து உழல்வன. அவை பசுக்கள் எனப்படும். இவர்கள் இகபர பலன்களை அடைவதற்காக ஆலய வழிபாடு செல்லப்பட்டது. பதியாகிய சிவபெருமான்அருளிய வேத சிவாகமங்களின் பிரகாரம் சிற்ப சாஸ்திர இலக்கணங்களுக்கு அமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆலயத்தில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகம், குடமுழுக்கு, குட நன்நீராட்டு விழா என்பன ஒரே பொருட் சொற்களாகும். கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும். அவையாவன,

(i) ஆவர்த்தனம் (ii) அனாவர்த்தனம்
(iii) புனராவர்த்தனம் (iv) அந்தரிதம்
என்பனவாகும்.

ஆவர்த்தனம் என்பது புதிதாக ஒரு சிவ லிங்கத்தை பாலப்பிரதிஷ்டை செய்து புதிதாகக் கோயில் கட்டி பாலாய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து மூலஸ்தானத்தில் மூர்த்தியை ஸ்தாபித்து அபிஷேகஞ் செய்தலாகும்.

அனாவர்த்தனம் என்பது ஓர் ஆலயம் வெகு காலமாகப் பூசையில்லாமல் சீர்குலைந்து அழிந்து போயிருக்க அதனை முன் போல் திருத்தி கும்பாபிஷேகம் செய்தலாகும்.

புனராவர்த்தனம் என்பது ஆலயக் கட்டி டங்களில் அல்லது அஷ்டபந்தனத்தில் பழுதுகள் ஏற்பட்டவிடத்து சுவாமியை பாலாயத்தில் வைத்துப் பூஜித்து திருத்த வேலைகள் செய்து பின்னர் கும்பாபிஷேகம் செய்தலாகும்.

அந்தரீதம் என்பது ஆலயத்தில் சேரன், சண்டாளன் முதலியோர் உட்சென்று தீண்டி யதன் காரணமாக ஏற்பட்ட பழுதுகளைத் திருத்தி உடனே அபிஷேகம் செய்தலாகும். இத்தன்மையான அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள் பார்க்க வேண்டியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியைகளில் முதலில் செய்யப்படும் கிரியைக்கு அனுக்ஞை என்று பெயர். கடவுளை பிரதிஷ்டை செய்வதற்காக அவருடைய பூரண திருவருளையும், உத்தரவையும் பெறுவதே அனுக்ஞையாகும்.

அனுக்ஞை செய்வதற்காக வேண்டிய திரவியங்களை சேகரித்து முதலில் விக்கி னேஸ்வரபூஜை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம் செய்கின்றோம். நாம் தொடங்கியுள்ள கும் பாபிஷேகக் கருமம் எவ்வித இடையூறுகளும் இன்றி இனிது நிறைவேறுதற் பொருட்டு முதலில் விக்கினேஸ்வரப் பூஜையும், நமது உடம்பிலுள்ள அந்தக்கரணங்களை சுத்தி செய்தற் பொருட்டு பசுவிலிருந்து எடுக்கப் பட்ட பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய ஐந்து வஸ்துக்களையும் ஒன்று சேர்த்துப் பூசித்தலாகும். பஞ்ச கவ்விய பூசையும், ஸ்தல சுத்தியின் பொருட்டும் கங்கை யைப் பூசித்தலாகிய வருண பூஜை எனப்படும் புண்ணியாகமும் முதலில் நடைபெறும் கிரியைகளாகும்.

### பிராம்மண அனுக்ஞை

முதற்கண் பிராம்மண அனுக்ஞை சொல்லப்படுகிறது. வேத,சிவாகமங்களிலும் புராண இதிகாசங்களிலும் பிராம் மணோத் தமர்கள் நடமாடுந் தெய்வம் எனச் சொல் லப்படுகிறது. முப்பொழுதும் இறைவ னுடைய திருமேனி தீண்டும் பெறற்கரிய பேற்றைப் பெற்ற தன்மையினாலும், ஆன்மார்த்தம் , பரார்த்தம் ஆகிய இருவகைக் கிரியைகளையும் நன்கு கற்றுத் தொழில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்கின்ற தன்மையினாலும், தெய்வத் தன்மை பொருந்திய அவர்கட்கு தட்சணை முதலிய உபசாரங்கள் செய்து அவர்களிடத்திலுள்ள தெய்வீக உத்தரவைப் பெறுதல் பிராம்மண அனுக்ஞை என்று சொல்லப்படும்.

### தேவ அனுக்ஞை

சிவாச்சாரியாரானவர் ஏனைய பிராம ணோத்தமர்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க வீதிப்பிரதட்சினம் செய்து தேவாதி தேவர் எழுந்தருளி இருக்கும் மூலால யத்தையடைந்து விசேட பூஜை செய்து, அனுக் ஞையில் பூசிக்கப்பட்ட திரவியங்களை கரத்தில் தாங்கி " எடுத்துக் கொண்ட குறிக்கோளாகிய மஹா கும்பாபிஷேகம் இடை யூறுகளின்றி இனிது நடாத்தியருள வேண்டும்" என்ற கருத்துக்களடங்கிய சுலோகத்தை உச்சரித்து அம்மூர்த்தியிடத்தில் உத்தரவு பெறுதலாகும்.

### தன பூசையும் திரவிய சுத்தியும்

கும்பாபிஷேகத்திற்கென தரும நெறி யினாலேயே தேடப்பெற்ற பணத்தை சிவாச்சாரியாரிடம் கொடுக்க வேண்டும். அவர் அவற்றிற்கு முறைப்படி அபிஷேகம், பூஜை செய்து பின் தர்மகர்த்தாவை அழைத்து சந்நிதானத்தில் இருக்கச் செய்து கிடைத்தற்குரிய இந்த மானிட ஜென்மத்தில் செய்தற்கரிய தருமங்களில் சிவதர்மம் யாவ ராலும் செய்வதற்கரியது. இந்தத் தர்மமானது பூர்வஜன்ம புண்ணியவசத்தால் நீங்கள் செய்ய முன் வந்திருக்கிறீர்கள். ஆகவே உங்களால் கொடுக்கப்பட்ட தனத்தை 11 பங்காகப் பிரித்து,

| | |
|---|---|
| யாகத்துக்காக | 3 பாகமும் |
| அபிஷேகத்துக்காக | 1 பாகமும் |
| குருவுக்காக | 1 பாகமும் |
| உதவிக்குருமபருக்காக | 1 பாகமும் |
| பிராமண போசனத்துக்காக | 1 பாகமும் |
| ஜபம், தானம் இவற்றிற்கு | 1 பாகமும் |
| மண்டலாபிஷேகத்திற்கு | 1 பாகமும் |

ஆகச் செலவுசெய்து சிறப்பாக நடாத்து வீர்களாக; என்று போதித்து முகூர்த்தப் பத்திரிகையையும், தர்மகர்த்தா கையில் கொடுத்தல் வேண்டும். இதுவே தன பூசை எனப்படுவதாகும்.

நெல் முதலாகிய தானியங்கள், சரக்கு வகைகள், இரத்தின வகைகள், வஸ்திரங்கள் சமித்து வகைகள் முதலான எல்லாவற்றையும் புண்ணியாக ஜலத்தினால் சுத்தி செய்து பூசித்து அவ்வத் திரவியங்களை பின்னால் எடுத்து உதவுதல் வேண்டும். இதுவே திரவிய சுத்தி எனப்படும்.

### கிராம சாந்தி

ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்தில் சகல ஜீவராசிகளும், சகல சனங்களும் சுகமாகச் சீவித்தற் பொருட்டு அசுரன், ராட்சதன், பிரம்மராட்சசன், பைசாசன் முதலிய தேவதை களினால் கேடுவராமல் காவல் தெய்வமான வைரவப் பெருமானைக் குறித்து பூஜை, ஓமம், பலி என்பனவற்றைச் செய்தலே கிராம சாந்தி எனப்படும். ஆலயத்திற்கு மேற்கே யாக மண்டலம், கும்பம், பரிவார கும்பம், யாகேஸ்வரன், யாகேஸ்வரி, சதுர்த்துவார கும்பம் இவற்றை வைத்து பூசை, ஓமம் செய்து நீற்றுப்பூசணிக்காய், அன்ன உருண்டை முதலிய பலிகளை இட்டு " இந்தக் கிராமத்திலே உள்ள சகல சீவராசிகளையும் நன்றாகப் பாதுகாத்து சுகமாக வாழ வைக்க வேண்டும். இந்த ஆலயம் எக்காலத்தும் நித்திய நைமித்தியங்களுடன் சிறப்பாக நடைபெற வேண்டும்" என்று விண்ணப்பம் செய்து பிரார்த்தித்தலாகும்.

### பிரவேச பலி

ஆலயத்தில் எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சகர், பிசாசர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம ராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலியன தேவதைகளை கிழக்கு முதலான எட்டுத்திக்குகளிலும், மேடையமைத்து, அவ்வவ்விடங்களுக்குச் சொல்லப்பட்ட மண்டலங்களில் அந்தந்தத் தேவதைகளைப் பூசித்து, தென்னம்பூ, கமுகம்பூ, பூசணிக் காய்த்துண்டு, அன்ன உருண்டை, வடை, இளநீர், வெற்றிலை, பாக்கு, நெற்பொரி இவைகளை நிவேதித்து பஞ்ச தைலங்களிலான பந்தத்தையும் குத்தி, மகாதேவனாகிய ஈஸ்வரனுடைய ஆஞ்ஞையினாலே அவ்வத் தேவைகளை முறையே கடல், மலையின் உச்சி, நீர், நிலை, காடுகள், வனாந்தரம், மயானம் முதலிய இடங்களில் சென்று வசிக்கும் வண்ணம் துரத்துதலேயாம் இது குறிப்பிட்ட ஆலயத்தில் துஷ்ட தேவதைகளினால் இடையூறுகள் ஏற்படா வண்ணம் செய்யும் கிரியையாகும்.

### ரசேஷாக்ன சேஷாமம்

ரசேஷக்னம் என்ற துஷ்ட தேவதைக்கு காஞ்சூரம் சமித்து, கடுகு. தவிடு, மிளகு இவைகளினாலும், நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் என்னும் பஞ்ச தைலங்களாலும் ஓமம் செய்து, அத்தேவதையை விலக்குதல் பொருட்டு செய்வது இந்த ரசேஷாக்ன தேவையானது பூத, பிரேத, பிசாச, பிரம்ம ராட்சத என்னும் அட்ட தேவதைகளின் உபாதைகளை நீக்கும் பொருட்டு பூசிக்கப்படுந் தேவதை, சிவன், சக்தி இவர்களைப் பூசித்து அவர்கள் ஆஞ்ஞையினால் துட்ட தேவதைகளை அவ்விடத்தில் நின்றும் விலக்கும் கிரியையாகம்.

### வாஸ்து சாந்தி

நிலத்தில் உள்ள குற்றங்களை நீக்கி சுத்தஞ்செய்தும் பொருட்டுச் செய்யப்படும் சாந்தியே வாஸ்து சாந்தி எனப்படும்.

அந்தகாசுர யுத்தத்தில் பரம்பொருளின் கோபத்தில் தோன்றியது ஒரு பூதம், அது அந்த காசுரனுடைய இரத்தத்தைக் குடித்தது. பின்பு சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்று உலகை அடக்கியாளத் தொடங்கியது. அதன் கொடுமையைத் தாங்காது சிவபெருமானிடம் முறையிட்ட அவர் அதிபலர் என்னும் உருத்திரனைத் தோற்றி பூதத்தை அடக்கும்படி பணித்தார். அவர் அப்பூதத்தைப் பாசத்தால் கட்டுப்படுத்தி அதன் பூதவுடலில் பிரம்மா முதலிய தேவரை வசிக்கச் செய்தார். அந்த உடலுக்கு வாஸ்து என்று பெயர். வாஸ்து புருடனை எரித்து சுத்தப்படுத்துவதே வாஸ்து சாந்தியாகும். சுத்தஞ்செய்யும் விஷயத்தில் மண், நீர், நெருப்பு என்னும் மூன்றும் பயன்படும். அவற்றுள் நெருப்பு எரித்துச் சுத்தப்படுத்துதல் மேன்மையுடையது. அதுவே வாஸ்து சாந்தியில் கையாளப்படுகிறது.

மேலும் நிலத்துக்கு அதிபராக உள்ளவர் பிரம்மா. பூமிக்கு மழையைப் பெய்விப்பவன் இந்திரன். அதனால் வாஸ்து சாந்தியில் பிரம்மாவை முதன்மையாகவும், இந்திரன் முதலிய தேவர்களை அங்கமாகவும் பூசித்து வழிபாடு செய்யப்படுகிறது. இறுதியில் சர்வசம்பார புருஷனாகிய வாஸ்து புருஷனை வைக்கோலினாலும், தருப்பையினாலும் செய்து, பூசித்து, ஓமாக்கினியில் கொழுத்தி அந்த இடங்களிலுள்ள துர்நாற்றம் முதலியன நீங்குதற் பொருட்டு கொண்டு சென்று புண்ணியாக தீர்த்தம் தெளித்து சுத்தம் செய்தலாகும்.

இவ்வாஸ்து சாந்தி கும்பாபிஷேகத்தில் மட்டுமல்ல, மஹோற்சவ ஆரம்பத்திலும், பாலஸ்தாபன காலத்திலும், பிராயச்சித்தம் செய்யும் போதும் , கிரகப்பிரவேசத்தின் போதும் செய்யப்படும் சாந்தியாகும்.

### நவக்கிரக யாகம்

நவக்கிரக யாகம் என்பது நவக்கிர கங்களுக்காகச் செய்யப்படும் யாகமாகும். இந்த நவக்கிரகம் ஹோமம் சில அசுப கருமங்களின் பின்பும், சுப கருமங்கள் நிகழ்வதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பும் செய்யப்படுவதாகும். பிரதிஷ்டை, சம்புரோசஷணை, சௌளம், உபநயனம், விவாகம், கிரகப் பிரவேசம், ரோக சாந்தி, ஆயுஷ்ய ஹோமம் முதலிய வைபவங்களிலும் இந்த யாகம் இடம்பெறுகின்றது. குறித்த சுபகருமத்தின் போது நவக்கிரகங்களால் தோஷம் ஏற்படாதவாறு பிரீதி செய்வதே இதன் கருத்தாகும். நவக்கிரக மண்டலத்தில் கும்பம் வைத்து பூசித்து அக்கினி காரியத்தில் அவ்விக்கிரகங்களிற்குரிய சமித்து, தானிய வகை, அன்ன வகை முதலியவற்றை ஹோமஞ் செய்து, பூர்ணாகுதி முடித்து தானாதிகள் வழங்கி, பிராமண போசனம் செய்வித்தல் வேண்டும்.

### திசா ஹோமம்

நான்கு திக்குகளிலும் முறையே பாசுபதாஸ்திரம், அகோரராஸ்திரம், பித்தியங் காராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்து காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

### கோ பூஜை

நம் சமய நெறியிலே பசு தெய்வமாக வணங்கப்படுகின்றது. பசுவின் முகத்தில் பிரம்மாவும், முதுகில் விஷ்ணுவும், வயிற்றில் உருத்திரனும், மூலாதாரத்தில் மகாலட்சுமியும், கொம்மில் தேவர்களும், வால் நுனியில் ஸர்வ தீர்த்தங்களும், உரோமங்களின் அடியில் இருஷிகளும் வியாபித்து இருக்கின்றார்கள். நான்கு கால்களும் நான்கு வேதங்களாப் பூஜிக்கப்படுகின்றது. இவ்வாறு பூஜிக்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய பசுவை மூலாலயத்துக்கு அழைத்துச் செல்லுதல் "கோவாசம்" எனப்படும். கோவாசம் கிருகப்பிரவேசங்களிலும் நடைபெறுதல் குறிப்பிடத்தக்கது.

### மிருத் சங்கிரகணம்

மிருத்- மண், சங்கிரகணம்- எடுத்தல். அங்குரார்ப்பணக் கிரியையின் பொருட்டு சுத்தமான இடத்தில் மண் எடுத்தல் மிருத் சங்கிரகணம் எனப்படும்.

சுத்தமான இடங்களாவன: நதிதீரம் தடாகக்கரை, மலையடிவாரம், தருப் பையடி, வில்வ மரத்தடி, புஷ்ப மரத்தடி, புண்ணியஸ்தலம், பசுமாடு கட்டிய இடம், வயல், நந்தவனம் என்பனவாம். சிவாச்சாரியார் அஸ்திரதேவருடன் மங்கல வாத்திய சகிதம் சென்று சுத்தமான இடத்தில் பிரம்மாவுக்கும், பூமாதேவிக்கும் பூசை செய்து, மண்வெட்டிக்கு அபிஷேகம் செய்து பூசித்து தேவியையும் வாஸ்து பிரம்மாவையும் இந்திராதி தேவர்களையும் " நான் தேவ காரியத்தின் பொருட்டு இவ்விடத்தில் மண் எடுக்கப்போகிறேன். அனுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்து பூமி தேவியை பூசித்த இடத்திலிருந்து 3 முறை மண்வெட்டியினால் மண்ணை எடுத்து தாம்பாளத்தில் இட்டு பட்டுத்துணியினால் மூடிச் சம்ரட்சணை செய்து மண் எடுத்த இடத்தைச் சமன்படுத்தி நவதானியம் இட்டு ஸப்தவாரி கும்பத்தை அபிஷேகஞ் செய்தலாகும். இந்தக் கிரியையை மாலை வேளையில் செய்தல் உத்தமம்.

### அங்குரார்ப்பணம்

அங்குரம்- தானியங்கள். அர்ப்பணம்- இடுதல். எனவே முளையிடுதல் என்பது பொருள். பிரதான யாகத்தின் வாயு திக்கிலே கும்பம் வைத்து அதில் ஸஸ்தியாதிபதியாகிய சோமனையும், கார்த்திகை, ரோகிணி ஆகிய இரு சக்திகளையும் பூசித்து சுத்தி வைக்கப்பட்ட 12 பாலிகைகளிலும் மண் இட்டு நவதானியம் விதைத்து முளைக்க வைக்கலாம். பாலிகைகளில் உள்ள பயிர்கள் செழித்து வளர்ந்தால் எடுத்த கருமம் மிகவும் சிறப்பாக அனுகூலமாகும் என்று சொல்லப்படுகிறது.

### ரக்ஷா பந்தனம்

ரசஷ பந்தனம்என்றால் இரட்சித்தற் பொருட்டு கட்டப்படும் காப்பு என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய கருமம் இனிது நிறைவேற இடையில் இடையூறுகள் தடுக்கா வண்ணம் சிவாச்சாரியார்கள் காப்புக் கட்டு வதாகும். காப்பு சுவர்ணத்தினாலேனும், வெள்ளியினாலேனும், பட்டு நூலினாலேனும் , கட்டத்தகும். தொடங்கிய கருமம் முடியும் வரை ஆசௌசம் முதலிய இடையூறுகள் சிவாச்சாரியாரைச் சாராது.

### கடஸ்தானம்

குடத்தைச் சுத்தமாக்கி சப்த தாதுக்களும், ஜீவனும் உண்டாக்குவதற்காக கும்பத்தின் அடியில் ஆத்ம தத்துவத்யையும், பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும், கும்ப நுனியில் சிவ தத்துவத்தையும், உருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையும் மூவினை நூலில் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்ரி ஆகியோரையும் கும்பத்துக்குக் காட்டப்படும். தூபத்தில் அர்ச்சினி சக்தியையும், தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் மத்தியில் வருணனையும் நவரத்தினத்தில் நவசக்திகளையும், தங்கத்தாமரைப்பூவில் சதாசிவஇனையும், வாசனைத்திரவியங்களில் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு, மாவிலையை சடையாகவும், தேங்காயை சிரசாகவும், கூர்ச்சத்தை முடி யாகவும், வஸ்திரத்தை தோலாகவும் பூசிப்பதால் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது.

### கலாகர்ஷணம்

கலைகள், தத்துவங்கள், புவனங்கள், பதங்கள், மந்திரங்கள் ஆகிய சடத்துவ நியாசத்தைச் செய்து பாலாய பிம்பத்திலிருந்து கலைகள் கும்பத்துக்கு வரச் செய்தல். ஆகவே பிம்பத்திலிரக்கம் மந்திர சொரூபமான ஈசுவரனை கும்பத்தில் சாந்நித்தியமாக இருக்கும்படி ஆவாகித்தல் கலாகர்ஷணம் எனப்படும்.

### யாக மண்டப அமைப்பு

யாக மண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவாக உள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய தீத கலா சொரூபமாம். கிழக்குத் துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவிர்த்தி என்னும் கலாத்துவா வடிவாயுள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு அட்சரங்களைக் கொண்ட வர்ணாத் துவா வடிவாயுள்ளது. கும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவாக உள்ளன. ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவா வடிவாயுள்ளன. மண்டபம் இருநூற்றி இருபத்து நான்கு புவனாத்துவா வடிவாக உள்ளது.

யாகசாலை உள்ள நிலம் கூர்மாசனம். அதற்கு மேல் கட்டப்படும் வேதிகை அனந்தாசனம், வேதிகையின் மேல் கட்டப்படும் மகா வேதிகை சிங்காசனம். அதில் பரவப்படும் நெல் யோகாசனம். அதன் மேல் பரவப்பட்ட அரிசி பத்மாசனம் அதற்கு மேல் படிப்படியாகப் பரவும் பயறு, உழுந்து, கடலை முதலிய தானியங்கள் தாமரையில் உள்ள உறுப்புக்கள், எள்ளு விலாசனம் அதன் மேல் பரவப்படும் நெற்பொரி சக்தியாசனம்.

### யாக பூஜை

யாகத்தைச் சுற்றி வைக்கப்பட்ட கும்பங்கள் சாந்தி முதலிய கலைகள், லோக பாலகர்கள், சூரியன், வாஸ்துபிரம்மா, ஷேத்ரபாலர், சதாசிவம் முதலியன சப்தகுரு முதலியனவாம். ஈசானத்தில் ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரனும் யாகேஸ்வரியும் விளங்குகிறார்கள். இவர்களடைய பூஜை முடித்து நடு வேதிகையில் விநாயகப் பெருமானுக்கு பஞ்சமாவரண பூஜை நடைபெறும்.

யாகத்தில் 33, 25, 17, 9, 5, 1 ஆகிய குண்டங்கள் ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்தூபி ஸ்தாபனம்

கட்டப்பெற்ற மூலஸ்தான பண்டிகையின் மேலுள்ள பத்மத்தில் ஸ்தூல லிங்கமாகிய ஸ்தூபியை ஸ்தாபித்தல்.

### தீப ஸ்தானம்

இறைவன் சோதி வடிவினன். அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக முதன் முதல் மூலஸ்தானத்திலே தீபத்தை ஸ்தாபித்தலாம்.

### யந்திர ஸ்தாபனம்

இறைவனுடைய மூல பிரசாத மந்திரங்கள் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை மூல மூர்த்தியின் ஆசனத்தில் உரிய இடத்தில் ஸ்தாபித்தலாம்.

### பிம்ப ஸ்தாபனம்

திருவுருவங்களை முறைப்படி அவ்வஸ் தானங்களில் ஸ்தாபித்தலாம்.

### அஷ்டபந்தனம்

சுங்கான் கல்லு, குங்குலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் முதலிய எட்டு வகையான திரவியங்களை ஒன்று சேர்த்து இடித்து எடுக்கப்படுவதாம். இந்த அஷ்டபந்தன மருந்து ஆசனத்தையும் பிம்பத்தையும் பொருத்துவதற்குப் பயன்படுத்துவதாகும்.

### தைலாப்பியங்கம்

பக்தர்கள் எண்ணெய் சாத்துதல். அன்பர்கள் தங்களிடத்திலுள்ள ஆணவ மல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும், ஏற்படும் குற்றம் நீங்கிச் சுத்தி அடைவதற்பொருட்டு எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெயை இறைவனுடைய திருமேனி முழுவதும் குளிரும்படி சாத்துதலாம்.

### பிம்ப சுத்தி

பலராலும் பரிசிக்கப்பட்ட தோஷம் நீங்குவதற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும் உதகம், கந்தம், புஷ்பம், பத்திரம், காஷாயம், மிருகத், பீஜம், பல்லவம், இரத்தினம், உலோகம், தாது, அஸ்திரம், ஓஷதி, கவ்வியம், குசம், சிருங்கம் முதலிய 16 வகையான திரவியங் களையும் வலயங்களில் இட்டு நீரினால் நிரப்பி, பூசித்து அபிஷேகம் செய்தலாம்.

### பிம்பரசஷாபந்தனம்

கும்பாபிஷேகத்தின் நிமித்தம் சுவாமிக்கு காப்புக் கட்டுதலாம்.

### நியாஸாதிகள்

கலை முதல் மந்திரம் இறுதியாக உள்ள மந்திரங்களை உச்சரித்து இறைவனுடைய திருமேனி முழுவதையும் மந்திரஸ்வரூபமாக நியசித்தலாம்.

### ஸ்பர்சாகுதி

யாக கும்பத்துக்கும், மூர்த்திக்கும் தொடர்பை ஏற்படுத்தி யாகத்திலே பூஜிக்கப் பட்ட மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மந்திரம் ஆகியவற்றை ஓமஞ்செய்த முறைப்படி மூலமூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் ஸ்தாபித்தலாம். (பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், உருத்திர பாகம் ஆகிய மூன்றும் இவ்விடத்தில் ஒன்று சேர்க்கப்படுகிறது.)

### மஹாபூர்ணாகுதி

தாம்பாளத்தில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், சந்தனம், குங்கமம், வஸ்திரம், சவர்ணம், சமித்து இவற்றை வைத்து யஜமானன் கையில் கொடுத்து ஒரே காலத்தில் எல்லாக் குண்டங்களுக்கும் ஆகுதி செய்து எல்லா அக்கினிகளையும் பிரதான குண்டத்தில் ஒடுக்கி பிரதான குண்டத்துக்கும், பூர்ணாகுதி முடித்து பலியிட்டு, கும்பத்தில் சம்யோஜனம் செய்தலாம்.

### தீபாராதனை

யாககும்பத்தில் ஆவாகனம் செய்யப் பட்ட விநாயகப் பெருமானக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடதீபங்கள் காண்பித்து அர்ச்சனை செய்து வேதஅத்தியயனம் திருமுறை பாராயணம் என்பன செய்தலாம்.

### மஹா கும்பாபிஷேகம்.

அர்ச்சகர் ஒருவரை நந்திதேவராகப் பூசித்து அவருக்கு உபசாரங்கள் செய்து அலங்கரித்து, அவரது சிரசின் மீது பிரதான கும்பத்தை வைத்து பக்தஜனங்கள் சூழ்ந்துவர புஷ்பாஞ்சலி, வேதம், தோத்திரம், சங்கு, மங்களவாத்தியம் முதலிய கோஷங்களுடன் வீதி வலம் வந்து, மூலாலயத்தை அடைந்து, கும்பத்துக்கும், பிம்பத்துக்கும் தொடர்பேற்படுத்தி, உரியமுகூர்த்தத்தில் மூலமந்திரம், பதமந்திரம், உச்சரித்து பக்தர்கள் 'ஹரஹர' என்ற கோஷமிட, வேதமந்திரம், தோத்திரம் ஓத, சகலவாத்தியங்களும் ஒலிக்க, கும்பதீர்த்தத்தை அபிஷேகம் செய்து, சகலஜீவராசிகளும் திருவருள் பெற்றுய்யப் பிரார்த்திப்பதே கும்பா பிஷேகமாம். அதன்மேல் மகாநைவேத்தியம் செய்து, அலங்கரித்து, ஆராதனை செய்து தேவர்களின் பூஜைக்காகக் கதவைச் சாத்தி வைக்கப்படுகிறது.

### தசதர்சனம்

கதவைத்திறந்து பசு, ஆசாரியர். வேத பாதகா, கண்ணாடி, பூரணகும்பம், தீபம், இரட்டைச்சாமரை, கன்னிகை, சந்நியாசி, சுமங்கலி, பக்தஜனங்கள் ஆகியவற்றைச் சகல வாத்தியங்களுடனும் தரிசிக்கச் செய்தலாம்.

### ஆசார்ய உற்சவம்

சிவாச்சார்யார்களை வீதிவலமாக அழைத்து வந்து மண்டபத்தில் இருக்கச் செய்து தஷிண தாம்பூலம் வழங்கி, அவர்களை வணங்கி ஆசி பெறுதலாம்.

### மகாபிஷேகம்

இது முதலாவது அபிஷேகம், முதற்பூஜை எனப்படும். ஸ்நபனகும்பம் வைத்துப் பூசித்து அக்கினி காரியம் முடித்து, மூர்த்திக்கு தைலம், மாக்காப்பு, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், வெந்நீர், தேன், கரும்பு, இளநீர், அன்னம், ஸகஸ்ரதாமரை, விபூதி, சந்தனம் முதலியவற்றால் குளிர்ச்சியடையும் படியாக அபிஷேகஞ் செய்து, நைவேத்தியம், தீபாராதனை முதலியவற்றுடன் பூஜை நிறைவேற்றுதலாம். மகாபிஷேகத்தின் பின்னரேபக்தர்களுடைய அர்ச்சனைமுதலியன ஏற்று வழிபாடு செய்ய உரியகாலமாகும்.

### மண்டலாபிஷேகம்

மகாபிஷேகத்தைத் தொடர்ந்து திரிபசஷகம் அதாவது ஒருமண்டலம் (45 நாட்கள்) வரை அபிஷேக ஆராதனைகள் உற்சவம் நடாத்தப்படும். இறுதித்தினமாகிய 45ஆம் நாள் மகா சங்காபிஷேகம் சிறப்பாக நடாத்தப்பட்டு, உற்சவம் முதலின நடைபெறும். இவ்வாறு ரு மண்டலம் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதாலும், அடியார்களுடைய வழிபாடுகளாலும் திருவருள் பெருகுகின்றது.

மண்டலாபிஷேகம் முடிந்தபின்னரே கும்பா பிஷேகம் நிறைவேறியது என்பது கருத்தாகும். அதன்பின்னரே ஏனைய நைமித்தியக் கிரியைகள் இடம்பெறலாகும்.

மேற்கூறிய பிரகாரம் வேதாகமங்களில் கூறியபடி கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்த இறைவன் திருவருளை சகல ஆன்மாக் களும் பெற்றுய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ. சி.சிதம்பரநாதர் குருக்கள்,**
மட்டுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகப் பதிவுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகம நெறியில் சிறந்து விளங்கும் கும்பாபிஷேகக் கிரியை

வேதங்களும் ஆகமங்களும் சைவசமயத்தின் முதநூல்களெனப் போற்றப்படுவன. சமய தத்துவ சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவில் முன்னோடியாக விளங்குபவை வேதங்கள், ஆகமங்கள், சமயம், தத்துவம், கலைஆகியமூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டு மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்களிப்பு அளப்பரியது. வேதநெறி தளைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் இவ்விரு முன்னூல்களும் உதவியுள்ளன. திருக்கோயிற் கிரியை மரபில் இவ்விரு நூல்களும் தரும் சமயக்கிரியை மரபுகள் சங்கமமாகின்றன. 'வேதமொடாகமம் மெய்யாமிறைவனூல்' என்ற திருமூலரின் கோட்பாட்டின்படி இவை சைவ பாரம்பரியத்திற்கு முதனூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாக உள்ளன.

சைவசமயத்திற்கு இவ்விரு நூல்களினது முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் சமயப்பெரியார்கள் வைதிக சைவம் என அழைப்பதும் இங்கு சிந்திக்கப்பாலது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை *(1978 பக்கம் 131-132)* குறிப்பிடும் கருத்து இங்கு பொருத்தமாகும்.

"நமது சமயம் வைதிக சமயம் வைதிகம் வேத சம்பந்தம், சைவம், சிவ சம்பந்தம்... வைதிகம் அறிவு, நெறி, அறிவுநெறி எனவும் படும். சைவம் சிவாநெறி அருள்நெறி எனவும் படும். அறிவு நெறியாகிய வைதிகம் சைவத்திற்குச் சென்று முற்ற வேண்டும். அங்ஙனம் சென்று முற்றாத வழி அவை திகமாம். சைவம் வேத நெறியாகிய வைதிகத்தின் வழி வருவது. அங்ஙனம் வாராதேல் அது அசைவமாகும். வைதிகம் உடல்; சைவம் உயிர். உயிரைப் பிரிந்தவழி உடல் என்னாகும். உடம்பாலான பயனைப் பெறாது உயிர் பிரிந்த வழி 'அவ்வுயிர் என்னாகும்"

இக்கூற்றிலிருந்து வைதிக நெறியின் மூல மாகிய வேதங்களினதும் சைவநெறியின் மூலமாகிய சிவாகமங்களினதும் முக்கியத்துவம் உணரப்பாலது.

இன்று நடைமுறையிலுள்ள திருக்கோயிற் கிரியைகளில் வேதமரபு, சைவமரபு சார்ந்தசில கிரியைகள் இடம்பெறுவதை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வேதங்கள் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கை சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதலாகும். இவ்வழிபாட்டுக்கு உரிய அடிப்படை ஆகமம் ஆகும். யாகத்திலே உதய தெய்வங்களைக்கூவி அழைத்து அத்தெய்வங்களுக்குரிய அவிர்ப்பாகங்களை அக்கினி மூலம் வழங்குவதே இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். அக்கினி தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக்கும் நிலையில் சிறப்புற்றான். எனவே இத்தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேத காலத்தில் சிறப்படைந்தது. அக்கினியைத் தெய்வமாக வழிபடப் பாடும் பாடலில் இடம்பெறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

தீ வேள்வியில் முன்னிற்பவன்; அதன் பருவங்களை வகுக்கும் தேவன்; அங்கு வானவரை அழைப்பவன்; அவனை வேண்டுகின்றேன். தீயே நெறியிலோங்கும் வேள்வியதனை தீ எப்புறத்தும் சூழ்ந்து காக்கிறாய். அஃதே வானவரிடம் சேரும் தீ. வானவரை அழைப்போன், புலமையுள்ள செய்கைத் திறமைவோன். (இருக்கு வேதம் 1. 1-1-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்பு அக்கினி வழிபடப்படும் தெய்வத்தை அழைப்பவனாகச் சித்தரிக்கின்றது. அக்கினி தேவர்களில் முதற்பட்டவனாகவும் முன்னோனாகவும் விளங்குபவன். அனைத்துச் செய்கைத் திறமை, உயிர், வலிமை, பொலிவு, ஒளி, மாட்சி ஆகிய அனைத்தும் அக்கினி தேவனுடைய விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூ வகைநிலங்களில்தெய்வங்கள்வகுக்கப்பட்டன. விண்ணைச் சார்ந்தவையெனவும், மண்ணைச் சார்ந்தவையெனவும், இடைவெளியைச் சார்ந்தவையெனவும் வகுத்து வழிபடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. பஞ்சபூதங்கள் தெய்வங்களாக வழிபடப்பட்டன. விண்ணில் அதிதெய்வமான தீயென சூரியன் போன்றவையும் மண்ணுடன் தொடர்புடைய அக்கினி, சோமன், பிருதுவி போன்றவையும் ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்களில் வாயு, பர்ஜன்யன், நீர்த்தெய்வமாகிய அப்பு ஆகியவையும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், வருணன் பிருகஸ்பதி போன்ற தெய்வங்களிலும் மேற்குறித்த தெய்வீகப் பண்புகள் ஏற்றிக் கூறப்பட்டன. இவை யாவற்றுக்கும் மேலாகப் பரம்பொருளே ஒளிவடிவில் போற்றப்பட்ட சிறப்பும் வேதத்தில் காணப்படுகின்றது. அனைத்து வழியைக் காட்டவும் பேரொளி நிலைபேறு கொண்டுள்ள சிறப்பை இருக்குவேதம் கூறும். (இருக்கு வேதம் 6, 9-5) சாமவேதம் ஒளியே தெய்வம்; தெய்வமே ஒளி எனப் போற்றும்.

வழிபாட்டு மரபிலும் சுவறியுள்ளதை நாம் அவதானிக்கலாம். ஆகமம் வகுத்துக்கூறும் நைமித்தியக் கிரியைகளில் உயரிடம் பெறும் கும்பாபிஷேகக் கிரியையில் நாம் இச்சிறப்பம்சங்களை உணரலாம்.

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை நாம் உணரலாம். 'பிர' என்னும் பகுதிக்கு 'சிறப்பாக' என்றும் 'நன்கு புலனாகும்படி' என்னும் பொருள்படும். 'திஷ்ட' என்னும் பகுதிக்கு நிற்றல் என்ற பொருளும் உண்டு. எனவே பிரதிஷ்டை எனும்பொழுது 'ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக நிலை நிற்றல் என்றும் ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல்' என்றும் பொருள் படுகின்றது. இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங்கணும் பரந்து விளங்கும் பரம்பொருளைப் பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று திருக்கோயில் வெளிப்படுத்தும் கிரியையின் வழிகளையே ஆகமம் எமக்கு எடுத்துரைக்கின்றன. (கைலாசநாதக்குருக்கள் 1968)

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இறைவனின் திருவுருவத்துக்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக் கிரியை இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது. பரம்பொருளை நாம் படிப்படியாக உணரமுடிகின்றது. இறைவன் சிறு அளவில் புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாக கிரகிக்கப்படமுடியாது. ஆகாயத்தை விட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் கட்புலனாகாத தொன்றாகும். இதற்கு அடுத்த நிலை அக்கினியாகும். இது கட்புலனுக்கு உட்பட்டது. எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. அக்கினியைப் பேணிப்பாதுகாப்பதும் தொடர்ந்து வழிபடுவதும் எளிதான காரியம் அல்ல. இந்நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர். எனினும் கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று. இதுவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவதாகிய மண். இதனிடத்து இறைவன் தெய்வீக அம்சங்களை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் ஒருளவு எளிதில் கைகூடும் நிலையாகும். இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் பரந்து விரிந்து விளங்கும் தன்மையை தைத்தரிய உபநிடதம்.

**"ப்ரஹ்மண ஆகாச: ஸம்பூத**
**ஆகாசாத் வாயு:**
**வாயோரக்நி:**
**அக்நேராப:**
**அத்ப்ய: பிருத்வீ"**

எனக்கூறும் இம்மரபினை ஆகமங்கூறும் கிரியை மரபில் நாம் அவதானிக்கலாம். இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விரை, காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நிலையைக் குறிக்கின்றன.

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் கும்பத்தில் இருப்பது நீர் இவ்வாறு பஞ்சபூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிரிதியோடு தொடர்புடைய திருவுருவத்தில் வந்து நிறைவுறுகின்றது. திருவுருவம் கும்ப நீரால் அபிஷேகிக்கப்பட்டவுடன் இறைஅம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்டமூர்த்தி எனச் சிறப்பிக்கப்படுகின்றான். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து, இவை விளங்கவும், வாழவும் ஆற்றல் பெருக்கும சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நோக்கமாகும். கிழக்கு முதலாகிய எட்டுக் குண்டங்களிலும் இந்த அட்டமூர்த்திகளில் பூசித்தலும் சிறப்பம்சமாகும். அக்கினி வழிபாடு வைதிக நெறியில் சிறப்புப் பெறுவது போல இங்கும் இறைவனை வழிபடுவதற்குச் சிறப்புப் பெறுகின்றது. ஆகம நெறியில் இது உயர்நிலை வகிக்கின்றது. நவ குண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளில் பூசித்து அந்தந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள் விசேட ஓமங்கள், பூர்ணாகுதி முதலியன இடம்பெற்று யாகம் பூரண பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியையின் பின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம்பெற்று அடியவர்களின் பகுதிக்கு உரியவனாகிறான். தெய்வீகப் பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்குப் பல்வகை உபசாரங்களும், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம்பெறுவன. ஆகமங்கூறும் வழிபாட்டு மரபிற்கு யசுர்வேதமும் முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்தில் இடம்பெறும் சதருத்திரியம் இவ் வகையிற் குறிப்பிடத்தக்கதாகும். இம் மரபு ஆகம வழிபாட்டில் உயர் தனியிடத்தைப் பெறுவதோடு தென்னாட்டுத் திருக்கோயில் வழிபாட்டிலும் பெரிதும் கையாளப் படுகின்றது. இவ்வழிபாட்டு முறை தெய்வங்களை வசீகரித்துத் தன் உள்ளத்தில் வயமாக்கும் முறையைச் சார்ந்து நிற்பதாகும். வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் இப்புதியதொரு முறை யசுர் வேதத்தில்தான் முதன்முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. யசுர் வேதத்தில் சதுருத்திரியம் எனென்ற பகுதியில் உருத்திரரின் என்ற தெய்வம் நூறு பெயர்கள் கொண்டு வழிபடப்படுகின்றான். இப்பெயர்களில் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பெயர்கள், சில காரணப்பெயர்கள் சில தெய்வங்களின் பண்பைச் சுட்டுவன. இத்தகைய பெயர்கள்நூறாகவும் ஆயிரமாகவும் தொகுக்கப்பட்டுப் புராணங்களில் காணப்படுகின்றன. ஆகம மரபில் தென்னாட்டு ஆலயங்களில் நிகழும் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கொண்டு இறைவனைச் சிறப்பித்து வழிபடும் முறை அருச்சனைஎனப்படுவதாகும். அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம், லட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என இவை விரிவுபெறுகின்றன. இம்மரபிலும் வைதிக ஆகமக் கிரியை மரபுகளின் சங்கமத்தைக் காண்கிறோம். மந்திரங்களை உச்சாடனம் செய்து வழிபடும் முறைகள் இரு சமய மரபுகளிலும் சிறப்புற்று விளங்குகின்றன. தோத்திரங்களைக் கூறி வழிபடும் முறையும் பொதுவாகவுள்ளது. ஆகம வழிபாட்டு மரபில் இசையுடன் பாடல்களைப் பாடும் மரபுக்குச் சமவேதம் முன்னோடியாக விளங்கியிருக்கலாம்.

ஆகம மரபில் இறைவனுக்கு நிகழும் உபசாரங்களிலும் பஞ்ச பூத அம்சங்கள் விரவியுள்ளன. சந்தனம், கிழங்கு, பழம், புஷ்பம் இவைகளில் செய்யப்பெறுவன பார்த்திப உபசாரம் மண்ணின் தொடர்பைக் காட்டுவன. தீர்த்தம், பால், தயிர் போன்றவை நீரின் உம்சாரமாக அமைவன. நவரத்தினம், தீபம் போன்றவை ஆக்னேய உபசாரம் அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம், சாமரம், வாயு உபசாரங்களாகும். மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே இறைவனுக்குச் செய்யப்படும் அனைத்து உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாக விளங்குகின்றன. தென்னாட்டில் விளங்கும் பஞ்சபூதத் தலங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. திருவாரூர் பிருதிவித்தலமாகவும், திருவானைக்கா அப்புத்தலமாகவும், திருவண்ணாமலை தேயுத்தலமாகவும், காளத்தி வாயுத்தலமாகவும், சிதம்பரம் ஆகாயத்தலமாகவும் சிறப்பிக்கப் படுகின்றன.

கும்பாபிஷேகம் முறையாக நிறைவேறிய பின் அஷ்டபந்தனம் சாத்தி, தோடி, நிவாரணம், அகோர சமயை முதலான தன் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டும் அவசியம் செய்ய வேண்டப்படுவதே மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது. சிலர் 48 நாள் என்றும் கொள்வர். உத்தமமானது 45 நாட்களைக் கொண்ட மண்டலமாகும். 48, 45, 24, 15, 12, 10 என மண்டலாபிஷேகத்தை அரைவாசி கால்வாசி என்ற கணக்கிலும் செய்யலாமெனக் கூறப்பட்டுள்ளது. மண்டலாபிஷகம் சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

இவ்வாறு ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்றும் பிரதிஷ்டைக் கிரியையில் வேத நெறியும் ஆகம நெறியும் கூறும் சங்கமமாகின்ற உயர்நிலையை அவதானிக்க முடிகின்றது. இயற்கைச்சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அருச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில் இவற்றின் சிறப்பினை நாம் உணரலாம். எனவே ஆலயக் கிரியைகள் நீண்ட காலப்பாரம்பரியத்தின் நிகழ்காலச் சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாக உள்ளன. எமது சமயப் பாரம்பரியத்தில் உன்னத வழிமுறைகளாகவே ஆலயக்கிரியைகள் அமைந்து விளங்குகின்றன.

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்



''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்பது பழமொழி. அதனாற்தான் பல அரசர்களும் தனவந்தர்களும் ஆலயங் களை எழுப்பி மக்களை வழிபாடு செய்ய வழிவகுத்தனர். கால மாற்றங்களினால், அக்கோவில்கள் பழுதடைந்து அல்லது சிதிலமடைந்து போவதும் இயற்கையே. எனவே இக்கோவில்களின் இராஜகோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், கர்ப்பக்கிரகங்கள், பிரகாரங்கள், மதிற்சுவர்கள் போன்றவையைக் காலத்துக்குக் காலம் பழுது பார்த்துத் திருப்பணி வேலைகளைச் செய்த பின்னர் கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

கும்பாபிஷேகம் பொதுவாகப் பன்னி ரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாகுதல் செய்ய வேண்டும் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன. இக்கும்பாபிஷேகத்தைப் பின்வரும் வகைகளில் பிரித்துக் கூறப் பட்டுள்ளது.

1. ஆவர்த்தம்
2. அனாவர்த்தம்
3. புனராவர்த்தம்
4. அந்தரிதம்

*** ஆவர்த்தம்**

கோவில் கட்டப் பொருத்தமுள்ள ஒரு காணியில், புதிதாக ஒரு ஆலயத்தை அமைத்து, அதில் சிவலிங்கத்தையும், பரிவார மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் செய்யப்படுவதை ஆவர்த்தம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

*** அனாவர்த்தம்**

நீண்ட காலமாகச் சரிவரப் பூசைகளைச் செய்யாதும், இயற்கை அனர்த்தங்களான பூகம்பம், மண்சரிவு போன்றவற்றினாலும், தீயினால் சேதமானவை போன்ற விடயங்களால் பாதிப்புற்ற பழைய கோவில்களைப் புதிதாக மீண்டும் நிர்மாணம் செய்து, அதே மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்வதை 'அனாவர்த்தம்' என்று அழைக்கப்படுகிறது.

*** புனராவர்த்தம்**

வழிபாடு இயற்றிவரும் ஆலயங்களில் காலம்போகப் போக இராஜகோபுரங்கள், மதிற்சுவர்கள், கூரைகள் போன்றவற்றைப் புதுப்பித்து அஷ்டபந்தன மருந்தும் சாத்தி, அந்த மூர்த்திகளை அதே இடங்களில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதையே 'புனராவர்த்தம்' என்று சொல்லப்படுகின்றது.

*** அந்தரிதம்**

கோவில் உட்பிரகாரத்துள் யாராவது மரணித்துவிட்டாலும், தவிர்க்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள் (நாய், பன்றி போன்றவை) உள்ளே நுழைய நேர்ந்தாலும் செய்யப்படும் பிராயச்சித்தத்தை 'அந்தரிதம்' என்று கூறுவர். இதனைச் 'சம்புரோஷணம்' என்றும் ஆகமங்கள் இயம்புகின்றன.

*** கும்பாபிஷேகக் கிரியைகள்**

மூல மூர்த்தியிடமிருந்து இறைவனது ஆற்றல்களைக் கும்பங்களில் ஆவாகனம் செய்து பின்னர் யாகசாலையில் செய்யும் பூஜைகள், ஹோமங்களின் ஆற்றலால் கும்பத்தில் சேமித்து இறுதியில் கும்பாபிஷேகத்தால் மீண்டும் மூலமூர்த்தியிடம் இறைவனது ஆற்றலை ஒப்பிப்பது "மகா கும்பாபிஷேகம்" எனப்படும். கும்பாபிஷேகக் கிரியைகள் அறுபத்து நான்கு என்று சில வேத விற்பன்னர்கள் கூறுகிறார்கள். ஒரு சிலர் ஐம்பத்தாறு என்றும் கூறுவர். எதுவாயினும், மிக முக்கியமான சில கிரியைகள் பின்வருமாறு -

**1) விக்னேஸ்வரர் பூஜை**

கும்பாபிஷேகக் கிரியைகள் ஒரு தடங்கலுமின்றி நடைபெறுவதற்கு விநாயகர் வழிபாடு செய்யப்படுவதையே இது குறிக்கும்.

**2) அனுக்ஞை**

கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார் அதனை நடாத்தும் தகுதியைப் பெற்றவராக இருத்தல் அவசியம். விதிப்படி சிவதீட்சை பெற்றவராக இருக்க வேண்டும். அனைவரினதும் அங்கீகாரத்துடன் இறைவன், இறைவியிடம் அனுமதிபெற்றுப் பின் அச்சிவாச்சாரியாரை நியமனம் செய்யும் கிரியையே 'அனுக்ஞை' ஆகும்.

**3) வாஸ்து சாந்தி**

வாஸ்து புருஷன் என்ற அசுரன் இறைவனிடம் சாகாவரம் பெற்றவன் என்றும், எங்கே யாகம் நடைபெற்றாலும், அதைத் தடுப்பதே அவ்வசுரனின் வேலை என்று ஒரு ஐதீகம். கும்பாபிஷேகம் நடைபெறும் யாக சாலையில், இவனின் இடையூறு இல்லாமல் இருக்க, பிரம்மா போன்ற 53 தேவர்களையும் பூஜை முதலியவற்றால் திருப்தி செய்யும் சடங்குகளையே 'வாஸ்து சாந்தி' என்பர்.

**4) மிருத் சங்கிரஹணம்**

கும்பாபிஷேகத்திலே அங்குரார்ப்பணம் என்ற கிரியையும் இடம்பெறுகின்றது. இதற்கென பூமியை வெட்டி மண் எடுப்பார்கள். அவ்வேளை பூமியின் அதிபதியான இந்திரனையும், காவல் தெய்வங்களான அட்டதிக்குப் பாலகர்களையும், பிரம்ம தேவரையும் பிரார்த்தித்த பின்னரே மண்ணை வெட்டி எடுப்பர். ஆதலால் 'மண் எடுத்தல்' என்றும் இக்கிரியையைக் கூறுவதுண்டு.

**5) காப்புக் கட்டுதல்**

அனுக்ஞை மூலம் இறைவன், இறைவியிடம் அனுமதி பெற்றுக் கிரியைகள் நடத்தும் ஆசாரியாருக்கு எதிர்பாராத இடையூறுகள் கும்பாபிஷேகக் காலங்களில் ஏற்படாமல் இருக்கும்பொருட்டு அவரது கையில் மந்திரித்து நூல் கட்டுதலைக் காப்புக் கட்டுதல் என்கிறோம். இதன் மூலம் கிரியைகள் நடாத்தும் பிரதம குருக்கள், இவை பூர்த்தியாகும் வரையில் தோஷங்கள், தீட்டுகள் அணுகாமல் காக்கப்படுகிறார்.

**6) கும்ப ஸ்தானம்**

கும்பாபிஷேகம் ஆகும் வரையில் இறைவனைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து அதை வழிபடுவது 'கும்பஸ்தானம்'. கும்பத்தை எவ்வாறு உடலாகப் பாவித்து வழிபடல் வேண்டும் என்பதை யோகஜம் என்கின்ற சிவாகமம் விரிவாகக் கூறுகின்றது.

கும்பம் மாமிச உடலாகவும், அதனுள் உள்ள தண்ணீர் இரத்தமாகவும், அவற்றுள் இடப்பட்ட இரத்தினங்கள் சுக்லமாகவும் கருதப்படுகின்றன. கும்பத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்பைக் கட்டு நாடியையும் குடத்தின் மேல் சுற்றப்பட்டுள்ள முப்புரிநூல் நரம்புகள் எனவும், வஸ்திரத்தைத் தோலாகவும் குடத்தின் மேலுள்ள தேங்காயை முகமாகவும், தேங்காயின் மேல் வரித்துள்ள லம்ப கூர்ச்சம் சிகை எனவும் மாவிலைகளைச் சிவபெருமானின் ஜடாபாரங்கள் என்றும் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் பிராணனாகவும் கருதப்படுவதாகச் சிவாகமங்கள் கூறுகின்றன.

### 7) கலாகர்ஷணம்

எந்த மூர்த்தியை எவ்ரூபத்தில் ஆவாகனம் செய்கிறோமோ அம்மூர்த்தியை அக் கும்பத்தில் வழிபடுவதாக எண்ணல் வேண்டும். அவ்வாறு ஆவாகனம் செய்வதற்குக் கும்பத்தில் ஆகர்ஷணம் செய்து குறிப்பிட்ட காலம் வரையில் கும்பத்திலேயே இருக்கச் செய்வதற்குத்தான் 'கலாகர்ஷணம்' என்று பெயர்.

### 8) யாக பூஜை

முறைப்படி இறைவனை ஆவாகனம் செய்து, யாகசாலையில் வைத்து ஒன்பது, ஐந்து, ஒன்று என்ற யாககுண்ட முறைப்படி ஒவ்வொரு காலம் பூஜை செய்வது யாக பூஜையாகும்.

கும்பாபிஷேகத்திற்கு இவ் யாகசாலை மிகவும் முக்கியம். இவ்யாகசாலை மந்திரங்களாலும், தேவர்களாலும் புனிதமாக்கப்பட்ட இடமும் ஆகும். அத்துடன் சூரியனும், சிவபெருமானும் சகள நிஸ்கள மூர்த்திகளாகவும் விளங்குகின்றனர். மேலும் துவாரபாலகர்கள், மகா காளன், நந்தி ஆகிய திக்அதிபர்களுடன் இலட்சுமி, விநாயகர், சப்தகரு முதலியவர்களும் நிறைந்துள்ள இவ்யாகசாலையின் நடுவில் வேதிகை குண்டம் அமைக்கப்படுகின்றது.

யாகசாலை ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது என்ற எண்ணிக்கையில் யாக குண்ட விதானம் அமைக்கப்படும். அதனைச் சுற்றிப் பதினாறு, இருபத்துநான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களையும் அமைப்பர். அதில் தீயை (அக்கினி) வளர்த்து, இறைவனுக்குச் செலுத்தப்படும் சிறந்த பொருட்களை அக்கினியில் இடுவார்கள். பாகனிடம் யானை கட்டுப்படுத்துவதுபோல் "ஹவிஸ்" என்னும் இக்கிரியையால் இங்கு இறைவன் ஆசாரியார் இடத்தில் அன்பால் கட்டப்படுகிறார்.

இவ்வாறு முக்கிய இடம் வகிக்கும் யாகசாலையில் அஸ்டமூர்த்தி வழிபாடு, சூரிய சந்திர வழிபாடும் நடைபெறுகிறது. நிலத்தத்துவம், ஜலத் தத்துவம், அக்னி தத்துவம், வாயு தத்துவம், ஆகாச தத்துவம் போன்றவற்றையும் உணர்த்துகிறது.

### 9) ஸ்பர் சாகுதி

இவ்வாறு முக்கியமான இடமாகிய யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங் களையும், அதனால் ஏற்பட்ட ஆற்றலையும், மூல பிம்பங்களிடத்தில் தர்ப்பைக் கயிறு அல்லது நூல் மூலமாகவும் சேர்ப்பிப்பது மின் ஆற்றலைச் செப்புக் கம்பிகள் மூலமாகச் செலுத்துவது போல அமைகிறது. இக்கிரியை தங்கக் கம்பி அல்லது வெள்ளிக் கம்பி மூலமும் செய்வதுண்டு. இதனையே 'ஸபர் சாகுதி' என்று அழைப்பர்.

### 10) அஸ்ட பந்தனம்

மூர்த்தியையும், இயந்திரத் தகட்டையும் பீடத்தையும் ஒன்று சேர்ப்பதே அஸ்டபந்தனம் என்று கூறுவர். எட்டுப் பொருட்கள் சேர்க்கப்படுவதினாலும், இப்பெயர் பெற்றது. அப்பொருட்களாவன, சுண்ணாம்புக்கல், கற்பொடி, குங்கிலியம், கொப்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, உலர்ந்த லிங்கம், வெண்ணெய் என்பனவையாகும். இக்கலவையைப் பதிப்பதே 'அஸ்ட பந்தனம்' என்று கூறப்படுகிறது.

மூர்த்தியும், பீடமும் இயந்திரத்துடன் ஒன்று சேர்ந்த பின் நன்றாக இறுகுவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லெண்ணெய் சாத்துதல் வேண்டும். இதைப் பக்தர்கள் எவரும் ஆசாரத்துடன் செய்யலாம். இதையே 'எண்ணெய்க் காப்பு'' என்றும், ''எண்ணெய் சாத்தல்'' என்றும் கூறுவதுண்டு. விக்கிரகங்களைத் தொட்டு எண்ணெய் சாத்தலாம்.

**11) குடமுழுக்கு**

யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்தக் குடம் வைத்துப் பூஜிக்கப்படுகிறதோ, அக்கும்ப நீரை அந்த மூர்த்திக்கு அபிஷேகம் செய்வது "குடமுழுக்கு" எனப்படும். அவ்வாறு செய்கையில் அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருளுகிறார். அதன் பின்னர், அந்த விக்கிரகத்திலிருந்து பல தெய்வீக சக்திகள் வெளிப்படுகின்றன.

**12) சிவலிங்கப் பிரதிஸ்டை**

கும்பாபிஷேகக் கிரியைகளில் சிவலிங்கப் பிரதிஸ்டையும் மிகவும் முக்கியமாகும்.

**13) மண்டலாபிஷேகம்**

மகா கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர் கோபூஜை, எசமான் அபிஷேகம், உற்சவ ஆசார்ய சம்பாவனை, எசமான் ஆசீர்வாதம், உபசாரம் போன்றவையும் நடைபெறும். அதன் பின்னர் தொடர்ச்சியாக 48 நாட்கள் கும்பாபிஷேகம் நடந்த கோவிலில் அபிஷேகம் செய்யப்படும். இதனையே ''மண்டலாபிஷேகம்'' என்று கூறுவர். இவ்வாறு நடைபெறுகையில் பிம்பமும், பீடமும் நன்கு அழுத்திப் பலம் பெறும் பொருட்டு நல்லெண்ணெய்யை தினமும் அபிஷேகம் செய்வார்கள். இக்கும்பாபிஷேகத்தில் ஏற்பட்டுள்ள சக்தியை மக்கள் இடைவிடாது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், ஒரு மண்டலம் தினமும் அபிஷேகம், சகஸ்ரநாமம், அர்ச்சனை ஆகியவை நடைபெறும். இறுதித் தினமான 48ஆம் நாள் பதினொரு கும்பங்கள் வைத்து மகா அபிஷேகம் செய்து பூர்த்தி செய்வர்.

இத்தகைய கும்பாபிஷேகங்களைத் தரிசனம் செய்பவர்கள் தீவினைகள் அகன்று எல்லா நலன்களையும் பெறுவர். மனதுக்குச் சாந்தியும் அளிக்கும். ஆகவே யாமும் இவற்றில் கலந்து சாந்தி பெறுவோமாக.

**திருமதி சி. அகிலேஸ்வரி**
வரணி ஆதீனம் - வரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக காலங்களில் நாம் அனுசரிக்கவேண்டிய சில ஒழுங்குகள்

நமது ஆலயங்கள் மக்களை லயப்படுத்தும் விதத்தில் அழகுடனும், பூரணப் பொலிவுடனும் விளங்குதல் இன்றியமையாததாகும். அவை இந்நிலையில் அமையும்போதுதான் மக்கள் பக்தி நெறி நிற்பதற்கும், சிவ சிந்தையுடன் நின்றொழுகுவதற்கும் வாய்ப்பேற்படும். இத்தகைய நிலைக்கு ஆலயங்களை உட்படுத்தும் நிகழ்வுகளில் மஹா கும்பாபிஷேகம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது எனலாம்.

திருப்பணி வேலைகளுக்கென பாலஸ் தாபனம் செய்யப்பட்ட ஓர் ஆலயத்திலே திருப்பணி வேலைகள் பூரணமான முறையில் நிறைவு பெற்ற பின்னரே கும்பாபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். திருக்கோயில் புனருத்தாரணப் பணிக்கு நிதி கொடுத்தல் ஒரு சிவப்பணியாகும். இது நிரந்தர சிவ புண்ணியத்தைத் தேடித் தரும். வாழ்க்கையில் ஈட்டிய செல்வத்தின் ஒரு பகுதியை இதற்கெனச் செலவு செய்தல் ஒவ்வோர் இந்துவினது கடமையாகும். ஆலயத் திருப்பணிக்காகக் கொடுத்த நிதியுதவிக்காக ஆலய நிர்வாகத்தில் தலையிடுதலும், தமது கோரிக்கைகளை முன்வைத்து, ஆலய நிர்வாகத்தினரை நெருக்கடிக்குள்ளாக்குவதும் சில இடங்களில் நடக்கத்தான் செய்கின்றன. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டியதொன்று. நமது செல்வத்தை ஆண்டவனின் சொத்தெனக் கருதி அதன் ஒரு பகுதியை ஆண்டவனுக்கு மனமார அர்ப்பணிக்கும்போது வேறு சிந்தனை வராது. ஒருவர் ஒரு பொருளை ஆலயத்திற்குக் கொடுக்கும்போது அப்பொருளைக் கொடுத்த மாத்திரத்திலேயே அது ஆலயத்துள் உறையும் ஆண்டவன் சொத்தாகின்றது. இத்தகைய உணர்வுகளோடு செயற்படும்போது தான் ஆலயங்கள் இறை சிந்தனை மிளிரும் இடங்களாக எழுச்சிபெறுகின்றன எனலாம்.

தற்காலத்தில் ஆலயங்கள் பல்கிப் பெருகிக்கொண்டு வருகின்ற நிலைக்கேற்ப அவற்றைப் பேணிப்பாதுகாப்தற்குரிய ஒழுங்குகள் உரியபடி மேற்கொள்ளப்படாமற் போவது எமது சமயத்தின் எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் நல்லதல்ல. எத்தனையோ ஆலயங்களில், அவை சிறிய நிலையில் இருப்பினும் கும்பாபிஷேகங்கள் விமர்சையாக, அதிக பொருட்செலவில் நடைபெறுகின்றன. ஆனால் கும்பாபிஷேகத்தின் பின்னர் அவை சரிவரக் கவனிக்கப்படாத நிலையிலேதான் உள. மஹாகும்பாபிஷேக காலத்தில் காட்டப்படுகின்ற உற்சாகம் பின்னர் காட்டப்படுவதில்லை. எனவே கும்பாபிஷேகத்தினால் ஏற்பட்ட பூரணத்துவத்தைத் தொடர்ந்து பேணுவதில் அனைவரும் அக்கறை கொள்ளுதல் அவசியமாகும்.

நித்திய, நைமித்தியக் கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிறைவு செய்வதும் மஹாகும்பாபிஷேகமாகும். இக்கிரியை மட்டுமன்றி ஆலயத்தில் நடக்கும் எக்கிரியையும் ஊர்மக்களது சுகத்திற்கும், நல்வாழ்விற்கும், வளத்திற்குமாகவே நடைபெறுகின்றன என்பதை இக்கிரியை முறைகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த உண்மையை நாம் மறத்தலாகாது. ஆதலால் ஆலயத்தில் வழிபடுவோர் அதன் வளர்ச்சியில் அக்கறையுடையோராய் இருத்தல் மிகமிக அவசியமாகும்.

மஹா கும்பாபிஷேகத்தின்போது தெய்வத்திற்கு அடுத்த நிலையில் சிறப்பிடம் பெறுபவர் சிவாச்சாரியர் ஆவர். ஆச்சாரியாரது கிரியா விசேடத்தினால் மக்கள் உள்ளத்தில் பக்தி பெருக வழிபிறக்கின்றது. ஆச்சாரியரது ஒழுக்கம், பக்தி, தெய்வ நம்பிக்கை, அலமதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானம், பொறுமை, கோபமின்மை, பிறருடன் பழகுதல் போன்ற நற்குணங்கள் இவர்களது தகைமையை மேலோங்கச் செய்கின்றன. இவர்கள் காலத்தின் பெறுமதியினை உணர்ந்து கிரியைகளை உரிய காலத்தில் நிகழ்த்தும் திறமை பெற்றிருத்தல் அவசியமாகும். நேர ஒழுங்கில் நடைபெறும் கிரியைகள் தெய்வ சாந்நித்தியத்தை மேலும் பொலியச் செய்யத் துணை புரியும்.

திருக்கோயில்களின் வளர்ச்சியில் பரிபாலன சபையின் பங்கும் மிகமிக முக்கியமானதாகும். திருக்கோயிலை வழிநடத்துவோராக அறங்காவலரோ அன்றிப் பரிபாலன சபையினரோ இருந்தாலும் கூட, அத் திருக்கோயிலின் வளர்ச்சியினால் முழுக்கிராமமும் நன்னிலை எய்துகின்றது என்பதனை நாம் மறக்கலாகாது. அறங்காவல் நற்பணி முழுக்கிராம வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் வலியுறுத்தல் அவசியமன்று. இந்தக் கருத்தினைப் புரிந்துகொண்டு மக்கள் திருக்கோயில் நித்திய நைமித்திய கிரியைகளில் கலக்கும்போதுதான் திருக்கோயில் அருள் சுரக்கும் இடமாகின்றது.

இன்று மஹா கும்பாபிஷேகம் காணும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகராலயம் சகல நிலைகளிலும் பூரணப் பொலிவு பெற்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறும் ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. பல இலட்ச ரூபா செலவில் திருப்பணிகள் நிறைவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. நேர ஒழுங்குகளைக் கடைப்பிடித்து ஒழுகும் ஆலயங்களில் இதுவுமொன்றாகும். இத்தகைய நிலை பிற ஆலயங்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும். மஹாகும்பாபிஷேகம் விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் பெருவிழா. இவ்விழாவினைக் கண்டு களிக்கும்பேறு இவ்வூர் மக்களுக்குக் கிடைத்த ஓர் பாக்கியம் என்றே கூறவேண்டும். இவ்விழா சிறப்புடன் நடைபெறுவதற்கு முதலில் கிடைத்தது விநாயகர் கடாக்ஷமாகும். இக்கடாக்ஷத்தின் பங்காளிகளாக சிவாச்சாரியார்கள், பரிபாலன சபையினர், ஊர்மக்கள் விளங்குகின்றனர் எனலாம். இங்கு நடைபெறும் கைங்கரியங்களில் பங்காளி களாக நின்று திருவருளை அள்ளிப் பருகும் பாக்கியசாலிகளாக இவ்வூர் மக்கள் விளங்க வேண்டுமென்றும் அனைவருக்கும சர்வ வல்லவரான விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம். கும்பாபிஷேக நற்பலன் அனைவரையும் சென்ற டைவதாகுக.

“உலகின்கண் செல்லுகின்ற எனது இயல்பு அனைத்தையும்
இறைவா உன்னிடம் திருப்பிவிடக் கற்றுக்கொள்வேனாக”

**திருமந்திரம்**

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டில் செய்வனவும் செய்யத்தகாதனவும்

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்றார் ஔவைப்பிராட்டியார். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்பதும் ஒரு முதுமொழி. இவ்விரண்டு கூற்றுக்களும் ஆலயத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்துகின்றன. மேலும் அப்பர் அடிகள் ''திருக்கோயில் இல்லாத திருவிலூரும், திருவெண்ணீறணியாத திருவிலூரும் இவையெல்லாம் அடவிகாடே'' என்றார். ஒருக்காலும் திருக்கோவில் சூழாதவரையும் அப்பர் கண்டிருக்கிறார். ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடம் என்று கூறப்பட்டுள்ளது. எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் ஆலயத்தில் அடியார்களுக்கு அருள் செய்வதன் பொருட்டு எழுந்தருளியுள்ளார். பசுவின் உடலில் செறிந்துள்ள இரத்தமே பாலானாலும் அதன் மடியில் இருந்துதான் பெறுகின்றோம்.

ஆகமரீதியில் ஆலயம்அமைக்கப்படுகின்றது. மனித உடம்பினையொட்டியே ஆலயம் அமைக்கப்படுகிறது. இத்தகைய ஆலயத்தில் அடியார்களாகிய நாம் எங்ஙனம் வழிபடல் வேண்டுமென்பதை பல நூல்கள் எடுத்தியம்புகின்றன. முக்கிய வழிபாட்டு முறைகளை நோக்குவோம்.

சைவர்களாகிய நாம் காலையில் எழுந்து நீராடிய பின்னர் தோய்த்துலர்ந்த ஆடையுடுத்தி கோயிலுக்குச் செல்லுதல் முறையாகும். போகும்போது வெறுங்கையுடன் செல்லாது மலர்கள், கற்பூரம், தேங்காய் போன்றனவற்றை எடுத்துச் செல்லுதல் வேண்டும். ஆலயத் திருக்குளத்தில் எமது கால்களைச் சுத்தம் செய்தபின் கோபுரத்தை வணங்கிவிட்டு உட்செல்லுகிறோம். முதலில் விநாயகரை மும்முறை குட்டி வணங்கிய பின்னர், மூலஸ்தான மூர்த்தியைக் கும்பிடல் வேண்டும். ஆலயத்தில் மூலஸ்தான மூர்த்திக்குத் திரை போட்டிருந்தால்நாம் ஆலயத்தைவலம்வருதல் தவறாகும். மேலும் அபிஷேகமோ அன்றி தீபாராதனைநடைபெற்றிருக்கும்வேளையிலும் நாம் வலம் வருதல் தவறாகும். அப்போது நாம் நடைபெறும் அபிஷேகத்தையோ அன்றி தீபாராதனையையோ பார்த்தோமானால் எமது மனமானது தாவித்திரியாது அடங்கும்.

கர்ப்பக்கிருகத்தில் (மூலஸ்தானம்) திரை போடாதிருந்தால் நாம் நாம் வலம் வந்து பரிவார மூர்த்திகளை வணங்கலாம். வலம் வருதல் மூன்று முறை, ஐந்து முறை என்று எண்ணிக்கையில் செய்த பின்னர் பிரதான வாசலில் அட்டாங்க வணக்கமோ பஞ்சாங்க வணக்கமோ செய்யலாம். இவற்றைச் செய்யும்போது நாம் கால்களை கிழக்குப் புறத்தேயும் வடக்குப் புறத்தேயும் நீட்டாதிருத்தல் உத்தமம். கிழக்கே பிரதான வாயில் உள்ள ஆலயங்களில் இம்முறைகளைக் கடைப்பிடித்தல் சிரமமன்று. ஆனாலும் வடக்கிலும் தெற்கிலும் பிரதான வாயில்கள் உள்ள ஆலயங்களில் நாம் சிந்தித்து அவதானமாக அட்டாங்க வணக்கத்தையோ, பஞ்சாங்க வணக்கத்தையோ செய்ய வேண்டும்.

ஆலயத்தில் திரை நீக்கப்பட்ட பின்னர் அடுக்குத் தீபம் காட்டப்படுகின்றது. மங்கள வாத்தியங்கள் ஒலிக்கின்றன. இன்னும் சங்கு, சேமக்கலம், மணி இவற்றின் ஓசைகள் எமக்கு மனோரம்மியத்தைத் தருகின்றன. அடுக்குத் தீபத்தின் பின்னர் ஒற்றைத் தீபம் காட்டப்படுகின்றது. இதன் அர்த்தம் யாதெனில் கடவுள் பலவாறாகக் காட்சி தந்தாலும் அவர் ஒருவரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாராதனைகள் முடிந்த பின்னர் அர்ச்சகர் மலரால் இறைவனை வழிபடுகின்றார். அப்போது நாமும் மௌனமாக நின்று வணங்குதல் வேண்டும். சோடச உபசாரங்கள் இறைவனுக்கு நடத்தப்படுகின்றன. பின்னர் பஞ்சாலாத்தி காட்டப்பட்டவுடன் நிசப்தம் நிலவுகிறது. அர்ச்சகர் வேதபாராயணம் செய்த பின்னர் பஞ்சபுராணம் பண்ணுடன் ஓதப்படுகின்றது. தேவாரப் பாடல்கள் பண்ணுடன் பாடப்படவேண்டியது நியதி. அவை கிரமமாக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற முறையில் பாடப்படுகின்றன. முருகன் ஆலயத்தில் திருப்புகழும், அம்மன் ஆலயத்தில் அபிராமி அந்தாதியும் பாடப்படலாம். இப்பாடல்கள் பாடப்படும்பொழுது வழிபடுவோராகிய நாம் சத்தம் செய்யாது பிறரையும் (இயன்றளவு) சத்தம் செய்யாது தடுத்தும் அப்பாடல்களைச் செவிமடுத்தல் வேண்டும். காரணம் யாதெனில் தேவாரங்கள் வேதசாரமானவை. அவை அருட்பாடல்கள் திருஞானசம்பந்தப் பெருமான், அப்பர் அடிகள், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் எமது சமய குரவராவர். அவர்கள் ஆலயங்கள் தோறும் சென்று தீந்தமிழில் பாடியன அமிர்தம் போன்றவை. எமது சமயத்திற்கும் மக்களுக்கும் பல இன்னல்கள் வந்துற்றபோதும் இந்து சமய குரவர்களே எமது சமயத்தினைக் காப்பாற்றியவர்கள் என்பதை நாம் மனதிற்கொள்ளல் வேண்டும். பெரிய புராணத்தில் நாயன்மார் வரலாறுகளைப் படித்தால், அவர்கள் எவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும் மனதைத் தளரவிடாது உறுதியாக இருந்து அவற்றையெல்லாம் தாங்கினார்கள் என்று அறியலாம். அவர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் தாமரை இலை நீர் போல உலகப் பற்றின்றி வாழ்ந்தனர். ஆகவே, சைவர்களாகிய எமக்குப் பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணம் வழிகாட்டு நூலாக அமைகிறது. அதில் ஆலய வழிபாடு பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்தை வலம் வந்த பின்னர் விபூதிப் பிரசாதம் பெற்று ஓரிடத்தில் வடக்கு முகமாக இருந்து சில நிமிடங்களாவது தியானம் செய்தல் வேண்டும். சிவ தீட்சை பெற்றவர்கள் பஞ்சாட்சர ஜெபம் செய்யலாம். ஆலயத்தின் அமைதியைப் பேணுதல் முக்கியமானது.

ஆலயத்தில் விசேட அபிஷேகம், திருவிழாக் களை நாம் செய்விக்கும்பொழுது தருப்பை அணிகிறோம். ஆண்கள் வலது கையிலுள்ள ஞான விரலிலும், பெண்கள் இடக்கை விரலிலும் தருப்பை அணிவதே முறையாகும்.

நாம் சண்டேசுவரரை வணங்கும்போது மூன்றுமுறை கைதட்டி வணங்கிய பின்னர் சென்ற வழியே திரும்ப வேண்டும். அவரை வலம் வருதல் தவறாகும்.

அட்டாங்க வணக்கமோ, பஞ்சாங்க வணக்கமோ கொடிமரத்திற்கும், பிரதான வாசலுக்கும் இடையில் செய்யப்பட வேண்டியது. மகா மண்டபத்துள் இவை செய்யப்படக்கூடாது.

சரியைத் தொண்டினை சிறப்பித்துக் கூறும் அப்பரடிகள் மேல்வருமாறு எம்மை நெறிப்படுத்துகின்றார்.

நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புணர்ந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டு கூத்துமாடி
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடைஎம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே

மேலும் அவர் திருவங்க மலையில் உடம்பின் உறுப்புக்களை விழித்துக்கூறுமிடத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களாற் பயனென் - கறைக்

கண்டனுறை கோயில்

கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்

கால்களாற் பயனென்

ஆகவே, அப்பரடிகள் கூறியவாங்கு நாம் ஒழுகினோமானால் எமக்கு மனநிம்மதி, தொண்டு செய்வதனால் சந்தோசம், இறைவணக்கத்தினால் உளத்தூய்மை, இறைவன் எமக்கு அருளியஇவ்வுடம்பினாலே அவருக்கே அன்புடன் சேவை செய்வதனால் இவ்வுடம்பினை அர்ப்பணிக்கும் பெரும்பேறு. மேலும் இறைவனுடன் நாம் இருக்கின்றோம் என்ற எண்ணத்தால் எம்மை அணுகுகின்ற பாவம் பழியினின்றும் விலக்கப்படுகின்றோம்.

(இக்காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடியனவற்றையே நாம் இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

**மானியூர் சி. குமாரசாமி,**
இளைப்பாறிய ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் உறைவிடங்கள்

இறைவனை மனத் தூய்மையுடன் அமைதியாகத் தியானித்து வழிபடும் இடங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. இவை தேவகிருகம் தேவாகாரம், பிரசகிதம், தேவாலயம், தேவாயதனம், தேவ மந்திரம், தேவகுலம், தேவபவனம், தேவஸ்தானம், தேவமேஸ்வம், சைத்திரியம், ஷேத்திரம், அர்ச்சாக்கிரகம், ஸ்தலம் எனப் பலவாறாக அழைக்கப்படுகின்றன.

பழம்பெருமை வாய்ந்த கோயில்கள் இயற்கை அழகு ததும்பிய இடங்களிலேயே அமையப்பெற்றிருந்தன. மக்கள் முதன் முதலில் ஆற்றங்கரையிலும், வண்ணமரச் சோலைகளிலும் மற்றும் குன்றின் உச்சிகளிலும் தெய்வ உருவங்களைச் சமைந்து வழிபட்டு வந்தனர். பின்னர் காலப்போக்கில் இது வளர்ச்சி பெற்று கட்டடங்களாகவும், முறையான கோயில்களாகவும் அமையப்பெற்றன.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு' என்பது தத்துவஞானி ஒருவருடைய வாக்கு. பிண்டம் என்பது எமது உடல். அண்டம் என்பது எங்கும் வியாபித்துள்ள பரந்த வெளியாகும். பரந்த வெளியிலே குடிகொள்வதாகக் கருதப்படும் இறைவன் எமது உடலிலும் குடியிருக்கிறான் எனவும், மனிதனுடைய உடலமைப்பு முறையிலேயே ஆகம முறைப்படி கோயில்கள் எழுப்பப்பட்டன எனவும் கருதப்பட்டன. ஆகவே கோயில் என்பது மனித உடலின் புறச்சின்னம் என்று கூறினால் அது மிகையாகாது. எனவே உடலின் தத்துவங்களிற்கேற்ப, புறச்சின்னமாகிய கோயிலை அமைக்க வேண்டும் எனப் பல்வேறு ஆகம நூல்கள் இயம்புகின்றன.

கோயிலைச் சுற்றி சுற்றுமதிலமைத்து நாற்திக்கிலும் பெரிய வாயில்கள் வைத்து, அதன் மேல் கோபுரங்கள் கட்டி அதனைத் தூலலிங்கம் எனப் பெயரிட்டு வழிபடுவர்.



கோபுரமானது அரச கோபுரம் என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடப்படும். இந்த அரச கோபுரத்திலே பல்வேறு உருவங்கள் அமைக்கப்படும். இவற்றில் பல ஆசாபாசங்களை வெளிப்படுத்துபவையாகவும், மற்றும் சில இவற்றை விலக்குபவையாகவும் தத்துவப் பொருள் கொண்டவை. அன்றாட உலகியல் காட்சிகளை தத்ரூபமாக இவை துலாம்பரப்படுத்துபவையாக அமையும். வாயில்கள் மேல் கோபுர அடுக்கு ஓங்கி ஒற்றைப் படையாக ஒன்றின்மேல் மற்றொன்று நின்ற ரீதியில் அமைவுற்றிருக்கும்.

மூன்று அடுக்குகளைக் கொண்டவை நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று அவத்தை நிலைகளைக் குறிக்கும். இது ஐந்தாக அமைந்தால் ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றைக் குறிக்கும். கோபுர அடுக்கு ஏழாகவிருந்தால் பஞ்சேந்திரியங்களுடன் மனம், புத்தி ஆகியவற்றைக் குறிக்கும் என்பர். கோபுர அடுக்குகள் எத்தனை அமைந்திருந்தாலும் கீழ்மட்டக் கோபுர வாயில் வழியாகவே கோயிலுக்குள் புக முடியும். இது போலவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒருநிலைப்பட்டால் மட்டுமே கடவுள் மீது நாட்டம் ஏற்பட்டுப் பேரானந்தப் பெரு வாழ்வுக்கு வழிகோலும்.

கோபுர வாசல் வழியாக உட்புகுந்தால் முதலில் தெரிவது கொடிக்கம்பமும் பலி பீடமும் ஆகும். பலிபீடத்தின் அண்மையில் சென்று நிலத்தில் விழுந்து வணங்கும்போது எங்கள் மனதிலே உள்ள கீழான எளிய இயல்புகள் யாவற்றையும் பலிகொடுத்து உயர்ந்த எண்ணங்களுடனும், நம்பிக்கையுடனும் எழுந்திருக்கின்றோம். பலிபீடத்தோடு உள்முகமாக ஒட்டியிருப்பது கர்ப்பக் கிரகத்துள் இருந்து அருள்பாலிக்கும் தெய்வ மூர்த்திக்குரியவாகனமாகும். இது ஆன்மாவைக் குறிக்கும். அதனோடு ஒட்டியிருப்பது கர்ப்பக்கிரகத்துள் இருந்து அருள்பாலிக்கும் தெய்வமூர்த்திக்குரிய வாகனமாகும். இது ஆன்மாவைக் குறிக்கும். அதனோடு ஒட்டியிருப்பது துவஜஸ்தம்பமாகும். இதன் முகப்புக்கள் உள்நோக்கி அமைந்திருக்கும். ஆன்மா உள்முகமாக இறைவன்பால் நோக்கியவாறு இருக்கும். இறைவனை அடைவதே ஆன்மாவின் இறுதியான குறிக்கோள் என்பதை இது காட்டுகிறது. இறைவனின் ஊர்த்தியாகிய வாகனம் இறைவனையே எப்போதும் நோக்கியவாறு அமைந்திருப்பது மனித மனம் கடவுளை அடைவதே நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகிறது. வாகனத்துக்கும் மூலவருக்கும் இடையில் பக்தர்கள் செல்லலாகாது என்பது இத்தத்துவ பந்தத்துக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்பதை அறிவுறுத்துவதற்காகவேயாம். ஆகம விதிப்படி காற்றும வெளிச்சமும் அதிகம் பரவாத இடமாகக் கருவறை அமைந்து திரைச் சீலையினால் மூல மூர்த்தி மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பக்தன் இறைவனைக் காணக் குறிப்பிட்ட பூசை நேரம் வரும்வரை காத்திருக்கிறான். மணியோசையுடன் தீப ஒளி ஏற்றப்பட்டு திரை விலக்கப்படுகிறது. தீபாராதனையாலும், கர்ப்பூர ஆராத்தியினாலும் ஒளியுண்டாகி மூலவர் பக்தனுக்குக் காட்சியளிக்கின்றான். மனித மனமே கற்பூரமாகிறது. பூசையானது ஞானக் காட்சியின் புறத்தோற்றம் எனலாம். மனதை உள்முகமாக்கும் ஆன்மீகச் சாதகன் முதலில் இருளையே தன்னுள் அனுபவித்துக் காண்கிறான். பின் சாதனா சக்தியினால் ஞான ஒளி பெற்று பிறவாயாக்கைப் பெரியோனுடன் ஒன்றிவிடுகிறான்.

கோயிலிலே மூர்த்திகளுக்குப் பல்வேறு நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகள் நடைபெறும். இங்கு பூஜை, புனஸ்காரங்களும், அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நைவேத்திய புஷ்பாஞ்சலிகளும், தோத்திர பாராயணங்களும், திருவுலா வைபவங்களும் பொதுப்படையாக நடைபெறுவது, ஆன்மசாதகன் புரிபவன் அல்லது அன்றைய கால கட்ட மக்கள் சமுதாயம் பெற்றுள்ள ஆன்மீக மனப்பக்குவத்தின் புறச்செயல்களின் பிரதிபலிப்பாகும்.

வழிபாடு செய்பவன் அகமும், புறமும் தூயமனத்துடையவனாக ஒழுகவேண்டும். இவ்வாறான ஆராதனைகளியால் மனம் தெளிவடைவதே அடிப்படை நோக்கமாகும். இறைவனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்கள் ஆன்ம சாதகனுடைய அந்தக் காரணங்களைத் தூய்மையடையச் செய்யும். அத்தோடு பிரசாதத்தை எல்லோரும் சமமாகப் பங்கிட்டு உண்பதால் உயர்வு, தாழ்வு அற்று ஆண்டவன் முன் அனைவரும் சமத்துவமானவர்கள் என்ற கோட்பாடு ஏற்பட வழி ஏற்படும்.

ஆலயங்களில் இடம்பெறும் கிரியைகள் அனைத்தும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாகத் தீபாராதனையின்போது மூலவருக்கு முன் உள்ள திரை அகற்றப்பட்டு மங்கள ஜோதியில் இறைவன் திருவுரு புலப்படுகிறது. தீபாராதனையின்போது முதலில் பல தீபங்களைக் கொண்ட அடுக்குத் தீபம் ஒன்று வலமாக ஆராதனை செய்யப்பட்டு, பின் தொடர்ச்சியாகக் குறைந்த எண்ணிக்கையிலான தீபங்களைக் கொண்ட விளக்குகளினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனை நடத்தப்பட்டு இறுதியாக ஒரு சுடரைக் கொண்ட ஒற்றை ஒளித்தீபம் காட்டப்படுவதன் உட்கருத்து ஒன்றாய் உள்ள பரம்பொருளே எண்ணற்ற ஆன்மாக்களாக உள்ளன என்பதாகும். கோயிற் கிரியைகளில் ஐம்பொறிகள் புலன்களை ஈர்க்கின்றன. உதாரணமாக ஒளியில் கிரியைகளைக் கண்ணால் பார்க்கிறோம். மணியோசை, சங்கநாதம், மங்கள நாதஸ்வர மேள ஓசை, வேதகோஷ பிரார்த்தனை நாம சங்கீர்த்தனம் போன்றவற்றைக் காதுகளால் கேட்கின்றோம். நறுமண மலர்களால் தசாங்க தூபம் முதலியன நாசியால் நுகரப்படுகின்றது. பிரசாதம் நாவால் சுவைக்கப்படுகிறது. மெய்யினால் துதிக்கிறோம்.

இந்தியாவின் வடபகுதிகளிலே மொகஞ்ஞுதாரோ, ஹரப்பா போன்ற இடங்களிலே கி.மு 2, 500 ஆண்டுகளிலிருந்த நகரங்களையும் கட்டடங்களையும், பற்றிய விபரங்களைத் தற்போது நடைபெற்று வரும் புதைபொருள் ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. சிந்து நதி நாகரிகத்திற்குப் பின்னர் கி.மு 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்ட மக்கள் வாழ்க்கை முறைகளை நூல்கள் வாயிலாக அறியலாம். அசோகர் காலத்திலும் அதற்குப் பின்னரும் கற்கள் போன்றவற்றிலான நிலையான கட்டடங்கள் இருந்தனவென்பதற்கான ஆதாரங்களாகச் சிதைபாடுகள் உள்ளன. குப்தர் காலத்திலிருந்து இந்து சமயக் கோவில்களின் தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கை அறிந்துகொள்வதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

இக்கால கட்டடங்களில் கோயில் கட்டும் முறை விதிப் பிரமாணங்கள் போன்றவை பற்றிய விரிவு நூல்கள் ஏட்டுப் பிரதிகளாகப் பெறக்கூடியதாக இருந்தது.

இந்துக் கோயில்களின் வளர்ச்சிப் போக்கில் முதற்படியாக நன்கு செப்பனிட்ட கருங்கற்களைக் கொண்ட சிறிய சதுரக் கோயில்கள் கட்டப்பட்டன. இவ்வகையான கோயில்களின் கர்ப்பக்கிரகமானது அதை எளிமையான சிறிய மண்டபமாகப் பெட்டி போன்ற அமைப்புடன் கருவறையின் மேல் சிகரங்களையோ விமானங்களோ இல்லாது காட்சியளித்தன. பின்னர் வளர்ச்சிப் போக்கில் சிறுசிறு சிகரங்கள் மேற்கோப் கட்டடங்களாகக் கருங்கற்களாலும் செங்கற்களாலும் அமையப் பெற்றன. இவ்வகையிலே ஆரம்ப கால நிலையைச் சுட்டிக்காட்டப் பின்வரும் கோயில்களை உதாரணங்களாகக் காட்டலாம்.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜய்கார்டின் நாச்னாகுட்டராக் கிராமத்திலுள்ள பார்வதி அம்மன் கருங்கற் கோயிலின் கருவறையின் மீது உள்ள கோஷ்டம் போன்ற இன்னொரு கட்டட ஸ்தூபி அல்ல. விமானம் போன்ற அமைப்புக்கு முன்னோடியாக அமைகிறது எனலாம். ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகோரின் புமாரா என்ற ஊரில் உள்ள செங்கற்களிலான சிவன் கோயிலின் கருவறையின் மீதுள்ள சிகரம் சீலமடைந்திருப்பதால் அதன் அமைப்பு எவ்வாறு இருந்ததென்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிஜாப்பூரில் உள்ள ஆய்வுகளேயுள்ள லட்கான் துர்க்கையம்மன் கருங்கற் கோயிலின் கருவறையின் மீது காணப்படும் சிகரம் மேலே உயர உயர குறுகிய போக்கைக் கொண்டுள்ளது. நான்கு மூலைகளிலும் ஆமலக வேலைப்பாடுகளைக் கொண்டும் நான்கு பக்கங்களின் நடுவில் சிறிய பட்டையான வெளித்தள்ளல் காணப்படுகிறது. இவ்வாறான வளர்ச்சிப் போக்கைப் பல ஆலயக் கருவறைகளில் காணக்கூடியதாகவுள்ளது.

வட இந்தியாவில் இவ்வாறான போக்கு நாகர முறைச் சிற்பக் கோயில்கள் தோன்ற வழிவகுத்தன. தட்சினைப் பாகத்தில் வேசர முறையில் அமைந்த சிற்பக் கோயில்கள் தோன்றலாயின. தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்ற கோயில் கட்டடக்கலை திராவிட முறை எனப்பட்டது.

வட இந்திய வகைக்கோயில்கள் ஒரு மேடையைப் போன்று கட்டப்பட்டு அதன்மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் யாழ்ப்பாணம்

